

கல்கி

KALKI 12-12-1971 45 காசு


ராஜாஜி 93 - சிறப்பு மலர் (ஆங்கிலம்)

இந்தியாவிலிருந்து மட்டுமின்றி அயல் நாடுகளிலிருந்தும் முக்கியஸ்தர்களும் அறிஞர்களும் ராஜாஜி அவர்களுக்கு இம் மலரில் பாராட்டுரைகள் வழங்குகிறார்கள்; அவருடன் தொடர்பு கொண்டதால் ஏற்பட்ட அநுபவங்களை நினைவுகூர்கிறார்கள்.

ராஜாஜியின் ஒப்புவமையில்லாத நீண்ட வாழ்வில் நிகழ்ந்துள்ள பல சம்பவங்கள் குறித்து ஏராளமான புகைப்படங்கள் இடம் பெற்றுள்ளன.

ஒவ்வொரு மலருடனும் ராஜாஜியின் குரல் பதிவாகியுள்ள ஒரு 45 R.P.M. ரிகார்டும் இலவசமாக வழங்கப்படுகிறது.





ரிகார்டின் ஒருபுறத்தில் ''பயபக்தி உள்ள வாழ்க்கை'' என்பது பற்றியும் மறுபுறத்தில் ''உலகம் முழுதும் ஒரு குடையின்கீழ்'' என்பது பற்றியும் ராஜாஜி ஆங்கிலத்தில் பேசுகிறார்.

உயர்தரமான முறையில் உருவான மாபெரும் மலர். கல்கி பத்திரிகையை விட இரு மடங்கு பெரிய அளவில் முந்நூறு பக்கங்களுக்கு மேல் கொண்டது இந்த மலர். இருநூறுக்கும் அதிகமான கட்டுரைகளும், வாழ்த்துரைகளும் (அனைத்தும் ஆங்கிலத்தில்) இம் மலரில் இடம் பெற்றுள்ளன. இந்த மலரின் விலை ரூ. 12.00. ரிஜிஸ்தர் தபாலில் அனுப்பச் செலவு ரூ. 1.50.

சொற்பப் பிரதிகளே அச்சாகின்றன. முன்பணம் அனுப்பிப் பதிவு செய்து கொள்கிறவர்களுக்கு வரிசைக்கிரமப்படி பிரதிகள் ஒதுக்கி வைக்கப்படுகின்றன. இந்தியாவில் உள்ளோர் ரூ. 13.50ம் அயல்நாடுகளில் வசிப்போர் கப்பல் தபாலில் மலரைப் பெற ரூ. 25ம் முன் பணம் அனுப்ப வேண்டும்.

கல்கி வாசகர்கள் ராஜாஜி 93 மலரை இலவசமாகப் பெறவும் ஒரு திட்டம் வகுத்திருக்கிறோம்.

நமது வாசகர்கள் ரூ. 46.00 அனுப்பி வைத்தால் இரண்டு ஆண்டுகளுக்குக் கல்கியும், 1972 தீபாவளி மலர்ப் பிரதியும் பெறுவதுடன் ராஜாஜி 93சிறப்பு மலரையும் அவரது குரல் பதிவாகியுள்ள ரிகார்டுடன் இலவசமாகப் பெறலாம்.

கல்கி பத்திரிகையின் நூற்றுக் கணக்கான வாசகர்களின் கோரிக்கைக்கு இணங்க, இந்த விசேஷச் சலுகைகள் பூஜ்ய ராஜாஜி தமது 93வது வயதைப் பூர்த்தி செய்யும் 1971 டிசம்பர் மாதம் இறுதிவரை கல்கி வாசகர்களுக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது.





சதாசிவம்

அமைப்பாளர், ராஜாஜி 93 சிறப்பு மலர்க் குழு,
கல்கி காரியாலயம், சேத்துப்பட்டு, சென்னை - 31


கல்கி
ராஜாஜி மலர் 1971




Fuse Switch
16A 240V AC
OFF
ON


HEROS'-BE-104 TM
மிகச்
சிறந்த
வெளிச்சத்திற்கு
பஜாஜ்
MEMBER
FAIR TRADE PRACTICES ASSOCIATION
bajaj
பஜாஜ் எலெக்ட்ரிகல்ஸ்
லிமிடெட்
45.47, வீர் நரிமான் ரோடு, பம்பாய்-1
இந்தியாவெங்கும் கிளைகள்.




"பழைமையான கரகரப்-
பான பற்பொடிகள்
உங்கள் ஈறுகளுக்கும்,
பற்களுக்கும் தீங்கு
இழைக்கக்கூடும்...!"

கால்கேட் பற்பொடி உபயோகித்து உங்கள் பற்களை யும், ஈறுகளையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்! வாய் நாற்றத்தையும் அகற்றுங்கள்!

பழைமையான கரகரப்பான பற்பொடிகள் உங்கள் ஈறுகளைச் சேதப்படுத்தி, பல் எனுமலைச் சிதைக்கக்கூடும். கால்கேட் பற்பொடி மிகவும் மென்மையானது. அது உங்கள் ஈறுகளுக்கு இதமளிக்கும் போதே, அதில் கலந்துள்ள மெருகேற்றும் பொருள் பற்களின் மீது படிந்துள்ள கறைகளைப் போக்கி, பற்களைச் சுத்தமாக வெண்மை பளிச்சிடச் செய்கிறது. கால்கேட்டின் வளமான நுரை பல் இடுக்கு களில் ஊடுருவி வாயநாற்றம் மற்றும் பற்சிதைவுக்குக் காரணமான கிருமிகளை அகற்றுகிறது. அதனால்தான் கால்கேட் பற்பொடி வாய் நாற்றத்தை உடனே நிறுத்தி, பற்சிதைவையும் எதிர்க்கிறது. அதன் குளுமையான இன்மணத்தையும் நீங்கள் பெரிதும் விரும்புவீர்கள்!

நவீன
பல் பராமரிப்பு முறைகளே **சிக்கனமாக**
இருக்கும்போது பழைமையான
பற்பொடிகளை ஏன் உபயோகிக்க வேண்டும்!

உங்கள் குடும்பத்திற்கு
எகானமி சைஸ் கால்கேட்
பற்பொடியை இன்றே வாங்குங்கள்!
ஒரு டப்பா மாதக்கணக்கில் வரும்!





TM



கல்கி

ராஜாஜி மலர்

பொருளடக்கம்

விரோதிகிருது, கார்த்திகை 26 - டிசம்பர் 12, 1971

சந்தா விவரம் :	ஒரு வருடம்	ஆறுமாதம்
இந்தியா	ரூ. 23-00	ரூ. 11-50
இதர நாடுகள்	ரூ. 50-00	ரூ. 25-00
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 23-00	ரூ. 11-50

கல்கி மலர் 31 இதழ் 20

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
-- பாரதியார்

பல்லாண்டு, பல்லாண்டு

சதாசிவம்

நேற்று நடந்தது போலிருக்கிறது: வருஷங்கள் ஒன்பது ஓடி விட்டன. ஸ்ரீ காஞ்சி காமகோடிப் பெரியவர்களைத் தரிசிக்கப் போயிருந்தேன். பெரியவர்களை வந்தனம் செய்து விடை பெறும்போது, "ராஜாஜிக்கு வயது என்ன எண்பதா?" என்று கேட்டார்கள். "எண்பத்து நாலு" என்றேன். "பாரத வருஷத்தின் முதல் குழந்தை ராஜாஜி; அவர் க்ஷேமமாக இருந்தால் தேசம் க்ஷேமமாக இருக்கும்" என்றார்கள் பெரியவர்கள்.

* * *

1969 ஜூலை மாத ஆரம்பத்தில், சென்னையில் அந்த மகத்தான சங்கரர்–ஷண்மத மகாநாடு முடிந்த சமயம்; கல்கி காரியாலயத்தில் ஒரு வார காலம் பிரவசன கர்த்தர்களின் முடிசூடா மன்னரான பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்களைக் கொண்டு விஷ்ணு சஹஸ்ரநாம பிரவசனத்துக்கு ஏற்பாடு செய்திருந்தேன். ராஜாஜி அவர்களிடம், "நம் வீட்டில் விஷ்ணு சஹஸ்ரநாம பிரவசனம் நடக்கிறது; ஸ்ரீ தீக்ஷிதரவர்கள்தான் பிரவசனம் செய்கிறார்கள் ; நீங்களும் வந்து கேட்கிறீர்களா?" என்றதும், "மந்திரங்களில் உத்கிருஷ்டமானது விஷ்ணு சஹஸ்ரநாமம் ; பிரவசன கர்த்தர்களில் உத்கிருஷ்டமானவர் ஸ்ரீ தீக்ஷிதர்; கேட்காமல் இருப்பேனா?" என்றார் ராஜாஜி. விஷ்ணு சஹஸ்ரநாம பிரவசனக் கடைசிநாளன்று ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் ராஜாஜியிடம், "நமது தேசத்துக்கு ஏதேனும் நல்லகாலம் உண்டா?" என்று கேட்டார்கள். "நிச்சயமாக நல்ல காலம் உண்டு. இப்போதும் பாரத நாட்டில் மகான்களும், ரிஷிகளும் பலர் இருக்கிறார்கள். நமது கண்களுக்குத்தான் தெரிவதில்லை" என்றார் ராஜாஜி. "எங்கள் கண்களுக்குத் தெரிகிற ரிஷி நீங்கள் ஒருவர்தான்" என்று பணிச்சென்று சொன்னார் ஸ்ரீ தீக்ஷிதர்.

* * *

பல வருஷங்களாகவே நான் எனது நண்பர்கள் பலரிடம் சொல்லி வந்திருக்கிறேன், 'மற்ற மானிடர்களைப் போல் ராஜாஜி அவர்களுக்குச் சாவு என்று ஒன்று இராது. பாரத நாட்டுக்கு மட்டுமல்ல, மனித குலத்துக்கே இன்னும் அவர் ஆற்ற வேண்டிய பணி ஒன்று பாக்கி இருக்கிறது. அதைச் செய்து முடித்த பின்தான் பழைய துணியைக் கழற்றி எறிவது போல் அவரே தமது காயத்தை விட்டு விடுவார்' என்பதாக.

ராஜாஜி அவர்கள் ஒரு விநாடிகூடச் சோம்பியிருந்து நான் கண்டதில்லை. விஷயம் இல்லாமல் பேசிக் கேட்டதில்லை. இன்றளவும் வாழ்நாளில் ஒவ்வொரு நிமிஷத்திலும் வேலை செய்து கொண்டு வருகிறார். உடலுக்கு உயிர் எப்படியோ அப்படி உயிருக்கு உழைப்பு. மரணத்தைப் பற்றி எண்ணவே நேரமில்லாமல் எப்போதும் உழைப்பவர் பூஜ்ய ராஜாஜி.

தமிழ் நாட்டு அரசாங்கத்தார் மது விலக்கை ரத்து செய்யத் தீர்மானம் செய்த சேதி அவர் மனத்தில் இடியெனப் பாய்ந்தது. உள்ளுறத் துயரால் துடித்துப் போனார். ஆழ்ந்த வேதனையில் அழுங்கிப் போனார். இந்த மனநிலையில்தான் என்னிடம் தமது மக்களுக்குத் தாம் இன்னமும் செய்ய வேண்டிய சில கடமைகள் பாக்கி இருப்பதைப் பற்றிச் சொன்னார். ஸ்ரீ ராமசந்திர மூர்த்தி அயோத்திவாசிகளின் நன்மையைப் பற்றி மட்டும் எண்ணாமல் ஸ்வஜனங்களின் நலனையும் எண்ணியதுபோல, ராஜாஜி அவர்கள் நாட்டு மக்களின் நலத்தை எண்ணுவதோடு நில்லாமல் தம்மைச் சேர்ந்தவர்களின், தம்மை அண்டினவர்களின் நலனையும் எண்ணுபவர். பெண்ணுக்குரிய மென்மை இதயத்தைப் படைத்

ராஜாஜி-93 மலர் வெளியீட்டு விழாக்கள்

பல்வேறு துறைகளைச் சேர்ந்த உள்நாட்டு, அயல் நாட்டுப் பிரமுகர்கள் இருநூறு பேர்களுக்கும் அதிகமாக **ராஜாஜி - 93** மலருக்கு விஷயதானம் செய்து இதனை ஈடு இணையற்ற ஒரு பிரசுரமாக்கித் தந்திருக்கிறார்கள். ராஜாஜியின் குரல் பதிவாகியுள்ள ரிகார்டு இம்மலரை விலைமதிப்பற்ற பொக்கிஷமாக்கி உள்ளது.

அற்புதமான இந்த மலரை ராஜாஜியின் பிறந்த நாளையொட்டி டிஸம்பர் 8ந் தேதி முதல் 12ந் தேதிக்குள் பாரத நாட்டின் வெவ்வேறு மாநிலத் தலைநகரங்களில் விழாவெடுத்து வெளியிடத் தீர்மானமாகியிருக்கிறது.

டில்லி, ஆமதாபாத், பம்பாய், போபால், புவனேசுவர், ஹைதராபாத், நாகபுரி, ஜம்மு, பவ்னார் ஆசிரமம், பங்களூர், கல்கத்தா, எர்ணாகுளம், சண்டிகர், கள்ளிக்கோட்டை, ஜெய்ப்பூர், லக்னோ, பாண்டிச்சேரி, கௌஹாட்டி, சென்னை ஆகிய நகரங்களில் மட்டுமின்றி லண்டனிலும் நியூயார்க்கிலும் கூட மலர் வெளியீட்டு விழா நடைபெறும்.

பவ்னார் ஆசிரமத்தில் பூஜ்ய விநோபாஜி சிறப்பு மலரினை டிசம்பர் 8ந் தேதி முற்பகலில் வெளியிடுகிறார். அதே நாள் மாலை புதுதில்லி ஸாப்ரு அரங்கத்தில் லோகசபை சபாநாயகர் ஸ்ரீ டில்லோன் வெளியிடுகிறார். பம்பாயில் பத்தாம் தேதி மாலை, பாரதப் பிரதம நீதிபதியாக விளங்கித் தற்போது ஓய்வுபெற்றுள்ள ஸ்ரீ ஹிதயதுல்லா மலரை வெளியிடுகிறார். ராஜாஜி மேற்கு வங்க கவர்னராகப் பதவி வகித்தபோது அங்கு முதல் மந்திரியாக விளங்கிய டாக்டர் ப்ரபுல்ல சந்திர கோஷ் கல்கத்தாவில் மலரை வெளியிடுகிறார்.

டிசம்பர் 11ந் தேதி சனிக்கிழமையன்று சென்னை ஆட்ஸ்பரி மண்டபத்தில் நடைபெறும் விழாவில் ராஜாஜி-93 சிறப்பு மலரை ஸ்ரீ என். ஏ. பால்கிவாலா வெளியிடுகிறார்.

ராஜாஜி — 93 சிறப்பு மலர் குழுவினர் இம்மலரினைப் பொதுமக்களுக்கு வழங்குவதுடன் ராஜாஜிக்கும் காணிக்கையாக்கி, 125 ஆண்டுகள் வாழ வேண்டும் என்ற மகாத்மா காந்தியின் விருப்பத்தை அவர் பூர்த்தி செய்ய வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றனர்.

[இந்த இதழ் அச்சாகிக்கொண்டிருக்கும் தருவாயில் இந்தியா - பாகிஸ்தான் போர் செய்திகள் வந்துள்ளன. இதையொட்டி ராஜாஜி 93 மலர் வெளியீட்டு விழாக்களை, பவ்னார் ஆசிரமம் நீங்கலாக, சென்னை உள்பட எல்லா இடங்களிலும் ரத்து செய்துவிட்டோம்.]

ராஜாஜியின் கருத்துக்கள்

யுத்தம் மூண்டது

வங்க தேசப் புரட்சி தோன்றியதுமே நான் ஸ்வராஜ்யாவில் காஷ்மீரின் எதிர்காலம் பற்றி வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று ஸ்ரீமதி இந்திரா காந்திக்கு அறிவுரை வழங்கி எழுதினேன். அந்த வாக்கெடுப்பு நடத்த விதம் பற்றி யாரும் குறைப்பட்டுக் கொள்ளாதிருக்க அதனை வல்லரசுகள் மேற்பார்வையில் நடத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தேன். இந்த என் யோசனை பின்பற்றப்பட்டிருந்தால் பாகிஸ்தான் இப்போது செய்துள்ள காரியத்தை அதனால் செய்ய முடியாமலேயே போயிருக்கும். வங்கதேசப் புரட்சியை அடக்குவதே பாகிஸ்தானின் முக்கிய நோக்கம். வங்க தேச எல்லையிலிருந்து நமது அரசாங்கத்தின் நடவடிக்கைகளையும் கவனத்தையும் திருப்பிவிட காஷ்மீரை அது பல முனைகளில் இப்போது தாக்கி யிருக்கிறது. நான் கூறிய யோசனைப்படி வாக்கெடுப்பு ஆரம்பமாகி நடந்திருந்தால் காஷ்மீர் மீது பாகிஸ்தான் இப்போது போர் தொடுத்திருக்க முடியாது. அதைவிட முக்கியமான விஷயம் என்னவென்றால் பாகிஸ்தான் இந்தியா மீது சுமத்திவரும் ஒரு குற்றச்சாட்டுக்கு ஆதாரமே இல்லாமல் போயிருக்கும். இந்திய அரசாங்கத்தில் உள்ள இந்திரா காந்தியின் ஆலோசகர்களுக்கு என் யோசனையை ஆராய மனமோ நேரமோ இல்லை என்பதைக் காண நான் விசனிக்கிறேன். அவர்கள் என் யோசனையில் கருத்துச் செலுத்திப் புத்திசாலித் தனமாக நடந்து கொண்டிருந்தால் சமாதானத்துக்கும் அமைதிக்கும் நற்பணியாற்றி யிருக்கலாம். யுத்தம் வந்தால் நாம் எதிர்முகம் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று மார்தட்டிக் கொண்டால் மட்டும் போதாது. யாஹியாகான் தமது ரம்ஜான் அறிக்கையில் நட்புணர்ச்சி கொண்டு பேசியபோது அவர் மனப்பூர்வமாகப் பேசுகிறாரா என்று இந்திய அரசு சந்தேகப்பட்டதானது மற்றொரு அறிவற்ற காரியமாகும். நிலைமையைச் சேறுக் கலக்கியாகிவிட்டது என்பதில் சந்தேகமேயில்லை. இதற்காக நான் மிகவும் விசனிக்கிறேன். செய்ய வேண்டியதைச் செய்யாமலும் இருந்து செய்வதைத் தவறாகவும் செய்துவிட்டால் அதைப் பின்னால் சரிக்கட்டுவது என்பது ரொம்பக் கஷ்டமான விஷயமாகிவிடுகிறது. இப்போது மேற்கொள்ளக்கூடிய காரியம் ஒன்றேதான். அகம்பாவத்தை மறந்து விட்டு, கட்சிப் பற்று இல்லாத ஒரு மந்திரி சபையை ஸ்ரீமதி இந்திரா காந்தி

வரவேற்கிறோம், பாராட்டுகிறோம்!



சென்னை நகருக்குப் புதுமேயராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள ஸ்ரீமதி காமாட்சி ஜயராமன் அவர்களை மனமார வரவேற்கிறோம். தி. மு. கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் சென்னை நகரின் இரண்டாவது பெண் மேயர். நகர சபை பரிபாலன விஷயத்தில் எல்லாருக்கும் பொதுவில் நின்று மக்களுக்கு நல்ல சேவை செய்வார் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு என். வி. என். சோமசுந்தரம் அவர்கள் உதவி மேயராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். அவருக்கும் நமது மனமுவந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். சென்னை நகர மக்கள், இவர்கள் பதவி காலத்தில் ஒரு சில குறைகளாகிலும் நீங்கப் பெற்றால் பெரிதும் நன்றி உடையவர்களாக இருப்பார்கள்.



நாயகத்தைக் காப்பதற்காகச் செய்ய வேண்டியது யாதெனில், ஸ்தாபன காங்கிரஸானது தனது அறிவுப் பக்குவத்துக்கும் மூல நோக்கத்துக்கும் இசைவாகச் சாஸனத்தைக் காக்கும் பணியை ஏற்று, இந்திரா காங்கிரஸை எதிர்க்க வேண்டும். இந்திரா காங்கிரஸ் மக்களின் ஜீவாதார உரிமைகளைத் தகர்க்கும் கொள்கையைக் கடைப்பிடிக்கும்போது ஸ்தாபன காங்கிரஸ் சாஸனத்தின் காவலனாகத் தன் கொள்கையை வகுத்துக் கொள்வதே பொருத்தம். அறியா மக்களிடம் தலைமை கொண்டாட வேண்டும் என்பதற்காக ஒரே கொள்கையை உடையவர்கள் இரண்டாகப் பிரிந்து போட்டி போடுவது கேலிக்கு இடமாகும்.

கவனத்துக்குரிய குற்றச்சாட்டு!

“அரிசிக் கள்ளக் கடத்தலின் லாபங்கள் இந்திரா கட்சித் தேர்தல் நிதிக்குப் பாய்கின்றன” என்று தலைப்பிட்டு “மார்ச் ஆவ் தி நேஷன்” பத்திரிகையில் போபால் நிருபர் சில புள்ளி விவரங்கள் தந்திருக்கிறார். மத்தியப் பிரதேசத்திலிருந்து அரிசியை வெளி ராஜ்யங்களுக்கு அனுப்பக் கூடாது என்பதால் “நோய்” என்ற மாறு வேஷத்தில் கள்ளக் கடத்தல் செய்யப்படுவதாகவும், இந்த லாபத்தை மத்தியப் பிரதேச அரிசி ஆலைச் சங்கமும் இந்திரா காங்கிரஸும் பகிர்ந்து கொள்வதாகவும் இத்தகவலிலிருந்து தெரிகிறது. இவ்விதம் பிரதி மாதமும் 50,000 ரூபாய் இந்திரா காங்கிரஸின் தேர்தல் நிதிக்கு ஒதுக்கப்படுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. இது ஒரு பயங்கரமான குற்றச்சாட்டு. இதில் கவனம் செலுத்தி விசாரணைக்கு விட வேண்டியது அவசியம்.

மன்னிக்கவும்!

என்னுடைய இப்போதைய உடல் நிலை காரணமாக எனக்கு வருகிற ஏராளமான அன்புக் கடிதங்களுக்கு என்னால் பதில் எழுத இயலவில்லை. ‘பதில்’ என்றில்லாவிடினும், ‘கடிதம் கிடைத்தது’ என்றுகூட எழுத இயலாத குற்றத்தைச் செய்கிற நிலைக்கு என் தேகநிலை என்னை நிர்ப்பந்தப்படுத்துகிறது. அதற்கு இங்கு இந்த ஓரிரு அற்ப வார்த்தைகளில் மன்னிப்புக் கோருகிறேன். இதை என் அன்பர்களும், என் நலத்தை விரும்புகிறவர்களும் ஏற்றுக் கொள்வார்கள் என நம்புகிறேன். பார்வைக் குறைவு காரணமாகப் படிப்பதை மிகவும் குறைக்க வேண்டியுள்ளது. மிகவும் அத்தியாவசியமான விஷயங்களில் மட்டுமே கவனம் செலுத்துகிறேன். இளைஞர்களின் உதவி கொண்டு, வெகு அவசியமான விஷயங்களைப் படிக்கச் சொல்லிக் கேட்கிறேன். அவர்களே ‘ஸ்வராஜ்யா’ வுக்காக நான் சொல்வதை எழுதிக் கொள்கிறார்கள்.

தவர் அவர் என்பது பலருக்குத் தெரியாது. ஏனெனில், நாலு பேர் எதிரில் அவர் கண்ணீர் உகுத்ததில்லை. தம்மைச் சுற்றி உள்ளவர்களிடம், தம்மை அண்டினவர்களிடம் கலப்பற்ற அன்பை அள்ளி அள்ளி வழங்குபவர் ராஜாஜி.

மதுவிலக்கு ரத்தினால் மனமுடைந்து ராஜாஜி புது விதத்தில் பேசி வருவதைக் கண்டு சமீபத்தில்தான் அவரைக் கேட்டேன், — இரண்டு மாதங்கள்கூட இராது — ''தொடர்ந்து வாழ்வதில் உங்கள் உறுதி தளர்ந்துவிட்டதா'' என்று. ''அப்படிச் சொல்வதற்கில்லை; ஆனால் தொடர்ந்து வாழ்வதனால் பயன் உண்டு என்ற திருப்தியும் இருக்க வேண்டுமல்லவா?'' என்றார். என்னுள்ளே நான் சில்லிட்டுப் போனேன்.

தர்மத்திலிருந்து வழுவாது, பற்றற்றுக் கர்மம் புரிவதில் ராமபிரானை நிகர்த்த ஆதரிச புருஷரே ராஜாஜி. ராமபிரானும் கூட ஓரிரு சமயங்களில் சாமானிய மானுடர்போல மனத் துயரத்துக்கு இடம் தந்தாரல்லவா என்று எண்ணிப் பார்த்து ஆறுதல் காண முயன்றேன்.

'வாழ்வதில் ராஜாஜிக்கு உள்ள உறுதி குலையவில்லை; பழைய ஜீவ சக்தியுடனும் உத்வேகத்துடனுமே இன்னும் அவர் இருக்கிறார்' என்பதற்கு அவரிடமிருந்தே அழுத்தமான உத்தரவாதம் இப்போது கிடைத்திருக்கிறது.

நிகழும் ராஜாஜி ஜயந்தியன்று வெளியாகவிருக்கும் ராஜாஜி — 93 என்ற அற்புத மலரைச் சிறந்த முறையில் உருவாக்கி, வெளியிட வேண்டும் என்பதற்காக என்னால் இயன்ற அனைத்தும் செய்து வந்தேன். இது குறித்து நாடு முழுதும் பத்திரிகை வாயிலாக நான் செய்த 'ஆர்ப்பாட்ட'த்தைப் பற்றி ராஜாஜி, 1971 நவம்பர் 13ந் தேதி 'ஸ்வராஜ்யா'வில் பின்வருமாறு எழுதியிருக்கிறார் :

ஸ்ரீ சதாசிவமும், அவரது குழுவினரும் ராஜாஜி-93 மலரைக் குறித்துச் செய்கிற பெரிய ஆர்ப்பாட்டத்தைப் பார்க்கும்போது, அவர்கள் அவ்வாறு உத்தேசிக்காவிடினும்கூட, இந்த டிஸம்பரோடு என்னைப் பொதுவாழ்விலிருந்தே வெளியேற்றிவிட நினைப்பது போலிருக்கிறது! ஆனால் நான் வெளியேற உத்தேசிக்கவில்லை. 'அசாதாரணம்' என்று சொல்லுமளவுக்கு, நீண்ட காலமாக வாழ்ந்து வந்துள்ள நான் பல எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தி வந்திருக்கிறேன். இப்போதும்கூடப் போராட்ட வாழ்வை முடித்துவிட எனக்கு உத்தேசமில்லை. எத்தனை காலம் வாழ வேண்டும், என்ன காரியம் செய்ய வேண்டும் என்பதையெல்லாம் நாமே நிர்ணயித்துக் கொள்கிற அதிகாரம் நமக்கில்லை என்பது உண்மைதான். ஆயினும், இன்றைய சூழ்நிலையில் நானாகத் தப்பி ஓட விரும்பவில்லை. பதவி துஷ்பிரயோகங்களும், புரளிகளும், கபட வேஷங்களும் மலிந்து, உச்ச ஸ்தானத்திலிருந்து அடிமட்டத்திலுள்ள அபாக்கியசாலிகள் வரையில் எல்லா வர்க்கங்களிலும் ஒழுக்கம் குன்றி வரும் இன்றைய சூழலில் நான் ஓய்வை விரும்பவில்லை. எனக்கு வயோதிகமும், பலவீனமும், அசக்தியும் ஏற்பட்டுவிட்டாலும்கூட, நிலைமையைச் சீர்திருத்தும் போராட்டத்திலிருந்து விடுபட்டு ஓட நான் எண்ணம் கொள்ளவில்லை.

ராஜாஜி இவ்வாறு எழுதியிருப்பதைக் கண்டதும் என் உடல், உள்ளம் முழுவதிலும் பேரானந்தம் ஊற்றெடுத்துப் பரவியது. கால்சியம் ஊசி போட்டுக் கொண்டவுடன் ரத்தக் குழாய்களில் ஒரு குதுகுதுப்பு உண்டாகுமே, அந்த உணர்வு ஏற்பட்டது!

ராஜாஜி ஜயந்தியன்று ஏராளமான ஆலயங்களில் ஆண்டவனுக்கு விசேஷ பூஜைகள் நடக்கின்றன. நாட்டில் தர்ம வாழ்வுக்கு ஜீவ சக்தி ஊட்டி வரும் பூஜ்ய ராஜாஜியின் ஜீவசக்தி குன்றாது 125 ஆண்டுகள் பொலிய இறைவனைப் பிரார்த்திப்போமாக. காஞ்சி பெரியவர்கள் கூறியிருப்பது போல் **அவர் க்ஷேமமாக இருந்தால் பாரத தேசமே க்ஷேமமாக இருக்கும்.**

வேறு எந்தத் தூள் தேயிலையையும் விட அதிகக் கோப்பைகள் தேநீர் பெறுங்கள்

உபயோகித்துப் பாருங்கள்! லிப்டன் ரூபி டஸ்ட் வேறெந்தத் தூள் தேயிலையையும் விட அதிகக் கோப்பைகள் தேநீர் தருகிறது.
அது மட்டுமல்ல! ரூபி டஸ்ட் தேயிலையைக் கொண்டு நிறம், மணம், குணம் நிறைந்த ருசி மிகுந்த பானத்தை உடனடியாகப் பெறலாம்.
எனவே லிப்டன் ரூபி டஸ்ட் "தூள் தேயிலைகளில் ஒப்புயர்வற்ற மன்னன்" என்பதில் அதிசயம் எதுவும் இல்லை.



லிப்டன் ரூபி டஸ்ட்

தூள் தேயிலைகளில் ஒப்புயர்வற்ற மன்னன்



லிப்டன் என்றாலே நல்ல டீ

பாக்கிங் செய்த தேயிலை மட்டுமே புதிதாகவும், மணத்துடனும் திகழ்கிறது

LRDC-3 TAM

அவர்கள் நியமித்து விட்டு அதற்கு எல்லா அதிகாரமும் தந்து விட்டாலேதான் யுத்த மில்லாமல் தென் ஆசியா மீளும்.

செய்த தவறுகளின் விளைவுகளை அனுப வித்துத்தானே ஆகவேண்டும்? பாகிஸ்தான் அதிபரின் ரம்ஜான் அறிக்கையையும் அதில் தொனித்த சிநேக பாவத்தையும் சந்தே கிக்காமல் அப்படியே ஏற்றுக் கொண்டிருந் தால் இன்று நிலைமை முற்றிலும் வேறானதா யிருக்கும்.

நீதி முறை தலைகீழாயிற்று!

'இந்தியா — பாகிஸ்தான் நெருக்கடி குறித்து நாது பிரதம மந்திரி கூறுவதே அனை வருக்கும் சம்மதமாகும். இவ்விஷயத்தில் அவரது குரலே இந்தியாவின் அதிகாரபூர்வ மான குரல். ஆனால் இச்சந்தர்ப்பத்தில் உள் நாட்டில் சர்ச்சைக்குரிய சட்டமாற்றங்களைப் பிரதமர் செய்துவிடக் கூடாது' என்று 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆசிரியர் ஸ்ரீ ஃப்ராங்க் மாரேஸ் எழுதியிருந்தார். துரதிருஷ்டவச மாக, அவரது அறிவுரைக்கு மாறாக ஸ்ரீமதி இந்திரா காந்தி இச்சமயத்திலேயே மிகுந்த சர்ச்சைக்குரிய 24வது 25வது சாஸனத் 'திருத்தங்களை' நிறைவேற்றியிருக்கிறார். மூல சாஸனத்தை மாற்றாமல் மக்களுக்குக் காத் துத் தருவதில் அவர் தமது கவனத்தைத் திருப்புவார் என்று நம்பியது பொய்த்து விட்டது. அரசியல் சாஸனம் என்பது பார்லி மெண்ட் செய்கிற பல சாமானிய சட்டங்களில் ஒன்றின் நிலைக்குக் கொண்டு வரப்பட்டிருக் கிறது.

அரசியல் மூல சாஸனத்தின் மூன்றாம் பகுதி யில் மக்களின் ஜீவாதார உரிமைகள் நிர்ணயிக் கப்பட்டன. மூன்றாவது பிரிவில் கூறப்பட்ட இந்த உரிமைகளை மீறாமலே அரசாங்கம் மக்கள் நலனுக்காகச் செய்ய வேண்டிய பணி களுக்கு சாஸனத்தின் நாலாம் பகுதியில் வழி காட்டப்படுகிறது. அதிகார வெறியர்களின் கையில் ஆட்சி சிக்கினாலும் மக்களின் உரிமை பாதிக்கப்படலாகாது என்றே, அரசாங்கம் குறுக்கிட முடியாதபடி மக்கள் உரிமைகளைச் சாஸனம் உறுதி செய்து தந்தது. பல கட்சி களைச் சேர்ந்த பெரியவர்களும், எந்தக் கட்சிப் பற்றும் இல்லாத பிரமுகர்களும் சேர்ந்து வகுத்த சாஸனம் அது. பல ஜனநாயக நாடு களின் அநுபவத்தை அவர்கள் கவனித்த பின்னரே, இந்தியாவில் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்துவிட்டுச் சர்க்கார் ஆட்சி நடத்தலாகாது எனக் கருதி, இவ்வுரிமைகளை முதலில் உறுதிப்படுத்திக் கொடுத்து விட்டு அதன்பின் அரசாங்கக் காரியங்களுக்கு வழி காட்டும் நாலாவது பகுதியை வகுத்தனர். ஆனால் இப்போதோ எல்லாம் தலைகீழாகி விட்டது. அரசாங்கம் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்தும் ஆட்சி நடத்தலாம் என்று முடிவு செய்து விட்டார்கள். சாஸனத் தைப் புறக்கணித்து விட்டதோடு, இவ்விஷ யத்தில் ஸுப்ரீம் கோர்ட்டையும் மக்கள் நாட முடியாதபடி செய்துவிட்டார்கள். ஆக அடிப்படைச் சட்டம், நீதித் துறை இரண்டுக் கும் மேலாக, தாற்காலிகமாகப் பார்லிமெண் டின் மெஜாரிட்டி பெற்றுள்ளவர்களின் 'திரு உளக் கருத்துக்கே' தேசத்தை விட்டு விட் டார்கள். சாஸனமும், நீதிமன்றமும்தாம் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தும் அங்கங்கள். இப்போதோ தலைகீழாக, தாற்காலிகமாக அதிகாரம் ஏற்ற அரசு சாஸனத்தையும், நீதிமன்றத்தையும் கட்டுப்படுத்துவதைப் பார்க்கிறோம்.

இரண்டு 'காங்கிரஸ்' ஏனோ?

அரசியல் மூலசாஸனம் தந்த அடிப்படை உரிமைகளை நீக்கி, அந்தச் சாஸனத்தைத் தகர்க்க வேண்டும் என்பதே இப்போது ஸ்தாபனக் காங்கிரஸின் பெருவாரிச் சட்ட சபை, மக்கட் சபை அங்கத்தினர்களுக்கும் இலட்சியமாகி யிருக்கிறது. இந்தத் தகர்ப்பு வேலையில் அவர்களும் இந்திரா காங்கிரஸோடு சேர்ந்திருக்கிறார்கள். இதன் பின்னும் ஸ்தா பன காங்கிரஸ் என்பதாக அது தனித்து இயங்குவதின் பொருள் என்ன? இவ்விஷயத் தைத் தீர்க்கமாக ஆலோசித்து இந்த முடி வுக்கு வந்திருக்கிறேன். வேறு பலரும் இந்த அபிப்பிராயத்தை ஒப்புக் கொள்கிறார்கள். அடிப்படையான சாஸனத் தகர்ப்பில் ஒன்று பட்டு விட்டதற்குப் பிறகு காங்கிரஸ் இரண்டு பிரிவுகளாகப் பிளந்திருப்பதில் அர்த்தமே இல்லை. கொள்கையில் மாறுபாடு இன்றி, பெயரில் மட்டும் வேறுபட்டிருப்பதால் மக்க ளிடமும் மதிப்புப் பெற முடியாது; நீதிபதி களிடமும் மதிப்புப் பெற முடியாது.

சாஸனத் தகர்ப்பில் ஈடுபட்டதால் ஸ்தா பனக் காங்கிரஸும் இந்திரா காங்கிரஸும் ஒன்றுபட வேண்டும் என்பது ஒருபுறத்தில் என் முடிவாக இருக்க, மறுபுறத்திலோ ஸ்தா பன காங்கிரஸும் இந்திராவின் கட்சிக்கு எதி ராக இல்லாவிடில் அக்கட்சி ஏதேச்சாதிகாரம் பெற்று, ஜனநாயகத்துக்குப் பெரு விபத்து ஏற்படும் எனக் காண்கிறேன். ஆகவே ஜன

மனச்சாட்சி

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

தர்மம் என்பது உலக க்ஷேமத்துக்காகச் செய்யப்பட வேண்டியது. தர்ம சாஸ்திரங்கள் இன்னது தர்மம் என்று நிர்மானம் பண்ணுபவை. ரூபத்தை அறிவதற்குப் பிரமாணம் கண். சப்தத்தை அறிவதற்குப் பிரமாணம் காது. தர்மப் பிரமாணம் என்ன எனில் தர்ம சாஸ்திரப் பிரகாரம் செய்வதேயாகும்.

சகல தர்மத்துக்கும் மூலம் வேதம். அப்புறம் ஸ்மிருதி: அது வேதத்தின் விஷயங்களை அடிப்படையாகக் கொண்டு குறித்த குறிப்பு (Note); அந்த ஸ்மிருதிக்கு அப்புறம் பிரமாணமாக இருப்பது பெரியவர்களுடைய நடத்தை. பெரியவர்கள் எப்படி நடந்தார்கள் என்பது புராணங்களால் நமக்குத் தெரிய வருகிறது. அதற்கப்புறம் நமக்குத் தெரிந்து சிஷ்டராக இருப்பவர்களின் நடத்தை. சிஷ்டாசாரம் என்று அதைச் சொல்லுவார்கள். எல்லோருடைய நடத்தையும் பிரமாணமாகாது. நம்மிடை வாழ்பவரில் எவரது நடத்தை தார்மிக விஷயங்களில் பிரமாணமெனில், அவருக்கு சாஸ்திர நம்பிக்கை இருக்க வேண்டும்; சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட ஆசாரங்களை அவரே வாழ்வில் அநுஷ்டிக்க வேண்டும்; காமக்குரோதம் இல்லாதவராக இருக்க வேண்டும் — இப்படிப்பட்ட சிஷ்டர்களுடைய ஆசாரம் ஒரு பிரமாணம். அதற்கப்புறம் நம்முடைய மனச்சாட்சி (Conscience). நம்முடைய மனசு நிஷ்களங்கமாக எப்படி ஆலோசிக்கிறதோ அது ஒரு பிரமாணம்.



ஆகவே, ஆத்மிக, தார்மிக, மத விஷயங்களில் பிரமாணங்களைக் கொள்ளும் முறையில் முதலில் வேதம் இடம் பெற வேண்டும். அப்புறம் தர்ம சாஸ்திரத்தைக் கொள்ள வேண்டும். அப்புறம் பூர்வகால ரிஷிகள் முதலியவர்களின் நடத்தை. பின்பு இப்பொழுதுள்ள சிஷ்டர்களின் ஆசாரத்தைப் பிரமாணமாகக் கொள்ள வேண்டும். இவைகளுக்கெல்லாம் அப்புறம் கடைசி பக்ஷமாகத்தான் சாஸ்திர விஷயங்களில் மனச்சாட்சியைப் பிரமாணமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

இப்பொழுது எல்லாம் தலைகீழாக மாறி விட்டன. முதலில் மனச்சாட்சியைத்தான் பார்க்கிறார்கள். கடைசியில்தான் வேதத்தைக் கவனிக்கிறார்கள். வேறு ஒரு மார்க்கமும் இல்லாதபோதுதான் மனச்சாட்சியை அநுசரிக்க வேண்டும். மனச்சாட்சி என்று ஏன் அதற்குப் பெயர் வந்தது? அது சாட்சி சொல்லத்தான் யோக்யதை உடையது. நியாயாதிபதியாக (Judge) இருக்க அதற்கு யோக்யதை இல்லை. சாட்சியாக வந்தவன் வாயால் பொய்யைச் சொல்வான். அதனால் வாய்ச்சாட்சியை நம்புவதற்கில்லை. ஆனால், மனம் பொய் சொல்லாது. மனசுக்கு எல்லாம் நிஜமாகத் தெரியும். **"நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை"** என்று அவ்வைப் பாட்டி சொன்னாள். ஆகவே அதைச் சாட்சியாக மட்டும் வைக்கலாம். இப்பொழுது மனச் சாட்சியைத் தர்ம விஷயங்களில் ஜட்ஜாகவே வைத்து விடுகிறார்கள். இன்னது நடந்தது என்பதை நிஜமாகவே அது சொல்லும். இதுதான் நியாயம் என்று அதனால் சொல்ல முடியாது. 'மனச்சாட்சிக்கு எப்படித் தோன்றுகிறதோ அப்படிச் செய்கிறேன்' என்று சொல்லுவது தப்பு. எடுத்தவுடன் அதற்கு ஜட்ஜ் ஸ்தானம் கொடுத்துவிடக் கூடாது. ஒருவித வழியும் இல்லாமல் போனால் 'நீதான் சாட்சியாக இருந்து எல்லாவற்றையும் பார்த்திருக்கிறாயே. இப்பொழுது உன் அபிப்பிராயத்தைச் சொல்' என்று சொல்ல வேண்டும். மனசு என்பது ஒரு தனி மனிதனைச் சேர்ந்தது. எனவே அது எவ்வளவு தூரம் அவனது சுயநலத்தை விட்டு விலகிப் போகும் என்று சொல்ல முடியாது. (ஆகவே சொந்த விஷயங்களில் அதற்குத் தருகிற இடத்தைக் கூடச் சமய விஷயங்களில் தருவதற்கில்லை.) 'தனி மனசு' என்ற நிலைக்கு மேலே போய் முழுக்க முழுக்க லோக க்ஷேமத்தையே சொன்ன ரிஷிகளின் அபிப்பிராயம்தான் தர்ம விஷயங்களில் பிரமாணமாகும்.

சில நினைவுகள்

• ஸ்ரீமதி லக்ஷ்மி தேவதாஸ் காந்தி •

ஒவ்வொரு வருஷமும் டிசம்பர் எட்டாந் தேதி நாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் நாள். அன்றைய தினம் எங்கள் தந்தையாரின் பிறந்த தினமாக நடத்துகிறார்கள். குழந்தைகளாயிருந்தபோது நாங்கள் அவரது பிறந்த நாளைக் கொண்டாடியதில்லை. இப்போது சில ஆண்டுகளாக எங்கள் தந்தையாரின் நண்பர்களும் அபிமானிகளும் டிசம்பர் எட்டாந் தேதியை அவரது பிறந்த நாளாகக் கொண்டாடி வருகிறார்கள். நாங்களும் அதில் மிக்க சந்தோஷமாகக் கலந்து கொள்கிறோம். அன்று நண்பர்கள் அதிகாலையிலிருந்தே தந்தையாரை நமஸ்கரித்து ஆசி பெற, புஷ்பம் பழங்களுடன் வர ஆரம்பித்துவிடுகிறார்கள். ஸ்ரீ சதாசிவம் தம்பதியர் இதில் எப்போதும் எல்லோரையும் முந்திக் கொள்கிறார்கள். தந்தையாரும் அன்றைய தினம் வழக்கத்தை விட ஸ்நானாதிகளையும் காலை ஆகாரத்தையும் கொஞ்சம் முன்னதாகவே முடித்துக் கொண்டு கூடத்தில் உட்கார்ந்து கொண்டு வருவோரை அன்புடன் வரவேற்கிறார். அவர்களின் யோக க்ஷேமங்களை விசாரிக்கிறார். அதில் மகிழ்ச்சி அடைகிறார். எனது சகோதரி நாமகிரி ஜனங்கள் கொண்டு வரும் புஷ்பம், பழம், பல கோயில்களிலிருந்து வரும் பிரசாதங்கள் — இவைகளைச் சரிவர எடுத்து வைத்து, விநியோகித்து, அவரவர்கள் கொண்டுவரும் தட்டு, கூடை பாத்திரங்களைக் கவனமாக அவர்களுக்குத் திருப்பிக் கொடுப்பாள். அது கொஞ்சம் சிரம சாத்தியமான காரியமானாலும் மிகவும் உவகை தரக் கூடியதாகவும் அவளுக்கு இருக்கிறது. ஒரு பண்டிகை நாள் போல் அன்றைய தினம் கழிகிறது. இன்னும் பல ஆண்டுகள் எங்களுக்கு இந்தச் சந்தோஷத்தை ஆண்டவன் அருள வேண்டும்.

எங்கள் எல்லோருக்கும் (மூன்று தலைமுறைகள்) எங்கள் தகப்பனார் ஓர் ஆலமரம். அதன் நிழலில்தான் சுகதுக்கம் நிறைந்த எங்கள் வாழ்வில் அமைதி காண்கிறோம். சிக்கல்களை விடுவிக்கும் யோசனைகளைப் பெறுகிறோம். இந்த முதிய வயதிலும் அவருடைய தெளிவான, விவேகமும், விநோதமும் நிறைந்த பேச்சுக்களைக் கேட்டுப் பயனடைகிறோம்.

பிறவியால் அந்தணராகிய எங்கள் தந்தை அதற்கேற்ற ஆத்மீக பலம் பெற்றிருக்கிறார். அதோடுகூட மனம் தளராது அசாத்திய தைரியத்தோடு போராடும் க்ஷத்திரிய வீரமும் அவரிடம் நிறைந்திருக்கிறது. சமூக அநீதிகளுக்கு எதிராகவும், தேச விடுதலைக்காகவும் போராடியவண்ணமாகவே இருந்திருக்கிறார்.

தேசம் விடுதலை அடைந்த பிறகும் தமது லட்சியங்களுக்காக அவர் சண்டை போட்டுக் கொண்டுதான் இருக்கிறார்.

இச்சிறப்பு மலரில் பலர் என் தந்தையைப் பற்றி எழுதுவார்கள். அவருடைய புதல்வியாகிய நானே அதிகம் சொல்லிக் கொண்டு போவது சரியல்ல. நினைவுக்கு வரும் சிற்சில விஷயங்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

சிறுவயதிலேயே நாங்கள் எங்கள் தாயாரை இழந்து விட்டிருந்தோம். எங்களைக் கவனித்துக்கொள்ள வீட்டில் தந்தையாரின் தகப்பனாராகிய எங்கள் தாத்தாவும் அவரது சகோதரியான எங்கள் அத்தைப் பாட்டியும் அவ்வப்போது எங்கள் தாய் வழிப் பாட்டனார் பாட்டியும் இருந்து வந்தார்கள். சில சமயம் மற்ற நெருங்கிய சுற்றத்தாரும் இருப்பது உண்டு. எங்கள் தாத்தா தமது மகனாகிய எங்கள் தந்தையிடம் உயிரையே வைத்திருந்தார். அண்ணாவும் தாத்தாவை வெகு பரிவோடு கவனித்துக் கொள்வார். எங்கள் தந்தையை நாங்கள் 'அண்ணா' என்றுதான் அழைக்கிறோம்.

எங்கள் சிறு வயதில் நாங்கள் சேலத்தில் ஒரு பெரிய, பழைய, ஆங்கிலேயர் பாணியில் கட்டப்பட்ட பங்களாவில் வசித்து வந்தோம். அதில் பேய் இருப்பதாகவும் அதைத் தாங்கள் பார்த்திருப்பதாகவும் வேலைக்காரர்கள் அடிக்கடி எங்களைப் பயம் காட்டினார்கள். இது உண்மையாக இருக்குமா என்று அண்ணாவைக் கேட்டேன். அதற்கு அவர் 'பயம்தான் அந்தப் பேய் என்றும் மனத்திலிருந்து பயம் நீங்கிவிட்டால் பேய் ஓடிப் போய்விட்டது என்று அர்த்தம்' என்றும் கூறி என் மனத்தில் பேயைப் பற்றி இருந்த பீதியை அகற்றிவிட்டார்.

மழையும் பேரிடியும் வரும்போதெல்லாம் நான் நடுங்கிப் போவேன். நம்மேல் இடி விழுந்து விடுமோ என்ற பயம். அண்ணா எனக்கு, 'இடியின் சத்தம் அது எங்கோ பாய்ந்த பிறகுதான் கேட்கிறது; பயப்படத் தேவையில்லை' என்று சொல்லி, மேகத்தோடு மேகம் உரசும்போது மின்னல் உண்டாகிறதென்றும், மின்னலின் வெளிச்சத்தை நாம் கண்டவுடன் சற்று நேரத்துக்குப் பிறகு மேகங்கள் உரசும்போது ஏற்படும் இடிச் சத்தத்தைக் கேட்கிறோம் என்றும் விளக்கினார். எங்கள் இடி பயமும் கொஞ்சம் குறைந்தது.

கோர்ட்டுக்கு அண்ணா பஞ்சகச்சம் வைத்த வேட்டியும் கறுப்புக் கோட்டும் ஜரிகைக் கரை போட்ட வெள்ளைத் தலைப்பாகையும் அணிந்து கொண்டு போவார். நெற்றியில் திருமண் இருக்கும். தலைப்பாகையை அணிவதற்கு முன்பு அதன் இரண்டு முனைகளையும் இருவர் பிடித்துக் கொண்டு மடிப்போ முறுக்கோ அதற்கு ஏற்ற வேண்டியிருக்கும். குழந்தைகளாகிய நாங்கள் இந்தப் பணியில் உதவ முன்வருவோம். வீட்டில் எல்லோருக்குமே

உட்கார மனை போட்டு இலையில் சாப்பாடு பரிமாறுவார்கள். எங்கள் எல்லோருக்கும் தயிர் இருக்கிறதா என்று தெரிந்துகொண்ட பிறகு தான் தம் இலையில் தயிர்விடச் சம்மதிப்பார்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு சத்தியாக்கிரகப் போர் மூண்டது. பலருடைய வாழ்க்கையில் பெரிய திருப்பங்கள். அண்ணாவின் முதல் சிறைவாசத்தின்போது அவர் எழுதிய 'ஜெயில் டைரி'யைச் சமீபத்தில் படித்தேன். அவர் பட்ட கஷ்டங்களை நினைக்கும்போது எதைப் பற்றியும் குறைப்பட்டுக் கொள்ள நமக்கு அதிகாரமே இல்லை என்று தோன்றுகிறது.

அவரது ஜெயில் குறிப்புக்களிலிருந்து சில குறிப்புக்களை எடுத்து எழுத விரும்புகிறேன்.

3-1-22


''சிறைச்சாலை வாழ்வில் ஏற்படக்கூடிய துன்பங்கள் பல. வைத்தியசாலையில் இருப்பது மற்றும் ஒரு துன்பமாகும். வைத்திய சாலையில் மூன்று பெரிய அறைகள் இருக்கின்றன. சிறு அறைகளோ விசேஷ வார்டுகளோ கிடையாது. என்னுடைய வார்டில் பன்னிரண்டு நோயாளிகளுக்குப் படுக்க வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. படுக்கையில் நிறைய மூட்டைப்பூச்சிகள். சன்னல்களுக்குக் கம்பிகள் போடப்பட்டிருக்கின்றன. மாலையில் பூட்டிவிடுகிறார்கள். பின்னாலுள்ள வராந்தாதான் இரவில் கதவைப் பூட்டிய பிறகு நோயாளிகள் ஒதுங்குவதற்கு இடம். மூடி போட்ட சட்டிகளை வைப்பதில்லை. எல்லாச் சட்டிகளும் இரவு முழுதும் திறந்தே கிடக்கின்றன. இரவில் அந்த இடம் அசல் நரகமாகவே இருக்கிறது. காலையில் அசுத்தங்களை அப்புறப்படுத்திவிட்டு, 'பினாயில்' தெளிக்கிறார்கள். சிறையின் தலைமை டாக்டர் வரும்போது எல்லாம் பரிசுத்தமாகக் காட்சி அளிக்கிறது. மூடி போட்ட சட்டி ஏன் வைக்கக் கூடாது என்பது எனக்கு விளங்கவில்லை. மண் சட்டிகளை வைக்காமல் மூடி போட்ட பீங்கான் பாத்திரங்களை வைத்தால் செலவும் மிஞ்சும். சுத்தமாகவும் இருக்கும்.''

வேலூர் சிறை: 7-1-22

''பாதரசம் சேர்ந்த களிம்பு குணத்தை விடக் கொடுமையையே செய்துவிட்டது. என்னுடைய கால்கள் கொப்புளித்து விட்டன. வெந்நீர் ஒத்தடம் கொடுத்தால் நல்லது என்று டாக்டர் கூறினார். ஆனால் அது எனக்குப் பொறுக்க முடியாத வேதனை தந்தது. இந்தச் சித்திரவதை போதாதென்று புண்களின்மீது 'கார்பாலிக் ஆஸிட்' என்னும் திராவகத்தையும் தடவிவிட்டார்.

26-1-22

''என்ன காரணமோ, இன்று என் தாயாரின் ஞாபகமாகவே இருக்கிறது. அதனால் என் மனத்தில் இன்பம் சுரந்து கொண்டே இருக்கிறது. தம்முடைய அருமைப் புதல்வன் சிறையில் அடைபட்டுக் கிடப்பான் என்று அவர் ஒருநாளும் எண்ணியிருக்க மாட்டார். அவர் உயிருடன் இருந்திருந்தால் அவரிடம் இந்தப் போராட்டத்தின் அவசியத்தையும் மேன்மையையும் விளக்கிக் கூறியிருப்பேன். மற்றொரு ஆன்மாவும் மண்ணுலகத்தை விட்டுப் போய்விட்டது. அவன் இருந்த



போது சிறைக்குப் போகாதபடி எத்தனையோ பேரைக் காப்பாற்றி யிருக்கிறேன். என்னிட மிருந்து இதைக் கேட்டபோதெல்லாம் ஆனந்தமும் பெருமையும் அடைந்தான். அப்படிப் பல உயிர்களைக் காப்பாற்றிய நானே இங்கு வந்து சேருவேன் என்பதை அவனும் எண்ணியிருக்க மாட்டான்.

"இப்போதெல்லாம் சில நாட்களாக ஸ்நானம் செய்த பிறகு மத்தியான வேளைகளில் என்னுடைய ஆஸ்துமா வந்து தூக்க விட முடியாமல் கஷ்டப்படுத்திக் கொண்டு வருகிறது. அந்த வேதனையை ஆற்றுவதற்காக இந்த எண்ணங்களில் இறங்கினேன். இரவு ஆஸ்துமா வராவிட்டாலும் என்னுடைய உடல் பலவீனப்பட்டு விட்டபடியால் அதைத் தூக்கி எறிய முடியவில்லை என்பதை உணர்கிறேன். அணுவளவு சிரமம் ஏற்பட்டாலும் உடனே ஆஸ்துமா வந்துவிடுகிறது."

11–2–22

"இன்று வீட்டிலிருந்து கடிதம் வந்தது. தவிர காந்தியடிகளிடமிருந்தும் ஒரு கடிதம் வந்தது. அவர் பார்தோலியிலிருந்து பிப்ரவரி மூன்றாம் தேதி எழுதியிருக்கிறார். அதில் அரசியல் வாசனை அணுவளவும் கிடையாது..."

18–2–22

"இங்கே ஒரு வாலிபக் கைதி இருக்கிறார். இன்னும் ஒன்பது நாட்களில் விடுதலை அடைகிறார். இவர் சிறைக்கு வந்தது இதுதான் முதல் தடவை. ஓர் அழகான வேஷ்டியை விலைக்கு வாங்கினாராம். இவரிடம் கொண்டு வந்து விற்றவன் திருடனாம். அவன் பிடிபடவில்லை. இவரைப் பிடித்துத் தண்டனை கொடுத்து விட்டார்கள்."

16–3–22

"என் விடுதலை வெகு சமீபமாக நெருங்கிக் கொண்டிருக்கிறது. இந்த மூன்று மாத காலமும் என் வாழ்வில் அநுபவித்த இன்பகரமான சமயங்களில் ஒன்று என்று எண்ணுகிறேன்."

பல போராட்டங்களுக்குப் பிறகு நம் நாடு விடுதலை அடைந்தது. விடுதலைக்குப் பிறகு அண்ணா பல பெரிய பதவிகளை வகித்திருக்கிறார். ஆடம்பரத்துக்காகத் தமது கோட்பாடுகளை அவர் கைவிட்டது கிடையாது. பல ஏமாற்றங்கள், மன வருத்தங்களுக்கு இடையிலும் அசாதாரண தைரியத்தைக் கடைப்பிடித்திருக்கிறார்.

எனது தந்தையாரைப் பற்றிப் புகழுரைகளாகவே எழுதிவிட்டேன். எப்போதாவது அவரது செயல்களாலோ, பேச்சுக்களாலோ மனம் புண்பட்டதுண்டா, அவரிடம் குற்றங்கள் கண்டதுண்டா என்று யோசித்துப் பார்க்கிறேன். அவ்விதம் ஒன்றுமே நினைவுக்கு வரவில்லை.



ராஜாஜி வழி

—சிற்பி

கண்டோரைக் கவர்ந்திழுக்கும் காந்தப் பார்வை
  கசக்கும் முன் இனிக்கும் பின் கருத்துப் பேச்சு
தொண்டின்றி அமையாது என்னும் போது
  தொண்ணூறு பாகையென நிமிரும் தேகம்
எண்டிசையில் எங்கேனும் இன்னல் காணில்
  எடுத்தெறியத் துடிதுடித்து ஏங்கும் நெஞ்சம்
பண்டிதரும் பாமரரும் பாடிப் போற்றும்
  பண்பிலுயர் ராஜாஜி இவர்தான் ஐயா.

அரசியலில் வாணிகத்தில் சொந்த வாழ்வில்
  அனைத்திலுமே அறவொழுக்கம் பேணவேண்டும்
சரியென்று மனச் சாட்சி தீர்த்தவற்றைச்
  சகம் முழுதும் எதிர்த்தாலும் காக்க வேண்டும்
பொருளொன்றே பெரிதென்ற புன்மை நீக்கிப்
  பொதுவான மேன்மைக்காய் உழைக்க வேண்டும்
கருமத்தைப் பலன் கருதாதியற்ற வேண்டும்
  காசினியீர்! ராஜாஜி மொழியைக் கேட்பீர்.

அகிலத்தில் ஆனந்தம் அமைதி வேண்டில்
  அணுகுண்டை ஆழ்கடலிற் புதைத்தல்வேண்டும்
பகை சூது பனிப்போர்கள் மக்கள் வாழ்வைப்
  பாழ்படுத்தும் சாதிவெறி மடியவேண்டும்
சகிப்புணர்வு பயமின்மை சாந்தம் அன்பு
  சந்ததமும் நெஞ்சினிலே தவழ்தல் வேண்டும்
வகையான வளமான வாழ்வைக் காண
  வையகத்தீர்! ராஜாஜி வழியிற் செல்வீர்.





10. பிரம்மாணியும் பிராம்மணியும்

கல்லாத பேர்களே நல்லவர்கள், நல்லவர்கள்...
வெல்லாமல் எவரையும் மருட்டிவிட வகைவந்த
வித்தை என் முத்தி தருமோ? -தாயுமானவர்

பைரவி பிராம்மணி படுத்தி வைத்த பாட்டை எல்லாம் பல்லாண்டுகளுக்குப் பின்னால் வெறும் வேடிக்கை போலக் கருதி விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டே சொல்வாள் நம்முடைய திவ்விய மாதா. பைரவி பிராம்மணியைப் பற்றித் துளிக்கூட மதிப்புக் குறைவோ, துவேஷத்தின் சிறு சாயலோ தொனிக்காமலே சொல்வாள். அந்தப் படுத்தலைத் தான்பொறுமையுடன் தாங்கிக் கொண்டு அவளுக்குக் குறிப்பறிந்து சேவை செய்தது பற்றியும் சிறிதுகூடத் தற்பெருமை இல்லாமல் சொல்வாள். அம்மாவால் தான்அப்படிப் பேச முடியும்!

அந்த ஏழைக் குடும்பத்தின் சக்திக்கு ஒப்பிட்டால் அன்று பெரிய விருந்து என்றே சொல்ல வேண்டும். வயிறு நிறைய உண்டபின் எல்லோரும் உறங்கப் போனார்கள்.

"நீ கவனிச்சயா சாரு. சாப்பிட உட்கார்ந்த போது எத்தனை 'பேச்சு இருந்தது? சாப்பாட்டுத் தினுசு ஒவ்வொண்ணும் வரச்சே பேச்சு குறைஞ்சுது. இப்போ வயிறு ரொம்பி அவாவாளும் தூக்கத்திலே ஆழ்ந்துட்டா. இப்படித்தான் ஈசுவரனைத் தேடிப் போறச்சே முதலில் விசாரணையும் விவாதமும் தடபுடலாக இருக்கும். அவன் பல தினுசிலே அநுக்கிரகத்தைக் காட்டக் காட்ட இதெல்லாம் குறையும். பூரண அநுக்கிரகம் வந்துட்டா மனசு அப்படியே சமாதியிலே தூங்கிடும்" என்று கூறிய ராமகிருஷ்ணர் 'சமாதி' என்று சொன்னமாத்திரத்திலேயே அந்த எண்ணத்தில் தோயலானார்.

கண்ணைக் கசக்கிக் கொண்டு வந்த ஹ்ருதயர், "என்ன மாமா, சின்னூண்டு மாமிக்கு எப்போப் பார்த்தாலும் தத்வோபதேசம் பண்ணறேள்? தாங்கிக்க முடியாம சிரமப்படப் போறு" என்றார்.

அவரைக் கண்டதும் சாரதை உள்கட்டுக்குள் விரைந்தாள். அவள் அங்கிருந்து அகன்றது ராமகிருஷ்ணருக்கும் மிக நல்லதாயிற்று. சமாதி நிலைச் சாயலிலிருந்து சடேரென்று பரவச நிலைக்குத் தாவினார்.

ஹ்ருதயருடைய கையைப் பிடித்துக் கொண்டு மெல்லிய குரலில், "அவ யாருன்னுடா நினைக்கிறே? அவ சாட்சாத் சரஸ்வதி தேவி. அவளாலே தாங்க முடியாத ஞானம் எதுவும் இல்லை. என்னோட திவ்விய மாதாவான சரஸ்வதியிடமிருந்து வருகிற ஒரே ஒரு ஒளிக் கிரணம் மகா மேதாவியான பண்டிதனையும் நசுக்கிப்போன புழுப் போல அடக்கிவிடுமாக்கும்! அவளாலே தாங்க முடியாத ஞானபோதனை கிடையாதுடா பயலே! அவளைத்தான் இந்தச் சூழலிலே தாங்கிக்க முடியாது. அதனாலேதான் பல தினுசிலே தன் அறிவுப் பிரபாவத்தை அடக்கிண்டு, தன் சௌந்தரியப் பிரவாகத்தை ஒடுக்கிண்டு, தன் அருள் பிரகாசத்தை மறைச்சுண்டு இப்படிப் படுசாமானியமா வந்திருக்கா. அதுலேயும் ஒரு நோக்கம் இருக்கு. துளிக்கூடப் படிப்பே இல்லாம, இயற்கையாயிருக்கிற குழந்தைத்தனத்தை அப்படியே காப்பாத்திண்டாலே பகவானை அடைஞ்சுடலாம். அதைத்தாண்டா உன் 'சின்னூண்டு' மாமிபண்ணிண்டிருக்கா. அது உங்களுக்கெல்லாம் புரியல்லையேன்னுதான் நான் அவளுக்குக் கொஞ்சம் கொஞ்சம் பாடமும் சொல்லித் தரேன்" என்றார்.

சாரதை உதிக்குமுன் ராமசந்திர முகர்ஜி அவளைப் பசும் பொன் வண்ண மகாலக்ஷ்மியாகத் தரிசித்தார்; சியாமசுந்தரியோ கருவண்ண துர்கையாக அநுபவித்தாள். இப்போது ராமகிருஷ்ணர் அவளையே சரஸ்வதி என்கிறார்.

துர்கை, லக்ஷ்மி, சரஸ்வதி மூவரும் ஒருவர்தான். ஸச்சிதானந்தப் பிரம்மத்தின் ஆனந்தத்துக்கு துர்கை என்று பெயர்; அதன் சித்விலாசத்துக்கு லக்ஷ்மி என்று பெயர்; அதன் சத்தியமான இருப்புக்கு சரஸ்வதி என்று

பெயர். ஜடமாக இருப்பது அதன் சத்திய நிலை அல்ல. அந்த ஜடத்துள்ளும் ஞானமாக இருப்பவளே சரஸ்வதி. ஜடமான அணுவுக்குள்ளும் மகா பெரிய பௌதிக சக்தி கொந்தளிப்பதை இப்போது விஞ்ஞானிகள் கண்டுள்ளனர். அந்த மாபெரும் பௌதிக சக்தியை அங்கு வைத்துள்ள ஜீவ சக்தியும் அதனுள் இருக்கவே செய்கிறது. சகல அணுக்களிலும் இந்த ஜீவ சக்தி இருப்பதால்தான், 'சகலத்திலும் எங்கம்மா ஊறியிருக்கா' என்று ராம கிருஷ்ணர் சொன்னார். 'சரஸ்' என்றால் பொய்கை. தெளிந்த ஞானப் பொய்கையாக இருப்பாள் சரஸ்வதி.

தொண்ணூற்றொன்பது சதவிகிதம் எவ்வித குழப்பமும் இன்றித் தெள்ளத் தெளிந்த தெளிவாக இருந்தவள் சாரதை. நூறுசத விகித தெளிவானது இந்தப் பூவுலகில் பூத உடல் கொண்டு உலவ முடியாது. எனவேதான் சாரதை என்ற பொய்கையிலும் சிறுசிறு சுழல்கள் அதன் தெளிவை ஆங்காங்கு மறைத்தன. தன் தம்பி, தங்கைகள் மரணமுற்றபோது சாரதை அடைந்த கலக்கம், தூய பொய்கையும் ஆங்காங்கு சுழலாகக் கலங்குவது போன்றதே. ஓடுகிறதா என்பதே தெரியாமல் ஒரே தகடாக நகரும் நீர், ஆங்காங்கு சுழல்களில் மட்டும் கண்ணுக்குத் தெரியும்படி ஒரு சுற்றுச் சுற்றிவிட்டுப் பிறகு அந்தக்



கலக்கத்தின் சுவடேயின்றி மேற்கொண்டு தெளிந்தோடுகிறதல்லவா? சாரதையும் அவ்வப்போது சகோதர வாஞ்சையால் கலங்கினாளே தவிர உடனுக்குடனே அந்தக் கலக்கச் சுவடேயின்றித் தெளிவுமயமாகிவிடுவாள். அவள் தன்கண்முன்னே தாயின் மகத்தான புத்திர சோகத்தைக் கண்டு

கலங்கிய போதிலும் உள்ளுக்குள் தானும் தாயாக வேண்டுமெனத் தவித்ததற்குக் காரணம், அவளை இந்தக் கலக்கம் ஆழ்ந்து பாதிக்காததுதான். தாயாக வேண்டும் என்று தவித்தாளே, அதுவும் தெளிந்த சரஸில் கலக்கம்தானே? இல்லவே இல்லை. சூரியஜோதிக்குப் பொய்கை தன் ஆவியையே அர்ப்பணிக்கிறது; அதனால்தான் ஆவியாக எழும்புகிறது. அப்போது நீரணுக்களுக்குள் எல்லையற்ற மோதல் ஏற்படத்தான் செய்கிறது. ஆனாலும் பொய்கை அதனால் கலங்குகிறதா என்ன? தன்னையே தந்து கொள்ளும் தியாகமாதலால் அதில் எல்லையற்ற உட்துடிப்பு இருந்தும்கூடக் கலக்கம் என்பது இல்லை. அன்பின் ஜோதியில் அம்மாவாகத் தன் ஆவியைத் தர சாரதை துடித்ததும் கலக்கத்தில் சேராது; தியாகத் தெளிவேயாகும்.

சரஸ்வதியை பிரம்மாணி என்பார்கள். பிரம்மனின் பத்தினி என்று பொருள். பிரம்மன் படைப்புத் தெய்வம். படைப்பினத்துக்குள் அறிவாக உட்புகுந்து கலைகளைப் படைக்கிற சரஸ்வதியே பிரம்மாணி. எனவேதான் ஞானப் படையல் செய்யும் அம்மாவாக ஆவதற்குத் தவித்தாள் 'சாரதா பிரம்மாணி'. இவளைப் பைரவி பிராம்மணி புரிந்து கொள்ளவில்லை.

ஹ்ருதயராம் மட்டும் என்ன, அவராலும் சாரதையின் பெருமையை 'மாமா' சொன்ன பிற்பாடுகூடப் புரிந்து கொள்ளத்தான் முடியவில்லை. பைரவி பிராம்மணிக்கு ராமகிருஷ்ணரிடம் 'தன்னுடையவனே' என்கிற பாசம் சமுத்திரமாக இருந்ததெனில், ஹ்ருதயருக்கும் அவர் 'தன் மாமா' என்ற பாசம் ஒரு பெரிய ஏரி அளவாவது இருக்கத்தான் செய்தது. பைரவி தட்சிணேசுவரம் வருவதற்குப் பல்லாண்டுகள் முன்பிருந்தே மாமாவோடு இணைபிரியாது ஒட்டிக் கொண்டவர் ஹ்ருதயர். நோயின் போதும், மகாபாவ எதிர் விளைவுகளின் போதும் மாமாவுக்கு அவர் செய்த சுசுருஷை கொஞ்ச நஞ்சமல்ல. ராமகிருஷ்ணருக்கு ஜகதீசுவரியானவள் அம்மாவாக அனுபவ வந்துவிட்ட பிறகு அவரால் பவதாரிணிக்கு சம்பிரதாயப்படி பூஜை செய்ய முடியாமற் போய்விட்டது. மாமாவுக்குப் பதில் ஹ்ருதயராமே அர்ச்சகராகப் பணி புரிகிறார். இவ்வாறு பலவிதங்களில் ராமகிருஷ்ணருடன் நெருங்கித் தொடர்பு கொண்ட ஹ்ருதயருக்கும், அதே நெருக்கத்தை அடைந்த பைரவிக்கும் உள்ளூறப் பரஸ்பரப் போட்டி உண்டு. இப்போது சாரதாமணியிடம் ராமகிருஷ்ணர் பரிவு காட்டியதும் ஹ்ருதயராமின் பாச மோகம் பிடித்த மனசுக்கு அவ்வளவாகப் பிடிக்கத்தான் இல்லை. ஆனாலும் 'என்னுடைய பகைவனுக்குப் பகைவன் எனது தோழன்' என்றபடி, பைரவி பிராம்மணி சாரதையைப் பகைத்ததாலேயே ஹ்ருதயராம் தன் 'சின்ன மாமி'யிடம் தோழமை பாவம் காட்டினார். அதனால்தான் ராமகிருஷ்ணர் சாரதாமணியை ஆதிசாரதையின் அவதாரமாகச் சொன்னவுடன், 'இதென்ன பிதற்றல்?' என்று வாய் விட்டுச் சொல்லாமல் அடக்கிக் கொண்டார்.

இத்தனையும் தெரியும் பகவான் ராமகிருஷ்ணருக்கு. இருப்பினும் அவரவர்களின் கர்மம் கழிகிற வரையில் கர்வத்தைக் கழிக்காமல் அநுபவிக்கட்டும் என்று வேடிக்கை பார்த்தார்.

வேண்டுமென்றே ஹ்ருதயரிடம், ''பீதாம்பர பண்டாரியை அழைச்சுண்டு வா. அந்தப் பயல் ரொம்ப நன்னாப் படிக்கிறானாம். அதோடே தன் கிளாஸ் பசங்களுக்கும் பொறுமையாகப் பாடம் சொல்லித் தரானாம். அவனை நம்ம சாரதாவுக்கும் லக்ஷ்மிக்கும் அரிச்சுவடி சொல்லித் தர ஏற்பாடு பண்ணப் போறேன்'' என்றார்.

குறும்புதான்! 'இப்போதுதானே மாமியை சரஸ்வதின்னேள்? அதுக்குள்ளே பன்னிரண்டு வயசு பண்டாரி கிட்ட பாடம் கேட்க ஏற்பாடு பண்ணறேளே!' என்று ஹ்ருதயர் மனசுக்குள் எண்ணுவது அவருக்கா தெரியாது?

ஹ்ருதயர், பீதாம்பர் பண்டாரியை அழைத்து வந்தார். சுறுசுறுப்பும் குட்டிகையும் சொட்டும் முகத்துடன் அந்தப் பிள்ளை வந்தது.

பாடம் படிக்கப் போகிறோம் என்பதில் சாரதாவுக்கு எல்லையில்லாத குஷி. ஆயினும் தன் இயல்பான அடக்கத்துடன், புத்தகத்திலிருந்து கொண்டு பாடம் படிப்பது அதிகப்பிரசங்கித்தனமோ என்ற அச்சத்துடன் குனிந்த தலை நிமிராமல் வந்து உட்கார்ந்தாள்.

நாலரை வயசுக் குழந்தை லக்ஷ்மி குதி போட்டுக் கொண்டு வந்தமர்ந்தது.

''பொம்மனாட்டிகளுக்குப் படிப்பு எதுக்கு?'' என்று மதனி முனகினாள்.

''மன்னி, நானும் உங்க மாதிரி கர்நாடகம்தான். பொம்மனாட்டிகள் புருஷாளாட்டம் தஸ்புஸ்ஸுனு இளம்பறது எனக்கும் பிடிக்காதுதான். ஆனா, எழுத்தறிவு எல்லாருக்கும் வேணும் மன்னி. நம்ப ராமாயணம், பாரதம், தேவி மாகாத்மியம் இதெல்லாமாவது படிக்கத் தெரிய வேண்டாமா?'' என்றார் ராமகிருஷ்ணர்.

''லக்ஷ்மி பச்சைக் குழந்தை.....'' என்று மதனி மீண்டும் ஆட்சேபக் குரல் எழுப்ப ராமகிருஷ்ணர் சொல்வார்: '' பச்சைக் கிளி இருக்கே, அதுக்குக் கழுத்துலே கோடு வரத்துக்கு முந்தியே தான் பேச்சுச் சொல்லித் தருவா. அதுக்கு அப்புறம் கிளியோட நாக்கு முற்றிப் போயிடும். பேச வராது. அதே மாதிரி புத்தி பிருவாறத்துக்கு முந்தியேதான் பாடம் ஆரம்பிக்கணும். மன்னி, 'கல்லாம்பரதம்' குட்டிக்கறச் சேயே தும்மாதேயுங்களேன்'' என்று மன்றாடினார் ராமகிருஷ்ணர்.

அவர்தான் ஜயித்தார். புரட்சிகரமாகத் தாம் ஏதோ செய்வதாக வெளியில் துளிக்கூடத் தெரியாமல் எத்தனை எத்தனையோ பெருமைகளை ஜயித்துக் காட்டியவரல்லவா?

அரிச்சுவடிப் புத்தகத்தைக் கையில் எடுத்தாள் சாரதை. பல வருடங்களுக்குமுன் ஜயராம்பாடி பள்ளியில் சிறிது காலம் படித்த, ஆனா ஆவன்னா வெல்லாம் நினைவுக்கு வந்தன. பல ஆண்டுகளுக்குமுன் பார்த்த அருமை உறவினர்களை மீண்டும் சந்திக்கிற ஆனந்தம், எப்போதோ கேட்டு ஆனந்தித்த ராகத்தை மீண்டும் கேட்கிற மகிழ்ச்சி அவளுக்கு உண்டாயிற்று.

'' இந்த எழுத்தெல்லாம் எனக்கு நினைவு இருக்கு. கடைசியிலேதான் புரியல்லே.....'' என்று புத்தகத்தை பண்டாரியிடம் நகர்த்தினாள்.

''இது ச; இது ஷ; இது ஸ'' என்று விளக்கினான் பண்டாரி.

''பொம்மனாட்டிகளுக்கு இந்த மூன்று எழுத்தும் மறந்து போகவே கூடாதே!'' என்று அர்த்த புஷ்டியுடன் கேட்டுவிட்டுச் சிரித்தார் ராமகிருஷ்ணர்.

'பொறுமை'க்கு வடமொழி 'ஸஹனம்' என்பது. அதை வங்காளியில் 'சஹனம்' 'ஷஹனம்' 'ஸஹனம்' என்று மூன்றுவிதமாகவும் சொல்வார்கள். ச — ஷ — ஸ என்றாலே பொறுமை என்று அர்த்தம் கொள்வார்கள். முக்காலும் பொறுமையாக இருக்க வேண்டும் என்பதுதான் சாரதாமணிக்கு ஆரம்ப பாடமாக அமைந்தது!

ஆம், அவளது பொறுமையைச் சோதிக்க இனி எத்தனை எத்தனையோ சம்பவங்கள் நடக்கப் போகின்றன!

அன்று மாலை ஊராருக்கு ராமகிருஷ்ணர் உபதேசித்தபோது — 'உபதேசம்' என்கிற ஹோதா எண்ணமேயின்றி உரையாடிய போது — பைரவி பிராம்மணி அருமையே உருவாக அலமாந்து அமர்ந்திருந்தாள்.

ராமகிருஷ்ணரோ அலுங்காமல் நலுங்காமல் அன்பு தரும் சமன நிலையில் பேசிக் கொண்டிருந்தார். யாரோ சாதுவின் லட்சணத்தைக் கேட்டார்கள். அவர் தம்மையே வர்ணித்துக் கொள்கிறோம் என்ற பிரக்ஞை அணுவளவுமில்லாமல் சொல்லிக்கொண்டு போனார்: ''மனசில் எந்தச் சுமையும் இல்லாதவன் தான் சாது. சுமையை ஏற்றிக் கொண்டால் உடனே துன்பம் வந்து சேரும். தலையில் ஸ்தூலமாகச் சுமையை வெச்சிண்டால் உடம்பை அது பாதிக்கிற மாதிரியேதான் மனச்சுமையும் உடம்பை பாதிக்கிறது; முகத்திலே அழகு மங்கிப் போறது; நெற்றியிலே சுருக்கம் விழறது. இப்படியெல்லாம் இல்லாம காலங் கார்த்தாலே வீசற தென்றல் மாதிரி சுயேச்சையா, அன்றலர்ந்த புஷ்பம் மாதிரிப் புதுசா, பனித் துளியைப் போலப் பரிசுத்தமா மனசை வெச்சுண்டவன்தான் பாக்கியசாலி. மனசைப் பாலா வெச்சுக்கணும். அதாவது பாலகனா வெச்சுக்கணும். குழந்தைக்கு மனசுலே என்ன சுமை இருக்கு? குழந்தையாயிடணும். பார்க்கிற இடமெல்லாம் எங்கம்மா, ஆனந்தமயீ, ஜகதம்பிகை, சர்வேசுவரி, பவதாரிணியே இருக்கான்னு தெரிஞ்சுண்டு அவளுக்குக் குழந்தையாயிருந்துடணும். குழந்தைப் பிராயம் மனசிலேருந்து போயிட்டா, அப்புறம் கிருஹஸ்தனுக்கு இருக்கிற அத்தனை பாரமும் வந்துடும்.....''

தற்காலிகச் சுகபோகங்களுக்காக நாம் நம்முடைய ஒழுக்கத்தைப் பழுதாக்கிக் கொள்ளலாகாது. வாழ்வில் இன்பம் பெறுவதற்குரிய வழி நம்முடைய ஒழுக்கத்தைப் பாதுகாப்பதையே பொறுத்ததாகும். ஒழுக்கம் தவறினால் அதை எளிதில் பழுது பார்க்க முடியாது.





நம்முடைய தேகமும் உள்ளமும் ஆண்டவனுடைய கோயில். அதைச் சுத்தமாக வைத்துக் காப்பது நம் கடமை.

பணிவே உருவான ஸ்ரீநிவாஸ சாங்காரி இடைமறித்துக் கேட்டார்: ''அப்படீன்னு, கிருஹஸ்தாளாக இருக்கிற எங்க கதி என்ன?''

'' கவலைப்படாதே, சாங்காரி !'' என்று அபயமொழி தந்தார் ராமகிருஷ்ணர்: '' கிருஹ—ஸ்தன்னு 'வீட்டிலே இருக்கிறவன்'னு அர்த்தம். இவன்தான் வீட்டிலே இருக்கான். இவனுக்குள்ளே வீடு இல்லே. படகு தண்ணிலே இருந்தா ஆபத்து இல்லே. படகுக்குள்ளே தண்ணியிருந்தாதான் ஆபத்து. வெளியிலே கிருஹஸ்தனு இருக்கலாம். மனசிலே கிருஹஸ்தனுயிடப்படாது. அப்படிப்பட்டவன் பெண்டாட்டிக்குப் பக்கத்திலே இருந்தாலும் அவன்தான் சாது. 'நேங்க்டா' அப்படித்தான் எனக்கு உபதேசம் பண்ணினுர். ஒருத்தனிடம் அன்பும் அறிவும் நன்னு முற்றி, அவன் இருதயத்தைப் பூரணமாக அம்பாளுக்கே அர்ப்பணம் பண்ணிட்டு இருந்துட்டான்னு போதும் — அவன் எங்கேயிருந்தாலும் சாதுதான். புருஷாளுக்குச் சொல்லறதேதான் பொம்மனாட்டிகளுக்கும். அவா புருஷாளைவிட உசந்தவா. எல்லாத்திலேயும் தேவி இருந்தாலும்,

நவ தேவீ பேதா: ஸ்த்ரிய: ஸமஸ்தா ஸகலா ஜகத்ஸு

ன்னு 'சண்டீ'லே சொல்லியிருக்கிற மாதிரி, பெண்டுகள்ளாம் விசேஷமாக அம்பாளோடே ஸ்வரூபம். ஏன்னு, அம்மாவாகி அவா செய்யற அன்பும் தியாகமும் புருஷாளுக்குக் கிடைக்கிறதில்லேயோன்னோ? அவா தங்களோட பெருமையைத் தாங்களே தெரிஞ்சுக்கணும். புருஷனோட இருக்கச்சயே சரீர இச்சையைத் தூக்கி எறிஞ்சுட்டு அப்பட்டமாவே திவ்ய மாதா ஆயிடணும்.''

அங்கு கூடியிருந்த நல்ல பெண்கள் அனைவரும் ஆழ்ந்த பெருமூச்சு விட்டனர். 'அப்படி ஆவோமா?' என்ற ஏக்கத்தில் எழுந்த பெருமூச்சு அது! பைரவியோ இத்தனை நாழிகையும் ராமகிருஷ்ணர் தம்மையும் சாரதையையும் பற்றியே மறைமுகமாகத் தம்பட்டம் அடித்துக் கொள்வதாக எண்ணிக் கொல்லன் துருத்தியாக ஆத்திரப் பெருமூச்சு விட்டாள். 'நேங்க்டா'வைப் பற்றி ராமகிருஷ்ணர் கூறியது வேறு அவளுடைய ஆத்திர அக்கினிக்கு ஆகுதி சொரிந்தது. ராமகிருஷ்ணருக்குத் துறவு தந்து வேதாந்தம் போதித்த தோதாபுரியை அவர் 'நேங்க்டா' என்றே சொல்வார். 'நக்ன' (திகம்பரர்) என்பதன் மரூஉ 'நேங்க்டா'. பைரவிக்குத் தன்னிடம் தந்திரங்கள் பயின்ற ராமகிருஷ்ணர், தோதாபுரியிடம் வேதாந்தம் அப்பியசித்ததே பிடிக்கவில்லை. அதோடு, பெண் சங்கத்தை ராமகிருஷ்ணர் அடியோடு விடவேண்டும் என்று தான் கண்டிப்பாக இருக்கும்போது இந்தத் திகம்பர சாமியார் பெண் சங்கத்திலும் துறவை நிலைநாட்டுமாறு ராமகிருஷ்ணருக்கு உபதேசித்தது பைரவியின் எரிச்சலை அதிகமாக்கியது.

பெண்கள் பக்கம் திரும்பிய ராமகிருஷ்ணர் பேசினுர்: ''என் அம்மாக்களே! நீங்கள்ளாம் மஞ்சள், வாசனைப் பொடி பூசிண்டு குளிக்கிறேளோன்னோ? அது மங்களத்துக்கு மங்களம், ஆரோக்கியத்துக்கு ஆரோக்கியம். அதோட ஜலத்திலே இருக்கிற கெட்ட கிருமிகளும் மஞ்சள் காரத்திலே, வாசனைப் பொடி நெடியிலே செத்துப் போகும். இப்படியே விவேகம்னு ஒரு மஞ்சள், வைராக்கியம்னு ஒரு வாசனைப் பொடியைப் பூசிண்டு குடும்ப சாகரத்தில் முழுகுங்கோ — அதிலே இருக்கிற கெட்டதுகள்ளாம் செத்தே போயிடும்; சம்ஸார சாகரமே சச்சிதானந்த சாகரமாயிடும்.''

''கதாயீ, நீ சொல்றச்சே எல்லாம் புரியறது. அநுபவத்திலேதான் வரமாட்டேங்கறது. சம்ஸார சாகரத்திலே இந்தப் பெரிய விஷயமெல்லாம் சாத்தியமேயில்லேன்னு அடியோட அவநம்பிக்கை வந்துடறது....'' என்று நெட்டுயிர்த்தாள் தனியம்மை.



''மாமீ, உங்க புருஷரோட பட்டறைக்கு நீங்க போயிருக்கேளோ ?'' என்று வினவினார் ராமகிருஷ்ணர்.

''ஓ!'' என்றாள் தனி. அவள் கருமார் வகுப்பைச் சேர்ந்தவள்.

''பட்டறையிலே நடுநாயகமா பட்டறைக் கல்லுனு ஒண்ணு இருக்கு இல்லியா ? அத்தனை பண்டங்களையும் அது மேலே வைச்சுத்தான் எல்லா ஆயுதங்களாலேயும் அடிக்கிறா. அடிவாங்கற பண்டமெல்லாம் வளையறதுகள், தகர்றதுகள், புதுப் புது ரூபம் எடுக்கறதுகள். ஆனா அந்தப் பண்டங்களை விட ஜாஸ்தி அடியை ஓயாமல் வாங்கிண்டிருக்கிற பட்டறைக் கல் மட்டும் அந்த ரூபத்திலேயே இருக்கு; இருக்கிற இடத்தை விட்டு அங்குலம்கூட நகர்றதுமில்லே. பட்டறைக் கல் மாதிரி ஒரு பொறுமையை மனசுலே உண்டாக்கிக்கணும். சம்ஸாரத்திலே எத்தனை அடிபட்டாலும், எதெது எப்படி மாறினாலும் பொறுமை மாறாமல் இருக்கணும். அப்போ நம்ப மனசுக்கு வர வஸ்துவை யெல்லாம் பிரயோஜனமாகிற ரூபத்திலே மாற்றி அனுப்பிவிடலாம். பொம்மனாட்டிகளுக்குப் பொறுமைதான் பெரிய பூஷணம்.''

ஊருக்கே பெரிய மனுஷியான பிரஸன்னாவின் கண்கள் அருவியைப் பொழிந்தன. ''என் அப்பனே! ஸ்திரீ தர்மத்தை இவ்வளவு நன்னாச் சொல்ல உனக்கு எப்படித்தெரிஞ்சுதோ?'' என்று சிலாகித்தாள். பிறகு பைரவியைப் பார்த்து, ''நிர்மூடங்களான எங்களுக்கு நீங்களும் ஸ்திரீ தர்மம் சொல்லுங்கோ'' என்று வேண்டினாள்.

ராமகிருஷ்ணர் அவ்வளவு அழகாகப் பேசுமிடத்தில் தான் எதைச் சொல்வது என்ற சிறுமை உணர்ச்சி பைரவியைப் பிடுங்கித் தின்றது. சிறுமையானது பொய்ப் பெருமைக்குத் தூபம் போட்டது: ''நான் தனியா என்ன சொல்லணும்? இத்தனை நாழி உங்க கதாயி பேசினதெல்லாம் நான் சொல்லிக் கொடுத்ததுதானே! கிராமாந்தரத்து கதாயியை நான்தானே சகல சாஸ்திரங்களிலேயும் அநுபவங்களிலேயும் தோய்க்கத் தோய்க்க எடுத்து இப்ப நீங்க பார்க்கிற ரூபத்துக்குக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கேன்?'' என்று வெட்கமேயில்லாமல் சொன்னாள் பிராம்மணி.

அங்கு கூடியிருந்த அனைவருக்கும் அது சுரீரென்று பட்டது. ஹ்ருதயரின் இதயமோ குளவி துளைத்த பூவாகத் துடித்தது. 'அகம்பாவப் பைசாசமே, சமயம் வரட்டும், உன்னை ஒரு கை பார்க்கிறேன்' என்று அது வன்மம் பூண்டது.

ராமகிருஷ்ணர் மட்டும் அமைதியுடன், ''ஆமாம், நானே சொல்லியிருக்கணும் — இத்தனையும் இவா போட்ட பிச்சைதான்'' என்று பவ்யமாகச் சொன்னார்.

சாரதாமணியும் தனது பிராண நாயகனை ஒரு புழுவுக்குச் சமானமாகப் பைரவி பேசியதில் புழுங்கவில்லை. புழுக்கத்தின் சிறிய கவடு வந்தவுடனேயே 'பொறுமை' என்கிற சாளரத்தைத் திறந்து வைத்துக் கொண்டு நிம்மதிக் காற்றை அநுபவித்தாள் அவள். 'ச — ஷ — ஸ ; கருமானின் பட்டடைக் கல்' — இந்த உபதேசங்கள் அவள் மனத்தில் அப்படி ஆழப் பதிந்துவிட்டன. கற்ற வித்தையைக் காரியத்தில் கைவிடுபவள் அல்ல அவள்! 'வித்யா விநய ஸம்பன்ன' என்று கீதாசாரியன் சொன்னபடி விநயத்துடன் சிறிதளவு வித்தையையும் தன்னுள் தேக்கிக் கொண்டவள் சாரதா பிரம்மாணி; பெரிய வித்தைகளைக் கற்றும் அகங்காரத்தினால் அதன் பலனைத் தோற்றவள் பைரவி பிராம்மணி. (தொடரும்)




காடும் சருகும்

தமிழ்முடி

தன்னலமே இல்லாத காந்தி அண்ணல்
சாத்விகப் புதுமுறையில் உண்ணா நோன்பைப்
புன்னகைத்து மேற்கொண்ட போதி லெல்லாம்
புகழ்வெற்றி பெற்றிட்டார்! ஆனால் இன்றோ
அண்ணல்போல் பற்பலரும் உண்ணா நோன்பை
அடுக்கடுக்காய் மேற்கொண்டும் வெற்றி காணா
சின்னாளிலே எதனாலே எனக்கேட் டார்க்குச்
செப்பினார் ராஜாஜி உவமை ஒன்றாய்
''பெருங்காடு தீப்பற்றி எரிந்திட்டாலே
பெரும்வைர நிலக்கரியின் சுரங்கமாகும்!
சருகான வைக்கோற்போர் எரிந்திட்டாலே
சாம்பலின்றி வேறென்ன கிடைக்கும்?'' என்றார்.





அன்றும்
இன்றும்..சிலருக்கு அதே
இளந்தளிர்
மேனி!



பியர்ஸ் சருமக் களை ... கன்னிப் பருவக் களை

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

லிண்டாஸ் - PS. 36-140 TM

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

அத்தியாயம் எழுபத்தாறு

வடவாறு திரும்பியது!

இந்த நெடுங்கதையில் வரும் பாத்திரங்களில் சிலர் முன்னுக்குப் பின் முரணாகப் பேசியும் நடந்தும் வருவதை வாசகர்கள் கவனித்திருப்பார்கள். அதற்கு நாம் பொறுப்பாளிகள் அல்லவென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். மனித இயற்கை என்றைக்கும் ஒரே மாதிரி இருப்பதில்லை. சூழ்நிலையும் பல்வேறு சம்பவங்களும் அவர்களுடைய மனப் போக்கையும் நடத்தையையும் மாற்றுகின்றன. நேற்றைக்கு ஒருவிதமாகப் பேசி நடந்து கொள்ளுகிறவர்கள் இன்றைக்கு முற்றும் முரணான முறையில் நடந்து கொள்கிறார்கள். பெரிய பழுவேட்டரையர் இக்கதையின் ஆரம்பத்தில் ஒரு பெரிய இராஜரீகச் சதியாலோசனைக்குத் தலைவரா யிருந்தார். இப்போது பலரறியத் தாம் செய்த குற்றத்தை எடுத்துச் சொல்லி அதற்குப் பிராயச்சித்தமாகத் தம் சிரத்தைத் தாமே துணித்துக் கொண்டு உயிரை விட விரும்பினார்.

பெரிய சம்புவரையர் இளவரசர் கரிகாலரின் உயிரற்ற உடலைக் கண்டதும் அடைந்த திக்பிரமையில், எப்படியாவது அந்தப் படுகொலைப் பழி தம் குடும்பத்தின் மீது சாராமற் போக வேண்டுமென்னும் கவலையினால், தமது பழைய மாளிகையையே எரிக்க முற்பட்டார். அந்தப் பழியை வேறு யார் தலையிலாவது சுமத்திவிட வேண்டும் என்று ஆவல் கொண்டு தம் மகனையும் அந்த முயற்சியில் ஏவி விட்டார். இப்போது குற்றம் தம் பேரில் சாரவில்லை என்று அறிந்த பிறகு தம் அருமைப் புதல்வி வந்தியத்தேவன் பேரில் கொண்டிருந்த அன்பின் ஆழத்தை அறிந்த பிறகு, வேறு விதமாகப் பேசலானார்.

இந்தக் கதையின் ஆரம்பத்தில் மூடு பல்லக்கில் மறைந்து வந்த போலி மதுராந்தகனையே உண்மை மதுராந்தகன் என்றும், அவனே பின்னால் உத்தம சோழச் சக்கரவர்த்தியாகப் போகிறான் என்றும் வாசகர்கள் நம்பும்படியாகச் செய்திருந்தோம். கதைப் போக்குக்கு அது அவசியமா யிருந்தது. ஏன்? முதன் மந்திரி அநிருத்தருக்கு ஓரளவு பழைய இரகசியங்கள் தெரிந்திருந்த போதிலும், அவரும் மதுராந்தகரே முடிசூட்டப்பட வேண்டும் என்று கருதினார். அக்காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளின் முன் பின் விவரங்களை அவர் பூரணமாக அறிந்திருக்கவில்லை. ஆகையால், போலி மதுராந்தகர் கண்டராதித்தரின் புதல்வர் அல்லவென்றும் சுந்தர சோழருக்கும் மந்தாகினிக்கும் பிறந்த புதல்வர் என்று எண்ணினார். அதனால் அவரும் தடுமாற்றம் அடைந்து முன்னுக்குப் பின் முரணாக நடந்து கொள்ள வேண்டியதாயிற்று.

இந்தக் கதையிலேயே நேர்மையில் சிறந்தவர் என்றும், சத்திய சந்தர் என்றும் நாம் கருதி வந்த அருள்மொழித் தேவர் முன்னுக்குப் பின் முரணாகப் பேசியதை நாம் கடைசியாகப் பார்த்தோம். இத்தனை காலமும் தமக்கு அரசுரிமை வேண்டவே வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருந்தவர் இப்போது திடீரென்று தம் போக்கை மாற்றிக் கொண்டு ''நானே முடிசூட்டிக் கொள்வேன்'' என்று பலர் அறியச் சொல்ல ஆரம்பித்து விட்டார். சமய சந்தர்ப்பங்கள்தான் அவருடைய இந்த மாறுதலுக்குக் காரணம் என்பதை நாம் எடுத்துக் காட்ட வேண்டிய அவசியம் இல்லை அல்லவா?

* * *

ஆம்; அருள்மொழித் தேவரின் வார்த்தைகள் அங்கிருந்தோர் அனைவரையும் வியப்பும் திகைப்பும் அடையச் செய்தன. அதே சமயத்தில், அவர்

களுடைய மனத்தில் ஒரு நிம்மதியையும் உண்டாக்கின. சோழ சிங்காதனம் ஏறுவதற்கு எல்லா வகையிலும் தகுதியானவரும் உரிமையுள்ளவரும் பொன்னியின் செல்வர்தான் என்பதை அனைவரும் உள்ளத்தின் உள்ளே அந்தரங்கத்தில் உணர்ந்திருந்தார்கள். சோழ சாம்ராஜ்யத்தில் வாழ்ந்த மிகப் பெரும்பாலான மக்களின் விருப்பமும் அதுவே என்பதை அறிந்திருந்தார்கள். மக்களின் பொது விருப்பத்துக்கு மாறாக வேறொருவரைச் சிங்காதனம் ஏறச்செய்தால் அதனால் நேரக்கூடிய பின் விளைவுகள் எப்படி இருக்குமோ என்ற கவலையும் அவர்கள் மனத்தில் இருந்தது.

ஆனாலும் பல்வேறு காரணங்களினால் அங்கிருந்தவர்களில் யாரும் பொன்னியின் செல்வருக்கு முடிசூட்ட வேண்டும் என்று சொல்லத் துணியவில்லை.

இப்போது பொன்னியின் செல்வரே முன்வந்து ''நானே மகுடம் சூட்டிக் கொள்ளப் போகிறேன்; தங்கள் திருக்கரத்தினால் முடிசூட்ட வேண்டும்!'' என்று பெரிய பழுவேட்டரையரைப் பார்த்துக் கூறியதும், அனைவருடைய உள்ளத்திலும் அமைதியும் மகிழ்ச்சியும் உண்டாயின. ''நல்ல முடிவு ஏற்பட்டு விட்டது; ஆனால் அந்த முடிவு செய்யவேண்டிய தர்மசங்கடமான பொறுப்பு நம்மை விட்டுப் போய்விட்டது!'' என்று உவகையும் ஆறுதலும் அடைந்தார்கள்.



பொன்னியின் செல்வரிடம் குடிகொண்டு பிரகாசித்த அபூர்வமான காந்த சக்தியானது, அவர் எதிரில் அவருக்கு விரோதமாக யாரும் பேச முடியாமல் செய்தது என்பதை முன்னம் நாம் பார்த்திருக்கிறோம். ஏன்? வைர நெஞ்சம் படைத்த சின்னப் பழுவேட்டரையர்கூடப் பொன்னியின் செல்வரை நேரில் கண்டதும் தலை வணங்கி அவருக்கு முகமன் கூறி வரவேற்றதை நாம் பார்த்தோம் அல்லவா ?

பெரிய பழுவேட்டரையர் தம் உயிரைத் தாமே போக்கிக் கொள்ளும் முயற்சியைப் பொன்னியின் செல்வர் தடுத்து நிறுத்தியதை அறிந்தார். அவருடைய வார்த்தையின் பொருளையும் உணர்ந்தார். இளவரசரின் செயலும் சொற்களும் அவரது உள்ளத்தை நெகிழச் செய்தன. உணர்ச்சி மிகுதியினால் அவருடைய உடலும் நடுங்கியது. கண்களில் கண்ணீர் மல்கியது. நாத் தழுதழுத்தது.

ஒருவாறு மனத்தை விரைவில் திடப்படுத்திக் கொண்டு அவர் கூறினார் : ''சோழ குலத் தோன்றலே! பொன்னியின் செல்வ ! தங்களுடைய சொற்கள் எனக்கு அளவிலா மகிழ்ச்சியை அளித்தன. தாங்களே முடிசூட்டிக் கொள்ள வேண்டும் என்று நான் தங்களை வேண்டிக் கொள்ள எண்ணினேன். சோழ குலத்துக்கே துரோகியாய்ப் போய் விட்ட எனக்கு அந்த வேண்டுகோள் விடுக்கவே உரிமையில்லை என்று பேசாதிருந்தேன். தங்களுடைய பெரிய பாட்டனாரும் மகா புருஷருமான கண்டராதித்த சக்கரவர்த்தி ஓர் ஏற்பாடு செய்துவிட்டுப் போனார். தமது சகோதரர் வமிசத்தில் வந்தவர் சிங்காதனம் ஏறவேண்டும் என்று அந்த மகான் வற்புறுத்திக் கூறினார். அவர் செய்திருந்த ஏற்பாட்டுக்கு விரோதமாக நாங்கள் சிலர் காரியம் செய்ய எண்ணினோம். எங்களுக்குள் ஏற்பட்டிருந்த மாற்சரியத்தினால் அந்தச் சிவ பக்த சிரோமணியின் விருப்பத்துக்கு மாறாக மதுராந்தகத் தேவருக்குப் பட்டம் சூட்ட எண்ணினோம். தங்கள் தந்தையும் அதற்கு உடன்பட்டுவிட்டார். நாங்கள் கருதியது நிறைவேறியிருந்தால், எவ்வளவு பெரிய விபரீதம் ஆகியிருக்கும் என்று எண்ணும்போது என் குலை நடுங்குகிறது! இளவரசே ! தங்கள் தந்தை வீற்றிருக்கும் சோழ சிங்காதனத்துக்கு உரிமை பூண்டவர் தாங்கள்தான். சோழ சாம்ராஜ்யத்தின் மணிமகுடத்தை அணிவதற்குத் தகுதி வாய்ந்தவரும் தாங்கள்தான்! தாங்கள் சின்னஞ்சிறு பாலகனாக இருந்தபோது என் மார்பிலும் தோளிலும் ஏந்திச் சீராட்டியிருக்கிறேன். அப்போதெல்லாம் தங்கள் அங்க அடையாளங்களையும் தங்கள் கரங்களை அலங்கரிக்கும் ரேகைகளையும் பார்த்து, 'இந்தப் பூமண்டலத்தையே ஆளும் மன்னாதி மன்னர் ஆகப் போகிறீர்கள்' என்று நானும் சொல்லிக் கொண்டிருந்தேன். ஓடத்திலிருந்து காவேரியின் வெள்ளத்தில் விழுந்து முழுகிப் போன தங்களைக் காவேரி அன்னை கரங்களில் ஏந்தி எடுத்துக் கொடுத்ததைப் பற்றி எத்தனையோ நூறு தடவை சொல்லி மகிழ்ந்திருக்கிறேன். இந்த மூன்று வருஷ காலத்திலேதான் காமக் குரோத மத மாற்சரியங்கள் என் மனத்தைக் கெடுத்துவிட இடங் கொடுத்துத் துரோகியாய்ப் போய்விட்டேன். பொன்னியின் செல்வ! தாங்கள் சோழ சிங்காதனம் ஏறி மணி மகுடம் புனைவது முறையானது ; தகுதியானது. ஆனால் அந்த மணி மகுடத்தை எடுத்துத் தங்கள் சிரசில் சூடும் தகுதியை நான் இழந்துவிட்டேன்! என் கரங்களும் இழந்துவிட்டன ! இந்தக் கரங்களினால் நான் இனி செய்யக்கூடிய புனிதமான காரியம் என் குற்றத்துக்குப் பரிகாரமாக என்னை நானே மாய்த்துக் கொள்ளுவது தான் !''

''இல்லை, இல்லை! கூடவே கூடாது!'' என்று அந்த மந்திராலோசனை சபையில் பல குரல்கள் எழுந்தன.

சுந்தர சோழர் உருக்கம் நிறைந்த குரலில் கூறினார் : ''மாமா! இது என்ன வார்த்தை! இது என்ன காரியம்! தாங்கள் சோழ குலத்துக்கு அப்படி என்ன துரோகம் செய்துவிட்டீர்கள் ? ஒன்றுமில்லையே? என்னுடைய குமாரர்களுக்குப் பதிலாக என் பெரியப்பாவின் குமாரரைச் சிங்காதனத்தில் அமர்த்த எண்ணினீர்கள். அது சோழ குலத்துக்கு எப்படித் துரோகம் செய்வதாகும்? என் புதல்வர்களைக் காட்டிலும் என் பெரிய தந்தையின் குமாரனுக்குச் சோழ குலத்து மணிமகுடம் புனைய அதிக உரிமை உண்டல்லவா? இப்போதுகூட, என் மனத்தில் உள்ளதைச் சொல்ல நீங்கள் அநுமதி கொடுத்தால்....''

முதன்மந்திரி அநிருத்தர் குறுக்கிட்டு, '' பிரபு ! இந்த நாடெங்கும் 'அருள்மொழி வர்மரே திருமுடி சூடவேண்டும்' என்ற குரல்கள் ஒலிக்கின்றன. இத்தனை நாளாக அஞ்ஞாத வாசம் செய்து வந்த கண்டராதித்த தேவரின் திருக்குமாரரும் அதே உறுதி கொண்டிருக்கிறார். பொன்னியின் செல்வரும் அதே



முடிவுக்கு வந்து விட்டார். இனி, அதற்கு மாறான யோசனை எதுவும் செய்வதில் பயன் ஒன்றுமில்லை !'' என்றார்.

'' நீங்கள் யாரேனும் அவ்வாறு யோசனை செய்தாலும் நான் ஒப்புக் கொள்ள முடியாது!'' என்றார் சேந்தன் அமுதனாகிய மதுராந்தகத் தேவர்.

'' என் மகன் கூறுவதுதான் சரி. இனி வேறு யோசனையே வேண்டியதில்லை !'' என்றார் செம்பியன் மாதேவியார்.

''அன்னையே! தங்கள் வார்த்தைக்கு எதிர் வார்த்தை கூறக்கூடியவர் இங்கு யாரும் இல்லை. கடவுளின் விருப்பத்தின் படி நடக்கட்டும். ஆனாலும் பழுவூர் மாமா நம் குலத்துக்குத் துரோகம் செய்துவிட்டதாகக் கூறித் தம் உயிரை மாய்த்துக் கொள்ள விரும்புவது சரியில்லைதானே? தங்கள் திருக்குமாரருக்கு முடிசூட்ட வேண்டும் என்று அவர் பிரயத்தனப்பட்டது சோழ குலத்துக்குத் துரோகம் செய்தது ஆகாது அல்லவா?'' என்றார் சக்கரவர்த்தி.

பெரிய பழுவேட்டரையர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு கூறலுற்றார் : ''ஐயா ! கேளுங்கள் ! என்னுடைய முயற்சி பலிதமாகியிருந்தால் எவ்வளவு பயங்கரமான விபரீதம் நடந்திருக்கும் என்பதைக் கேளுங்கள்! இதை நான் சொல்லாமலே என் உயிரை மாய்த்துக்கொள்ள விரும்பினேன். முக்கியமாக சோழ சாம்ராஜ்யத்தின் மேன்மையைத் தவிர வேறு எதையும் கனவிலும் கருதாதவனை என் சகோதரன் காலாந்தக கண்டனின் மனத்தைப் புண்படுத்தத் தயங்கினேன். ஆயினும் இப்போது என் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு உண்மையைச் சொல்லிவிடத் தீர்மானித்து விட்டேன். சக்கரவர்த்தி ! நாங்கள் மகான் கண்டராதித்தரின் குமாரர் என்று எண்ணிச் சோழ சிங்காதனத்தில் ஏற்றி வைப்பதற்கு இருந்தவன் சோழ குலத்துக்குப் பரம்பரைப் பகைவனான வீரபாண்டியனுடைய மகன்!....''

''ஐயையோ!'' ''இல்லை!'' ''அப்படி இருக்க முடியாது!'' என்றெல்லாம் அச்சபையில் குரல்கள் எழுந்தன.

''உங்களுக்கு நம்புவது கஷ்டமாகத் தானிருக்கும். என் காதினாலேயே நான் கேட்டிரா விட்டால் நானும் நம்பியிருக்க மாட்டேன். அரசர்க்கரசே ! என்னுடைய அவமானத்தை நான் மீண்டும் சொல்லிக் கொள்ள வேண்டியிருக்கிறது. மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் நான் எந்தப் பெண்ணின் முக லாவண்யத்தைக் கண்டு மயங்கி மோக வலையில் வீழ்ந்து அவளை என் அரண்மனையில் சர்வாதிகாரியாக்கி வைத்திருந்தேனோ, அவள் வீரபாண்டியனுடைய மகள் ! அவள் வாயினால் இதை ஆதித்த கரிகாலரிடம் சொல்லியதை நான் என் காதினால் கேட்டேன். வீர பாண்டியனை ஆதித்த கரிகாலர் கொன்றதற்குப் பழிக்குப் பழி வாங்கவே பழுவூர் அரண்மனைக்கு அவள் வந்திருந்தாள். அதற்குத்தான் சமயம் பார்த்துக் கொண்டிருந்தாள்! அந்தப் பாதகியும் அவளுடன் சதி செய்தவர்களும் கரிகாலரைக் கொன்றுவிட்டு வீரபாண்டியனுடைய குமாரனையே சோழ சிங்காதனத்தில் ஏற்றி வைக்கத் திட்டமிட்டிருந்தார்கள். நம் குலதெய்வமான துர்க்காதேவியின் அருளினால் அத்தகைய கொடிய விபரீதம் நேராமல் போயிற்று. துர்க்கா பரமேசுவரி என் கண்களைத் திறப்பதற்காகவே அந்த வாணர் குலத்து வீரனை அனுப்பி வைத்தாள். அவன் மூலமாகவே இந்தப் பயங்கரமான இரகசியங்களை நான் அறிய முடிந்தது. இன்னும் சில செய்திகளை அவனிடம் நான் கேட்டறிய வேண்டுமென்று இருந்தேன். அவனை இந்த இளஞ் சம்புவரையன் கொன்று வடவாற்று வெள்ளத்தில் விட்டுவிட்டு வந்து விட்டான் ! நிர்மூடன் !''

இந்த வார்த்தையைக் கேட்டு அங்கிருந்தோர் அனைவரும் திகைத்துப் போய் நிற்கையில், கந்தமாறன் மட்டும்



நாம் கஷ்டப்பட்டு மனச்சாட்சிக்கு நியாயமாகப் பக்தி சிரத்தையுடன் உழைத்தாலன்றி வெற்றி பெறமுடியாது. ஆசை இருந்தால் மட்டும் போதாது. லட்சியத்தில் பக்தி வேண்டும். பெரும் முயற்சிகள் அனைத்துக்கும் சிரத்தை தேவை.

''ஐயா! எப்படியும் அந்த வந்தியத்தேவனும் சதிகாரக் கும்பலுடன் சேர்ந்தவன் தானே? அவனை நான் வேலெறிந்து கொன்றதில் குற்றம் என்ன?'' என்றான்.

பெரிய பழுவேட்டரையர் அவனைக் கோபமாகத் திரும்பிப் பார்த்தார். அச்சமயம் அநிருத்தர் குறுக்கிட்டு, ''ஐயா! வாணர்குல வீரனைக் கொன்றுவிட்டதாக இவன் சொல்லுகிறான். அவ்வளவு தானே? இவன் வேலெறிந்து கொன்றவன் வந்தியத்தேவன் என்பது என்ன நிச்சயம்?'' என்று கேட்டார்.

பார்த்திபேந்திரன் சிறிது தணிவான குரலில், ''வடவாற்றுவெள்ளம் திரும்பி மேற்கு நோக்கிப் பாய்ந்து செத்தவனின் உடலைக் கொண்டு வந்தால், ஒரு வேளை உண்மை வெளியாகும்!'' என்றான்.

''யார் கண்டது? வடவாற்று வெள்ளம் திரும்பிப் பாய்ந்தாலும் பாயலாம்!'' என்றார் முதன் மந்திரி அநிருத்தர்.

அவருடைய வாக்கை மெய்ப்படுத்துவதுபோல் அடுத்த கணத்தில் சொட்டநனைந்திருந்த ஈரத் துணிகளிலிருந்து தண்ணீர்த் துளிகளைச் சிந்த விட்டுக் கொண்டு வந்தியத் தேவன் அந்த மந்திராலோசனை மண்டபத்தில் பிரவேசித்தான்! அவனுடைய முகத்தின் மிரண்ட தோற்றமும், அவன் உள்ளே வந்த அலங்கோலமான நிலையும், வெள்ளத்தில் மூழ்கி இறந்தவனுடைய உடல் ஏதோ ஒரு ஜால வித்தையினால் எழுந்து நடமாடுவது போன்ற பிரமையைப் பார்த்தவர்களின் உள்ளத்தில் உண்டாக்கியது.

'' ஆகா! வடவாற்றின் வெள்ளம் திரும்பியே விட்டது! இறந்தவனையே உயிர்ப்பித்துக் கொண்டு வந்துவிட்டது!'' என்றார் முதன்மந்திரி அநிருத்தர்.

• • •

அச்சமயம் வந்தியத்தேவன் அங்கே அந்தக் கோலத்தில் எவ்வாறு வந்து சேர்ந்தான் என்பதை வாசகர்களுக்கு நாம் அறிவித்தாக வேண்டும்.

பொன்னியின் செல்வர், குந்தவை தேவி முதலியோர் தன்னைத் தனியே விட்டுச் சென்றபிறகு வந்தியத்தேவன் மிக்க மனச் சோர்வு அடைந்திருந்தான். வீர தீரச் செயல்கள் புரிந்து உலகத்தையே பிரமிக்க வைக்க வேண்டும் என்னும் ஆர்வம் கொண்டிருந்தவனுக்குப் பலரும் தன்னைப் பார்த்துப் பரிதாபமும் அநுதாபமும் கொள்ளும்படியான நிலையில் இருந்தது சிறிதும் பிடிக்கவில்லை. பாதாளச் சிறையைக் காட்டிலும் இந்த அரண்மனை அந்தப்புரத்துச் சிறை கொடியதாக அவனுக்குத் தோன்றியது. பொன்னியின் செல்வரின் தயவினால் அவன் பேரில் கரிகாலரைக் கொன்ற குற்றத்தைச் சுமத்தாமலும் அதற்காகத் தண்டனை அளிக்காமலும் ஒரு வேளை விட்டுவிடுவார்கள். ஆனால், அரண்மனையில் உள்ளவர்களுக்கெல்லாம் அவனைப் பற்றி ஒரு சந்தேகம் இருந்துகொண்டுதானிருக்கும். அவனைக் களங்கம் உள்ளவனாகவே கருதுவார்கள். இளைய பிராட்டி அவனிடம் காட்டும் இரக்கமும் அநுதாபமும் அவ்வளவுடன் நின்றுவிடும். சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாக முடிசூட்டிக் கொள்ளப் போகும் பொன்னியின் செல்வரின் திருத் தமக்கையாரைக் கைப்பிடித்து மணந்து கொள்வது கனவிலும் நடவாத காரியம். அரண்மனைப் பெண்கள் அவனை ஏதோ குற்றம் செய்து மன்னிப்புப் பெற்ற சேவகனாகவே மதித்து நடத்துவார்கள். அமைச்சர்களும் தளபதிகளும் அவனை அருவருப்புடன் நோக்குவார்கள். அரச குலத்தினரின் சித்தம் அடிக்கடி மாறக் கூடியது. இளவரசர் அருள்மொழிவர்மர் தான் அவன் மீது எத்தனை நாள் அபிமானம் காட்டி வருவார் என்பது யாருக்குத் தெரியும்?

ஆகா! முதலில் அவன் உத்தேசித்திருந்தபடி சேந்தன் அமுதன் குடிசைக்கு அருகில் குதிரை மேல் ஏறியிருந்தால், இத்தனை நேரம் கோடிக்கரையை அடைந்திருக்கலாம். ஏன்? ஈழத் தீவுக்கே போய்ச் சேர்ந்திருக்கலாம். தான் வைத்தியர் மகனால் தாக்கப்பட்ட சமயத்தில் குதிரை மேல் ஏறிச் சென்றவர்கள் யாராயிருக்கும்? ஒருவன் 'பைத்தியக்காரன்' என்று பெயர் வாங்கிய கருத்திருமன். உண்மையில் அவன் பைத்தியக்காரன் இல்லை; சூழ்ச்சித் திறமை மிக்கவன். அவனுடன் சென்றவர் யார்? பழைய மதுராந்தகத் தேவரைக் காணோம் என்கிறார்களே? அவராக இருக்கலாம் அல்லவா? ஆம், ஆம்! அப்படித்தான் இருக்க வேண்டும்! அவர்கள் இருவரும் சேர்ந்து தப்பித்துச் செல்வதில் ஏதோ பொருள் இருக்கிறது. அந்த மதுராந்தகர் உண்மையில் யார் என்பது இங்குள்ளவர்களுக்குத் தெரிந்தால் எத்தனை வியப்படைவார்கள்? அவர்கள் இருவரும் பத்திரமாக ஈழநாடு சென்றுவிட்டால் அதன் விளைவு என்னவாகும்? ஏன்? பாண்டிய நாட்டு மணி மகுடத்துக்கும் இரத்தின ஹாரத்துக்கும் உரியவன் அவற்றை அடைந்து விடுவான்! மகிந்தன் உதவியுடனே மறுபடியும் நாட்டை அடையப் போர் தொடங்குவான்.....! அப்படி நடவாமல் மட்டும் தடுக்க முடியுமானால்...? தடுக்கக் கூடிய ஆற்றல் உடையவன் தான் ஒருவன்தான்! இங்கே இந்த அரண்மனை அந்தப்புர அறையில் ஒளிந்து உயிர் வாழ்வதில் என்ன பயன்?

இவ்வாறெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டு வந்தியத்தேவன் அந்த அறையில் அங்குமிங்கும் வட்டமிட்டு உலாவிக் கொண்டிருந்தான். அடிக்கடி அந்த அறையின் ஒரு பக்கத்துச் சுவரில் இருந்த பலகணியின் ஓரமாக வந்து நின்று ஆவலுடன் வெளியே பார்த்தான். அரண்மனையின் ஒரு கோடியில் இருந்த மேல்மாடத்து அறையில் அவன் இருந்து வந்தான். அதையொட்டி வடவாறு சென்று கொண்டிருந்தது. அங்கே அரண்மனையின் வெளிச் சுவரே தஞ்சை புரிக்கோட்டையின் வெளிச்சுவராகவும் அமைந்திருந்தது. அந்தப் பலகணி வழியாகக் கீழே குதித்தால் வடவாற்று வெள்ளத்தில் குதித்து விடலாம். அல்லது செங்குத்தான சுவரின் வழியே சிறிது பிரயத்தனத்துடன் இறங்கியும் வடவாற்று வெள்ளத்தை அடையலாம். அந்த மேன்மாடத்துக்குக் கீழே அரண்மனைப் பெண்டிர் நதியில் இறங்கிக் குளிப்பதற்காக வாசலும் படித்துறையும் இருந்ததாகத் தோன்றியது. மேன்மாடத்திலிருந்து கீழே சென்று அந்த வாசலை அடைவதற்கு வழி எப்படி என்று தெரியவில்லை. அந்தப்புரத் தாதிமார்களுக்கும் அரசிளங் குமரிகளுக்கும் அது தெரிந்திருக்கும். அவன் தப்பிச் செல்வதாயிருந்தால், அவர்கள் அறியாமல் அல்லவா செல்ல வேண்டும்....?

பலகணி ஓரத்தில் நின்று அவன் இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருந்தபோது சற்றுத் தூரத்தில் தோன்றிய ஒரு காட்சி அவனைத் திடுக்கிடச் செய்தது.

அவன் இருந்த அரண்மனைக்கு அடுத்த அரண்மனைத் தோட்டத்தில் ஒரு பெண் தலைவிரி கோலமாகப் பித்துப் பிடித்தவள் போல் ஓடிக் கொண்டிருந்தாள். ஆகா! அது பெரிய பழுவேட்டரையரின் அரண்மனைத் தோட்டம் போல அல்லவா இருக்கிறது! ஆம், ஆம்! அந்தத்



சென்ற வாரம் சென்னையில் தமிழ் நாட்டின் தவப் புதல்வர் ராஜாஜி அவர்களின் ஆசி பெற்றுப் புளகாங்கிதம் அடைந்தேன். அறிவுக்கும் நம் நாட்டுப் பண்புக்கும் சின்னமாக விளங்கித் தொண்டாற்றி வரும் அவதார புருஷரைப் பூஜிப்பதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அத்தகைய பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறது. அப்பெரியாரின் காரியதரிசியாகப் பணி செய்துவந்தகாலத்திலிருந்து. தியாக பூமியில் தியாகமாகவே உருவாயிருக்கும் தலைவர் இன்னும் பல ஆண்டுகள் இருந்து நாட்டில் அறிவும், அன்பும், தரும உணர்ச்சியும் பரவச் செய்ய வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன். இதுவே பாரத ரத்தினத்துக்கு ஏகலைவனது குருகாணிக்கை.

எஸ். கிருஷ்ணமூர்த்தி
இந்திய ஹை கமிஷனர், ஆஸ்திரேலியா
1-11-71



நானும் அவரும் ஒன்று!

நானும் அவரும் ஒன்று என்று இருவரைப் பற்றி இரு சந்தர்ப்பங்களில் மூதறிஞர் ராஜாஜி குறிப்பிட்டிருக்கிறார். அந்த் சுவையான சம்பவங்கள் வருமாறு:

'சங்கீத யோகம்' என்ற நூலில் அமரர் கல்கி எழுதியிருப்பது:

"...ஸ்ரீ ராஜாஜி அக்கிராசன பீடத்தில் அமர்ந்து ஒன்றரை மணி நேரம் அளவற்ற ஆவேசத்துடன் தமிழ்ப் பாட்டு இயக்கத்தின் சகல அம்சங்களையும்பற்றிச் சாங்கோபாங்கமாகப்பேசினார்.

என்ன? ராஜாஜியா பேசினார்?

ஆமாம்! ராஜாஜிதான் பேசினார். ஆனால் டி. கே. சி.யின் உடம்பிலிருந்து கொண்டு பேசினார்.

இப்படி நான் சொல்வதற்கு ஆதாரம் ராஜாஜியேதான். "டி. கே. சி.யின் உடம்பில் நானே இருப்பதாகவும் அவர் சொல்வதை யெல்லாம் நான் சொல்வதாகவும் கொள்ள வேண்டியது" என்று ராஜாஜி அவர்கள் பாராட்டுச் செய்தி அனுப்பியிருந்தார்!



* * *

சேலம் சுதந்திரக் கட்சி மாநாட்டிற்கு அளித்த வாழ்த்துரையில் மூதறிஞர் கூறியது:

"இதுமுதற்கொண்டு நானும் காமராஜும் ஒன்று என்பதை உணர்வீர்களாக. தேசம் அபாய நிலையில் இருக்கிறது. நாம் இருவரும் தேச நலனுக்காக ஒருநுகத்தடியின் கீழ் வண்டியை இழுத்துச் செல்வோமாக. எங்களுடன் உழைப்பவர்களுக்கு ஆசீர்வாதம்!"

-- வி. ச. வாசுதேவன்.



தோட்டந்தான்! அதில் பித்துப் பிடித்தவன் போல் ஓடுகிற பெண் யார்? ஈசுவரா! மணிமேகலை போல் அல்லவா இருக்கிறது? அவளுக்கு என்ன நேர்ந்து விட்டது? எதற்காக அப்படி ஓடுகிறாள்? ...கரிகாலர் மரணம் அடைந்த அன்றிரவு கடம்பூர் மாளிகையில் அவள் அவனுக்குச் செய்த உதவிகள் எல்லாம் நினைவுக்கு வந்து அவனுடைய நெஞ்சு விம்மும்படி செய்தன! அவளுக்குப் பின்னால், அவளைத் தொடர்ந்து பிடிப்பதற்காக ஓடுகிறவர்களைப் போல் இன்னும் இரு முதிய ஸ்திரீகள் ஓடினார்கள். ஆனால் அவர்கள் வர வரப் பின்தங்கி வந்தார்கள். மணிமேகலையை அவர்கள் பிடிப்பது இயலாத காரியம். அதோ அவள் வெளி மதிள் சுவரண்டை வந்து விட்டாள். சுவர் ஓரமாக வளர்ந்திருந்த ஒரு மரத்தைப் பிடித்துக் கொண்டு மதிள் சுவரின் மேல் ஏறிவிட்டாள்! ஐயோ! என்ன காரியம் செய்கிறாள்? அவள் கையிலே ஒரு சிறிய கத்தி மின்னுகிறதே! அதனால் என்ன செய்யப் போகிறாள்? கடவுளே! மதிள் சுவரிலிருந்து தலை குப்புற நதியின் வெள்ளத்தில் விழுந்துவிட்டாளே!

முன்னொரு சமயம் வீர நாராயண ஏரியில் மணிமேகலையும் நந்தினியும் தண்ணீரில் மூழ்கும் தறுவாயிலிருந்ததும், அவன் மணிமேகலையை எடுக்க முதலில் உத்தேசித்துப் பிறகு நந்தினியைத் தூக்கிக் கரை ஏற்றியதும், அதனால் மணிமேகலை அடைந்த ஏமாற்றமும் அந்த ஒரு கண நேரத்தில் வந்தியத்தேவனுடைய மனத்தில் குமுறிப் பாய்ந்து வந்தன.

அதற்கு மேலே அதனால் சும்மா நிற்க முடியவில்லை. அரண்மனை மேல்மாடத்திலிருந்து பலகணியின் வழியாக வெளி வந்து ஆற்று வெள்ளத்தில் குதித்தான்.

சில கண நேரம் மூச்சுத் திணறிப் பின்னர் சமாளித்துக் கொண்டு நாலாபுறமும் பார்த்தான். ஆம்; அவன் குதித்த இடத்துக்கு அருகில் படித்துறை மண்டபமும் அதற்கு உள்ளிருந்து வரும் வாசலும் காணப்பட்டன. அதற்கு எதிர்த் திசையிலேதான் சற்றுத் தூரத்தில் மணிமேகலை மதிள்மேலிருந்து கீழே குதித்தாள். நல்ல வேளையாக, ஆற்று வெள்ளம் அவனை நோக்கி வந்து கொண்டிருந்தது. மணிமேகலையும் வெள்ளத்தில் மிதந்து வந்தால், அவனை நோக்கித்தான் வரவேண்டும்.

தட்டுத் தடுமாறி நதியின் கரை ஓரத்தை வந்தியத்தேவன் அடைந்தான். ஆற்று வெள்ளத்தை எதிரிட்டுக் கொண்டு விரைவாக நடந்து சென்றான். ஆகா! அதோ மணிமேகலை மிதந்து வருகிறாள்! அவள் உடம்பில் உயிர் இருக்கிறதா? அல்லது அது உயி

ரற்ற உடம்பா? ஐயோ! மறுபடியும், தன்னிடம் அன்பு கொண்டவர் ஒருவரின் உயிரற்ற உடம்பைச் சுமந்து செல்லும் துர்ப்பாக்கியம் தனக்கு ஏற்பட்டு விடுமோ! அடடா! அந்தப் பெண் தன்னிடம் எவ்வளவு அன்பு வைத்திருந்தாள்? வீர நாராயணத்து ஏரிக்கரை மண்டபத்தில் அவள் யாழ் வாசித்துக் கொண்டு பாடிய பாட்டின் தொனி, வெள்ளத்தில் அவள் உடல் மிதப்பது போலவே காற்றிலே மிதந்து வந்தது. வந்தியத்தேவனுக்கு அது அளவில்லாத வேதனையை அளித்தது.

அந்த வேதனையை எப்படியோ சகித்துக் கொண்டு வெள்ளத்திலே பாய்ந்து சென்று மணிமேகலையை இரு கரங்களினாலும் தூக்கி எடுத்துக் கொண்டான். தெய்வங்களே! இந்தப் பெண்ணின் உயிரைக் காப்பாற்றிக் கொடுங்கள்! சோழ நாட்டிலுள்ள ஒவ்வோர் ஆலயத்துக்கும் சென்று ஒவ்வொரு சந்நிதியிலும் தரையில் விழுந்து கும்பிடுகிறேன். சிவன் கோயில், விஷ்ணு கோயில், அம்மன் கோயில், அய்யனார் கோயில் எல்லாவற்றுக்கும் சென்று ஒவ்வொரு தெய்வத்துக்கும் நன்றி செலுத்துகிறேன். சூதுவாது அற்ற இந்தச் சாதுப் பெண்ணின் உயிரை மட்டும் காப்பாற்றிக் கொடுங்கள்!....

இவ்வாறு மனத்துக்குள் பல்வேறு தெய்வங்களையும் பிரார்த்தித்தவண்ணமாக வந்தியத்தேவன் மணிமேகலையைப் படித்துறையில் கொண்டு வந்து சேர்த்தான். ஏற்கனவே ஈட்டிக் காயத்தினால் மரணத்தின் வாசலிலிருந்து திரும்பி வந்தவன் நதி வெள்ளத்தில் திடீரென்று குதித்த அதிர்ச்சியினால் மேலும் பலவீனமுற்றிருந்தான். நீரில் மூழ்கியதினால் கனத்திருந்த மணிமேகலையைத் தூக்கிக் கொண்டு நதியில் நடந்த போது அவனுக்கு மூச்சு வாங்கியது. அவளை மேலும் தூக்கிக் கொண்டு நடப்பது இயலாத காரியமாகத் தோன்றியது. எனவே, படித்துறையின் மேல் படி அகலமாக இருந்ததைப் பார்த்து, அதன் பேரில் மணிமேகலையைப் படுக்க வைத்தான்.

பின்னர் என்ன செய்வது என்று ஒரு கணம் யோசித்தான். மணிமேகலையின் உடம்பில் இன்னும் உயிர்க் கனல் இருந்தது. ஆனால் அவளை மூர்ச்சை தெளிவித்து உயிர்ப்பிக்கும் காரியம் தன்னால் ஆகக் கூடியதில்லை. உடனே, யாராவது ஒரு பெண்ணின் உதவி தேவை. அரண்மனைக்குள் சென்று அங்கிருந்து யாரையாவது அழைத்து வர வேண்டும்.

படித்துறைக்கு அரண்மனைக்குள்ளேயிருந்து வருவதற்காக அமைந்த வாசல் அவன் கண் முன் காணப்பட்டது. அதன் அருகில் சென்று சாத்தியிருந்த கதவின் பேரில் தன் உடம்பில் மிச்சமிருந்த பலம் முழுவதையும் பிரயோகித்து மோதினான். அதிர்ஷ்டவசமாகக் கதவின் உட்புறம் தாழ்ப்பாள் தகர்ந்து கதவு திறந்து கொண்டது. திறந்த கதவின் வழியாகப் புகுந்து ஓடினான். சிறிது தூரம் அது குறுகிய பாதையாகவே இருந்தது. பின்னர், தாழ்வாரங்களும் முற்றங்களும் வந்தன. அங்கே யெல்லாம் யாரையும் காணவில்லை. ''இங்கே யாரும் இல்லையா?'' ''ஒரு பெண்ணைக் காப்பாற்றுவதற்கு யாரும் இல்லையா?'' என்று அலறிக் கொண்டே அங்குமிங்கும் ஓடினான். கடைசியாக, ஒரு பெரிய மண்டபத்தின் வாசலில் சேவகர்கள் இருவர் அவனை வழி மடக்கி நிறுத்த முயன்றார்கள். அவர்களை மீறித் தள்ளிக் கொண்டு உள்ளே புகுந்தான். அங்கே சக்கரவர்த்தி உன்னதமான சிங்காதனத்தில் அமர்ந்திருப்பதையும், ஆடவர்கள், பெண்டிர் பலர் சூழ்ந்து நிற்பதையும் கண்டு திகைத்துப் போனான். முதலில் அவன் கண்களில் எதிர்ப்பட்ட பெண்மணி பூங்குழலி என்று தெரிந்துகொண்டதும், அவனுக்குச் சிறிது தைரியம் உண்டாயிற்று. ''சமுத்திர குமாரி! சமுத்திர குமாரி! மணிமேகலை ஆற்றில் விழுந்து விட்டாள். உடனே வந்து காப்பாற்று!'' என்று அலறினான். **(தொடரும்)**

சென்ற பல ஆண்டுகளில்....

சென்ற பல ஆண்டுகளில் ராஜாஜியின் திரு உருவத்தைப் பல சந்தர்ப்பங்களில் அட்டைப் படமாகப் பிரசுரிக்கும் பாக்கியம் பெற்றிருக்கிறோம். அவற்றில் சிலவற்றை அடுத்து வரும் பக்கங்களில் காணலாம்.

1. கல்கி உதயமானதும் முதல் இதழில் தேசியக் கொடி. இரண்டாவது இதழில் அரசியல் குருவைத் தரிசிக்கிறோம். 2. சரித்திரப் பிரசித்தமான கிரிப்ஸ் - ராஜாஜி சந்திப்பு. 3. அமெரிக்க ஜனாதிபதியின் பிரதிநிதி மிஸ்டர் வில்லியம் பிலிப்ஸ், 48,பஜுல்லா ரோட்டில் ராஜாஜியைச் சந்தித்த காட்சி. 4. தமிழகத்தில் காந்திஜியின் சுற்றுப் பயணத்தில் இரு மகான்கள். 5. புது தில்லியில் இடைக்கால சர்க்காரில் மந்திரியாக இருந்த ராஜாஜி தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்த போது. 6. சர்வஜித்து வருஷத்தில் முதன் முதலில் நடந்த தலைவர் ராஜாஜி பிறந்த தினக் கொண்டாட்ட வைபவத்தினை யொட்டி. 7. இந்தியாவிடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டு ஜூன் 21-ந் தேதி மவுண்ட்பேட்டன் தம்பதி புறப்பட்டபோது ராஜாஜி வழியனுப்புகிறார். 8. கவர்னர் ஜெனரல் ராஜாஜி. 9. சதாபிஷேகம் கண்ட ராஜாஜி. 10. இலக்கியத் துறையில் 'சக்கரவர்த்தித் திருமகன்' எழுதித் தமிழகத்துக்குச் செய்த தொண்டினைப் போற்றுமுகமாக. 11. சுதந்திரக் கட்சி தோற்றுவித்த அரசியல் மேதை. 12. ''இந்துநேயாளர் - தீர்க்கதரிசி - 1962-ல். 13. மலை குலைந்தாலும் நிலை கலங்காத தலைவர் ராஜாஜி. 14. 1971 தேர்தலின்போது 'நானும் காமராஜும் ஒன்று' எனப் பிரகடனம்.

சென்ற பல ஆண்டுகளில்...




கல்கி
KALKI 6.12.1959
30


மனதிற்குகந்த
தூய வெண்மையைப் பெற
ஓ ஓ பி
நீலம்


OOB
BLUE
BEST ULTRAMARINE
ULTRAMARINE & PIGMENTS LTD

மக்களின் நலனுக்காகவே

உழைக்கும் உத்தமர்

காமராஜ்

ராஜாஜி அவர்கள் முதன் மந்திரியாக இருந்த சமயம். நான் அப்பொழுது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவனாக இருந்தேன். ஒரு நாள் காலை எட்டரை மணி இருக்கும். நான் வீட்டில் இருக்கிறேனா என்று டெலிபோனில் ராஜாஜி விசாரித்ததாகச் சொன்னார்கள். அச்சமயம் அவர் என் வீட்டுக்கருகிலேயே பஸ்துல்லா ரோடில் வசித்து வந்தார். சீக்கிரமே ஸ்நானம் செய்துவிட்டு அவரைச் சென்று பார்க்க நான் முடிவு செய்தேன். ஆனால் சில நிமிடங்களுக்கெல்லாம் ராஜாஜி என்னைத்தேடி என் வீட்டுக்கே வந்துவிட்டார். இது எனக்குப் பெரும் அதிர்ச்சியாகவே இருந்தது. அவரோ மதிப்புக்குரிய மூத்தவர்; நானோ இளையவன். அப்படியிருக்க அவர் என்னைப் பார்க்க வந்தது என் மனத்துக்குச் சரியாகப் படவில்லை. உடனே நான் ராஜாஜியை அணுகி, "நீங்கள் ஏன் என்னைப் பார்க்க வந்தீர்கள்? சொன்னால் நான் வர மாட்டேனா? நீங்கள் வீட்டுக்குச் செல்லுங்கள். சிறிது நேரத்தில் நானே உங்களை வந்து பார்க்கிறேன்" என்று கூறிக்கொண்டே அவரை அவர் வந்த காரில் ஏற்றி அனுப்பி வைத்தேன். சிறிது நேரத்துக்கெல்லாம் நான் அவர் வீட்டுக்குச் சென்று அவரைப் பார்த்துப் பேசிவிட்டு வீடு திரும்பினேன்.

அவர் கூப்பிட்டு அனுப்பினால் எவரும் ஓடோடியும் வந்து அவரைப் பார்ப்பார்கள். என்றாலும் முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேச வேண்டுமென்றிருந்தால், சம்பந்தப்பட்டவரை சென்று பார்த்துப் பேசி வருவதுதான் அவர் சுபாவம். இதுதான் அவருடைய இயல்பான குணம். இதைத் தெரிந்து கொள்பவர்கள்தான் ராஜாஜியை நன்கு தெரிந்து கொள்ள முடியும்.

1964ம் ஆண்டு எனக்கு அறுபது வயது முடிந்தது. என் பிறந்த நாளைச் சென்னையில் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்று நான் திருச்சியிலிருந்து விமானம் மூலம் மீனம்பாக்கம் விமானநிலையத்தில் வந்து இறங்கினேன். என்னிடம் அன்பு கொண்ட மக்கள் என்னை அங்கிருந்து 'சத்தியமூர்த்தி பவ'னுக்கு ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். பகல் ஒரு மணிக்குப் புறப்பட்ட



ஊர்வலம் சத்தியமூர்த்தி பவனுக்கு வந்து சேரச் சுமார் இரண்டுமணி நேரம் பிடித்தது.

வந்து இறங்கியதும், முதன் முதலாக ராஜாஜி எனக்கு மாலை அணிவித்து, "என்னைவிட அதிக ஆயுள் காலம் நீங்கள் வாழ வேண்டும்" என்று நல்வாசி கூறினார். என் மெய் சிலிர்த்தது. ராஜாஜி அவர்கள் என் வருகைக்காக நீண்ட நேரமாக அங்கு காத்துக் கொண்டிருந்திருக்கிறார். அந்தச் சமயம் அவருக்கும் எனக்கும் கடுமையான கருத்து வேறுபாடுகள் இருந்து வந்தன. ராஜாஜியின் நல்வாசியை நான் என் வாழ்நாளிலேயே கிடைத்தற்கரிய பெரும் பாக்கியமாக இன்றும் கருதி வருகிறேன்.

இந்த இரு சம்பவங்களையும் இங்கு நான் குறிப்பிடுவதற்கான காரணம் இதுதான்: அரசியல் அபிப்பிராய பேதங்கள், வேறுபாடுகள், பெரியவர், சிறியவர், விருப்பு வெறுப்புக்கள் ஆகியவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டவர் ராஜாஜி. மனிதனை மனிதனாக நினைக்கும் தனிப் பண்பு நிறைந்தவர் ராஜாஜி.

நாட்டின் விடுதலைக்காகப் போராடும் தலைவர்களைத் தன் இஷ்டப்படி கைது செய்து சிறையில் தள்ள ஒரு மசோதாவை அன்றைய இந்திய அரசாங்கம் கொண்டு வந்தது. இதற்கு "ரௌலட் மசோதா" என்று பெயர். நாட்டில் உள்ள மிதவாதத் தலைவர்கள் உள்பட எல்லாத் தலைவர்களும் இதை எதிர்த்

தனர். இதற்கு மக்களின் எதிர்ப்பைத் திரட்ட மகாத்மா காந்தியடிகள் 1919ம் ஆண்டு தொடக்கத்தில் நாடெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்தார். மார்ச்சு மாதம் காந்திஜி சென்னைக்கு விஜயம் செய்து ராஜாஜியுடன் தங்கியிருந்தார். இந்த மசோதாவை எதிர்த்து வாபஸ் பெறும்படி செய்ய என்ன செய்வது என்ற சிந்தனையுடன் காந்திஜி இரவு உறங்கச் சென்றார். அன்று அவர் மனத்தில் ஒரு திட்டம் உருவாயிற்று. மறுநாள் காலையில் அவர் எழுந்ததும் ராஜாஜியை அழைத்துத் தம் திட்டத்தை வெளியிட்டார். ராஜாஜியும் இதை முழு மனத்துடன் ஏற்றுக் கொண்டார். சென்னையில் ராஜாஜியுடன் காந்திஜி தங்கியபோது ஏற்பட்டதுதான் அவர்களுடைய முதல் சந்திப்பாகும். அன்று அவர்களிடையே ஏற்பட்ட உறவை ஆன்மீக உறவென்றே கூறவேண்டும். அன்று ஆரம்பமான இந்த உறவு, 1948ம் ஆண்டு ஜனவரி இறுதியில் காந்திஜி அமரரானவரை நீடித்தது.

1920ம் ஆண்டு இறுதியில் காந்திஜி ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினார். நாடெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்தார். ஓராண்டுக்குப் பின்னர் ''யங் இந்தியா''வில் அவர் எழுதிய இரண்டு மூன்று கட்டுரைகளுக்காக அரசாங்கம் அவர் மீது வழக்குத் தொடர்ந்து தண்டனை விதித்துச் சிறையில் தள்ளியது. ராஜாஜி உட்படப் பல பெருந் தலைவர்களும் சிறையில் வைக்கப்பட்டனர். பின்னர் காந்திஜியும் ஒரு சில தலைவர்களுந் தவிர மற்றவர்கள் ஆங்காங்கு விடுதலை செய்யப்பட்டு வந்தனர்.

வெளியே வந்த தலைவர்களில் முக்கியமானவர்கள் தேசபந்து தாஸ், மோதிலால் நேரு, பட்டேல், ராஜன் பாபு, ராஜாஜி முதலியோர் ஆவர். இவர்களில் தேசபந்து தாஸ், மோதிலால் நேரு போன்ற தலைவர்கள், அரசாங்கத்தைச் சட்டசபைக்குள் சென்றும் எதிர்க்க வேண்டும் என்று கருதினர். இதற்காக மற்றத் தலைவர்களின் ஆதரவையும் அவர்கள் தேடினர்.

இந்தச் சூழ்நிலையில், 1922ம் ஆண்டு இறுதியில் பீகார் மாநிலத்தில் உள்ள கயா என்னுமிடத்தில் காங்கிரஸ் மகாசபையின் கூட்டம் தேசபந்து தாஸ் தலைமையில் கூடியது. தாஸும் அவரது சகாக்களும் மாறுதலைக் கோரும் சட்டசபைப் பிரவேசத்தை ஆதரிக்கும் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். ராஜாஜியோ காந்திஜியின் ஒத்துழையாமைத் திட்டத்தில் பூரண நம்பிக்கை கொண்டவர். சட்டசபைப் பிரவேசத்தை ஆதரிக்கும் தீர்மானத்தை ராஜாஜி துணிவுடன் எதிர்த்தார். தமது வாக்குவன்மையாலும் வாதத் திறமையாலும் அங்கு கூடியிருந்த காங்கிரஸ் பிரதிநிதிகளை ஒத்துழையாமைத் திட்டத்துக்கு ஆதரவு அளிக்கும்படி செய்தார். இறுதியில் சட்டசபைப் பிரவேச ஆதரவுத் தீர்மானம் தோல்வியுற்றது.

சேலத்தில் ராஜாஜி வக்கீல் தொழிலை நடத்தி வந்தார். வழக்குகளை நடத்துவதில் திறமை வாய்ந்தவர் என்ற பெரும் புகழ் படைத்தவர் அவர். அந்தக் காலத்திலிருந்தே சமூகத்தில் மக்களிடையே பிறப்பினால் ஏற்றத் தாழ்வு இருக்கக் கூடாது என்ற தீவிர சீர்திருத்தவாதியாக இருந்தார். அவர் சேலம் நகரசபையில் தலைவராக இருந்தபோது, தீண்டாதவர்கள் எனப்படுவோரும், மற்றும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களும் நகரில் உள்ள எந்தத் தெருக்களிலும் சரிசமமாகச் செல்லவும், பொதுக் குழாய்களில் தண்ணீர் எடுத்துக் கொள்ளவும் ஏற்பாடுகள் செய்தார். இதனால் ஏற்பட்ட வைதீகர்களின் வெறுப்பையும் எதிர்ப்பையும் அவர் சிறிதும் பொருட்படுத்தவில்லை. ராஜாஜியின் இந்தச் செய்கை, அந்தக் காலத்தில் பெரும் புரட்சிகரமானது.

ஹரிஜனங்களுக்குத் தனித் தொகுதி அளிக்கும் அறிக்கை யொன்றை பிரிட்டிஷ் அரசாங்கம் 1933ம் ஆண்டு மத்தியில் வெளியிட்டது. இதற்கு ''வகுப்புத் தீர்வு'' என்று பெயர். ஹிந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள் என்ற சமயப் பிரிவினை போதாவென்று ஹிந்துக்களிடையேயும் பிரிவினை உண்டுபண்ணும் இந்தத் தீர்ப்பு, ஹிந்து சமூகத்திலிருந்து ஹரிஜனங்களைப் பிரிக்கும் சூழ்ச்சியே என்று காந்திஜி கருதினார். அச்சமயம் அவர் எரவாடா சிறையில் இருந்து வந்தார். உயிரைக் கொடுத்தாவது இதை எதிர்த்தாக வேண்டும் என்று காந்திஜி முடிவு செய்தார். இதற்காக அவர் சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்.

அண்ணலின் இந்த உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி செய்ய ஒரே ஒரு வழிதான் இருந்தது. காந்திஜியின் கோரிக்கைக்கு டாக்டர் அம்பேத்கரும், இதர ஹரிஜனத் தலைவர்களும் இணங்கி, ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டால்தான் இது சாத்தியமாகும்.

பண்டித மாளவியா, ராஜாஜி, ராஜன் பாபு, சாப்ரு, ஜயக்கர் முதலிய தலைவர்கள் டாக்டர் அம்பேத்கர், எம். சி. ராஜா முதலிய ஹரிஜனத் தலைவர்களுடன் பம்பாயில் கூடி, பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அம்பேத்கரும், ராஜாஜியும் காந்திஜியை எரவாடா சிறையில் சந்தித்துப் பேசினார்கள். அம்பேத்கரின் பிடிவாதம் காந்திஜியின் உயிருக்கே ஆபத்தாக முடியுமோ என்று எல்லாத் தலைவர்களும், நாட்டு மக்களும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தனர். இந்த நிலையில் ராஜாஜி மிகப் பொறுமையுடனும், சலிப்புத் தன்மையுடனும் அம்பேத்கருடன் விவாதித்து, காந்திஜியின் கோரிக்கைக்கு அவரை இணங்கும்படி செய்தார். இறுதியில் ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. காந்திஜியும் உண்ணாவிரதத்தைக் கைவிட்டார். இந்த மாபெரும் சாதனையைச் செய்தவர் ராஜாஜிதான்.

அடுத்தபடியாக, 1931ம் ஆண்டு ராஜாஜி சென்னை மாநிலத்தின் முதன் மந்திரியாக வந்ததும், ஆலயப் பிரவேசச் சட்டத்தை இயற்றினார். தமிழகத்தில் உள்ள ஆலயங்களில் ஹரிஜனங்களும், பிரவேசிக்க அனுமதி மறுக்கப்பட்டிருந்த இதர இனத்தவர்களும், மற்ற ஜாதி ஹிந்துக்களுடன் சரிசமமாகப் பிரவேசிக்க இந்தச் சட்டம் உரிமையளித்தது.

வாழ்க்கைப்படியில் அடிமட்டத்தில் இருப்பவர்கள் ஏழை மக்கள்தான். அரை வயிறு சாப்பாட்டுக்கும் கஷ்டப்படும் இந்த மக்கள் குடிப்பழக்கத்துக்கு ஆளாகி அழிந்து வருவது அந்த நாளிலேயே ராஜாஜியின் உள்ளத்தை உருக்கியது. அந்தக் கொடுமையி லிருந்து மக்களை மீட்க அவர் ''விமோசனம்'' என்ற பத்திரிகை ஒன்றை ஆரம்பித்து, கதைகள், கட்டுரைகள், சிந்திக்க வைக்கும் படங்கள் முதலியவற்றின் மூலம், வெகு தீவிரமாக மதுவிலக்குப் பிரசாரத்தை நடத்தி வந்தார்.

1937ம் ஆண்டு சென்னை மாநிலத்தின் முதல்வராக ராஜாஜி பொறுப்பேற்றதும், மதுவிலக்குச் சட்டத்தை இயற்றி, முதன் முதலாகச் சேலம் ஜில்லாவில் இதை அமுலுக்குக் கொண்டு வந்தார். பின்னர் இது சென்னை மாகாணம் முழுவதற்கும் விஸ்தரிக்கப்பட்டது.

இன்று, ''மதுவிலக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது'' என்ற பெயரில் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் கள்ளுக்கடைகள் திறக்கப்பட்டிருப்பது ராஜாஜிக்குத் தாங்க முடியாத வேதனையை அளித்திருக்கிறது. இந்தத் தள்ளாத வயதிலும் இந்தக் கொடுமையை எதிர்த்து அவர் இன்னமும் போராடிக் கொண்டுதான் இருக்கிறார்.

காந்திஜி ஆரம்பித்த ஒத்துழையாமை இயக்கத்தில் நிர்மாணத் திட்டம் முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தது. ஒருவேளை உணவுக்கும் தவித்துக் கொண்டிருக்கும் லட்சக்கணக்கான மக்கள் கிராமங்களில் வசித்து வந்தனர். ராட்டையில் கையினால் நூற்று, கையினால் நெசவு செய்த கதர்த் துணியை மக்கள் எல்லோரும் அணிந்தால், இந்தக் கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும் என்பதுதான் இந்தத் திட்டம்.

இந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வர ராஜாஜி திருச்செங்கோட்டில் ஆசிரமம் ஒன்றை நிறுவினார். இதன் மூலம் கிராம மக்களுக்கு ராட்டைகள் கொடுத்து நூல் நூற்கச் செய்து, அந்த நூலைக் கொண்டு கதர் ஆடைகள் நெசவு செய்யப்பட்டன. இதன் மூலம் தமிழ்நாட்டில் ஏராளமான மக்கள் ராட்டைகளை வாங்கி நூல் நூற்கத் தொடங்கினர். தமிழ்நாட்டில் கதர் உற்பத்தி அதிகரிக்கவும் ஏராளமான பேர் கதரை அணியவும் பெரும் அளவுக்கு ராஜாஜி காரணமாக இருந்தார்.

ஏழை மக்களுக்கு, குறிப்பாக விவசாயத்தில் ஈடுபட்டுள்ள குடியானவ மக்களுக்கு ராஜாஜி ஆற்றியுள்ள பணி குறிப்பிடத்தக்கதாகும். கடன் பளுவினால் திணறிக் கொண்டிருந்த விவசாய மக்களுக்கு அவர் 1937ம் ஆண்டு முதல்வராக இருந்தபோது, ''கடன் நிவாரணச் சட்டம்'' இயற்றினார்.

மிராசுதார்களுக்கும் அவர்களிடம் பணியாற்றும் பண்ணையாட்களுக்கும் இடையே கூலி மற்றும் இதர வசதிகள் பற்றிய விஷயத்தில் தகராறு இருந்து வந்தது. இது ராஜாஜி இரண்டாவது முறையாக முதல்வராக இருந்த சமயம். — இந்தத் தகராறைச் சாதகமாக கம்யூனிஸ்டுகள் பயன்படுத்திக் கொண்டு குறிப்பாகத் தஞ்சை ஜில்லாவில் குழப்பம் விளைவித்து வந்தனர். இந்த மோசமான நிலையை அகற்ற ராஜாஜி அச்சமயம் ''பண்ணையாள் சட்டம்'' என்ற ஒரு சட்டத்தை இயற்றி அதன் மூலம் நிலச்சுவான்தார்களுக்கும் பண்ணையாட்களுக்கும் இடையே சுமுகமான உறவு ஏற்படும்படி செய்தார்.

ராஜாஜி தம் லட்சியங்களுக்கும் கொள்கைகளுக்கும்தான் முதலிடம் அளிப்பார். இதில் அவர் கொண்டுள்ள உறுதியை—இதைப் பிடிவாதம் என்று பிறர் கூறலாம் — தளர்த்தியதே கிடையாது. காந்திஜியின் உபவாசங்கள் உட்படப் பல அரசியல் பிரச்னைகளில் தமது கருத்து வேற்றுமைகளைப் பட்டவர்த்தனமாகத் தெரிவிக்க அவர் தயங்கியதே யில்லை. அதன் விளைவுகளை, அவை தம்மை எந்த அளவுக்குப் பாதிக்க நேரிட்டாலுங்கூட, அவர் ஏற்று வந்திருக்கிறார்.

இன்று, இந்தத் தள்ளாத வயதிலும் அவர் உள்ளத்தை வாட்டிக் கொண்டிருப்பவை, நாடும் மக்களும் பெரும் அவதிக்குள்ளாகி வருவதும், குறிப்பாகத் தமிழகத்தில் மது அரக்கனின் பிடியில் மீண்டும் மக்கள் சிக்கிக் கொண்டு திணறி வருவதுமேயாகும்.

இன்று நம்மிடையே பீஷ்மர் போல் வாழ்ந்து வரும் ராஜாஜி, மேலும் பல்லாண்டு வாழ்ந்து, நமக்கும் நாட்டுக்கும் நல்வழி காட்ட வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.



தீனபந்து ஆண்ட்ரூஸ் பல ஆண்டுகளுக்கு முன்பே ராஜாஜியைப் பற்றிக் கூறியுள்ளது:

''காங்கிரஸ் தலைவர்களுள் புனித வாழ்க்கை வாழ்ந்து வருபவர். இந்தியாவுக்காக மிகுந்த தியாகம் செய்தவர். காந்திஜிக்கு அடுத்தாற்போல் விளங்குபவர் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் தான். இந்தியாவில் கஷ்டப்படுகிறவர்களின் வாழ்க்கை மேன்மையுற அவர் தன்னல மறுப்புடன் வாழ்ந்து வருகிறார். ஏழைகள் துயர் தீர்ப்பதில் அவருக்கு அளவற்ற சிரத்தை உண்டு.

''ராஜாஜி பிரபல சீர்திருத்தக்காரர் மட்டுமல்ல. அவர் ஒரு புனிதமான போதகர். உயர்ந்த மத லட்சியங்களைப் பின்பற்றுபவர்.

''அவரிடம் மக்கள் அன்பு கொள்வதற்கும் அவருக்கு அகில இந்தியத் தலைமைப் பதவி கிடைத்ததற்கும் காரணமாயிருப்பது அவருடைய குண மேன்மைதான். எல்லா வகையிலும் ராஜாஜி தனிப்பெருமை வாய்ந்தவர்.'' -வி.ச.வாக



NEW!
SUPER
Surf
FOR SUPER WHITENESS
ஒரே ஒரு சலவையில்
ஸூப்பர் ஸர்ஃப், வேறெந்த
சலவைப் பவுடரையும் விட
அதிக வெண்மை தருகிறது!
அமோகமான சலவைத் திறன் படைத்தது
ஸூப்பர் ஸர்ஃப். கண்மறைவான அழுக்குகளையும்
அகற்றிவிடும். காண்போர் பொறாமைப்படும்
கற்பனைகடந்த வெண்மை. கேட்பானேன்,
இந்தியாவின் தலைசிறந்த ரகம்!
ஸூப்பர் ஸர்ஃப்!
ஒப்பற்ற வெள்ளைவெளேர் சலவைக்கே ஸூப்பர் ஸர்ஃப்.
(வெண்மையூட்டும் சாதனம் எதுவும் சேர்க்கத் தேவையில்லை)
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு
லின்டாஸ்-SU. 117-140 TM


மூன்று மந்திரவாதிகள்
கதை: வாண்டுமாமா
சித்திரம்: ராஜு.
11
மூன்றாவது இரவு எப்படியும் அவர்களைத் தோல்வியடையச் செய்ய மந்திரவாதி தீவிரமாக இருந்தான். அது போலவே இவர்களும் ஏமாந்து விடக் கூடாதென்று கவனமாக இருந்தார்கள். ஆனாலும் வழக்கப்படி நள்ளிரவில் நினைவிழந்து போய இளவரசியையும் கை நழுவ விட்டார்கள்.
இளவரசே! இங்கிருந்து முந்நூறு காத தூரத்திலுள்ள ஒரு கடலின் அடியில் ஒரு முத்துச் சிப்பிக்குள் தங்க மோதிரமாக இளவரசியை மாற்றி வைத்திருக்கிறான் மந்திரவாதி. என் நெடுந்தூரப் பார்வையின் சக்தியால் இதைப் பார்க்கிறேன்.
இந்த முறை இளவரசியை மீட்பது கொஞ்சம் சிரமம். இருந்தாலும் கவலை வேண்டாம். நெட்டையனுக்குத் தான் இரட்டிப்பு வேலை. என்னைக் குண்டோதரனையும் சுமந்து போக வேண்டும்.
நெட்டையன் குண்டோதரனையும் பொட்டையனையும் சுமந்தபடி விரைந்தான், வெகு வேகமாக.
கடற்கரையில்....
எங்கே என்று தேடுவது? கடல் ரொம்ப ஆழமாக இருக்கிறதே. என் கைகளுக்கே நீளம் போதவில்லை.
கொஞ்சம் பொறு. நான் கடல் நீரை வேகமாக உறிஞ்சிக் குடித்து வற்ற வைக்கிறேன். தேடச் சுலபமாக இருக்கும்.


அந்த சிப்பிதான். அதற்குள் ஒரு மோதிர வடிவில் அடை பட்டிருக்கிறாள் இளவரசி. சீக்கிரம் கிளம்புங்கள். நாம் வெகுதூரம் போக வேண்டும்...
குண்டோதரன் குடித்த கடல் நீரைக் கக்கியாக வேண்டாமா? இந்த நிலையில் அவனை எப்படித் தூக்குவேன்?
ஹா...ஹா...ஹா! எங்கே இளவரசி? இன்று உங்கள் திறமை பலிக்க வில்லையா? வெற்றி எனக்கே! இதோ உன்னைக் கல்லாக்கப் போகிறேன்...
நண்பா! இளவரசனின் அறைக்குள் மந்திரவாதி வந்து விட்டான். நான் பார்க்கிறேன். உன்னிட முள்ள மோதிரத்தை இளவரசன் முன்னால் போய் விழும் படி வேகமாக வீசியெறி. சீக்கிரம்...
நூறு காதங்களுக்கு அப்பாலி ருந்து நெட்டையன் மோதிரத்தை வீச, குண்டோதரன் வாயால் ஊத, மோதிரம் இரும்புக் கோட்டையிலுள்ள இளவரசனின் முன்னால் வந்து விழுகிறது. அடுத்த விநாடி...
மோதிரம் தரையில் மோதியதும் அதிலிருந்து கிளம்பிய பச்சைப் புகையின் நடுவே இளவரசி ஷோபா தோன்றினாள்.
அந்த போதில் மந்திரவாதியிடமிருந்து ஒரு பயங்கரமான மரண ஓலம் கிளம்பியது. அவன் முடிவு நெருங்கிவிட்டது.



கொடிய மந்திரவாதி மறைந்து போனான். அவனால் சிலையாக்கப் பட்டிருந்தவர்களெல் லாம் உயிர் பெற்றார்கள்.
விக்ரமா, இதோ இவர்களெல்லாம் கூட உயிர் பெற்று விட்டார்கள்.
தோட்டத்து மரங்களிலும் செடிகளிலும் பூக் களும் கனிகளும் தோன்றியுள்ளன.
பல தேசத்து இளவரசர்களும் விக்ரமனுக்கு நன்றி தெரிவித்துத் தங்கள் உதவி என்றும் அவனுக்கு உண்டு என்று கூறி விடை பெறுகி றார்கள். விக்ரமன் சந்தனபுரிக்கு விரைகிறான்.
விக்ரமா, என் மகளை மீட்டு வந்த உன்னை நான் எப்படிப் புகழுவேன்?
புகழுக்குரியவர்கள் என் தோழர்கள் தான் அரசே. இவர்கள் இல்லாவிட்டால் இன்று இளவரசி இங்கிருக்க முடியாது.
இளவரசே! எங்களுக்கு விடை கொடுங் கள். வேண்டும் போது நினைத்தால் வருவோம்.
நண்பர்களே! உங்களைப் பிரியும் வேதனையைத் தாங்க முடியவில்லையே, என்ன செய்வேன்?
தன் சபதப்படி தந்தைக்கு வாழ்வ ளித்த பின் கோமளாவை மணப்பதாக வாக்களித்த விக்ரமன் படை திரட்டும் பணியில் ஈடுபடுகிறான்.. இனி நாம் இரண்டாவது இளவரசன் ஆனந்தன் என்ன ஆனான் என்பதைப் பார்க்கலாம்.
தொடரும்



மகிழ்ச்சி துள்ளும்
வளமான வாழ்வு
கிராமங்களிலே...
ராக்ஃபோர்ட் டால்மியா சிமெண்ட்
உறுதியான எதிர்காலத்திற்கு எழுப்பப்படும்
இன்றைய கட்டடம்.
டால்மியா சிமெண்ட் (பாரத்) லிட்.
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் மற்றும் தொழிற்சாலை
டால்மியாபுரம் (தமிழ்நாடு)
தலைமை அலுவலகம்: 4, சிந்தியா ஹவுஸ், புது டெல்லி 1.
ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள்
சிமெண்ட் டிஸ்ட்ரிப்யூடர்ஸ் லிட்.
டால்மியாபுரம், (தமிழ்நாடு).

150 ஆண்டுகள் வாழ வேண்டும்



• நல்லசிவம் •

உலகத்துப் பேரறிஞர்கள் எனப்படுவோர் அவர்கள் வாழுகின்ற காலத்தில் தூற்றப்படுவதையும் பிற்காலத்தில் போற்றப்படுவதையும் காண்கிறோம்!

மூதறிஞர் ராஜாஜி அவர்கள் நீண்ட பெருவாழ்வு பெற்றவர். 'காரியம் செய்; பலனை எதிர்பாராதே' என்ற பகவத்கீதையின் சாரத்தைத் தமது வாழ்வின் நடைமுறையாகக் கொண்டவர். போற்றுதலையும் தூற்றுதலையும் சமமாக என்றும் தெளிந்த சிந்தனையாளர். தேசியப் போராட்டகாலத்தில் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் என்று நாட்டு மக்களால் பாராட்டப்பட்டார். இந்திய நாட்டின் பிரிவினையை ஆதரித்த காரணத்தால் பின்னர் தூற்றப்பட்டார்.

நாடு சுதந்திரம் பெற்று இருபதாண்டுகளுக்குப் பின்பும் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் மக்களின் ஆசை அபிலாஷைகளை நிறைவேற்றாத காரணத்தால் அதனை வெறுத்த மக்கள் கனன்றுஎழுந்தபோது அதற்குத் தலைமை தாங்கிப் பேரணி திரட்டிக் காங்கிரசை ஆட்சி பீடத்திலிருந்து வெளியேற்ற அரும்பாடுபட்டார். அதன் பலனை அனுபவிப்பவர்கள் இன்று அவரை மறந்து விட்டனர். மாபெரும் அறிஞர்கள், தீர்க்கதரிசிகள் தங்களை யார் தூற்றுகிறார்கள், போற்றுகிறார்கள் என்று கவலைப்படுவது கிடையாது. தங்கள் மனச்சாட்சி எதனை நியாயமென்று காட்டுகிறதோ, அதனை எதற்கும் அஞ்சாது கூறுவதால் தான் சித்தாந்திகள், மாவீரர்கள் என்று போற்றப்படுகின்றனர். நாம் வாழுகின்ற காலத்தில் மிகக் கடுமையான விமர்சனத்துக் குள்ளாகி யிருக்கும் இவரை யொத்த மாபெரும் சிந்தனையாளரை நாட்டில் காண முடியாது!

மூதறிஞர் ராஜாஜி அவர்கள் நாடு அடிமையாக இருந்த காலத்தில் 1937ம் ஆண்டு முதன் மந்திரியாக இருந்தார்கள். அந்தக் காலத்தில் நான் மிகச் சிறு வயதினனாக இருந்தபோது அவரது பிரசங்கத்தைப் பரவசத்துடன் கேட்டிருக்கிறேன். அதற்குப் பின் 1952ம் ஆண்டு வயது வந்தோருக்கு ஓட்டுரிமை அடிப்படையில் நடந்த தேர்தலில் சென்னை ராஜ்யத்தில் அஸ்தமிக்கவிருந்த காங்கிரஸ் ஆட்சியை நிலைநாட்டினார்; முதல்வரானார். அந்தச் சட்ட சபையில் நானும் அங்கம் வகித்தேன். அந்தக் காலத்தையும் இன்றைய நிலைமையையும் எண்ணிப் பார்க்கத் தோன்றுகிறது! பாரபட்சமற்ற அந்த முதன் மந்திரியின் பொற்காலம் இன்றுவரை என் மனத்தில் பசுமையாக உள்ளது. அப்போதுள்ள சட்டசபை அங்கத்தினர்களில் இளையவன், எதிர்க்கட்சிக்காரன் என்ற நிலையில் இருந்தேன். பொது முறையீடுகள் சம்பந்தமாக அவரைச் சந்திக்கப் பல தடவை முயன்றேன்; முடியவில்லை. ஆனால் எந்தக் கோரிக்கைகளுக்காக அவரைச் சந்திக்க விரும்பினேனோ அவைகளெல்லாம் அவரது செயலாளராக விளங்கிய சபாநாயகம் அவர்கள் மூலம் எவ்வித இடையூறுமின்றி ஒரு வார காலத்துக்குள் நிறைவேற்றப்பட்டன. சொந்தக் கட்சிக்காரன் அல்ல என்பதற்காகக் காரியம் நிறைவேறாத நிலை அவர் காலத்தில் இல்லை. மாமேதை ராஜாஜி அவர்கள் சாதி, மத, அரசியல் வேறுபாடுகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட பேரறிஞர் என்பதை அப்போதே உணர்ந்தேன்.

இதுபோன்ற தயவுதாட்சிண்யமற்ற நேர்மையான போக்கின் காரணமாக அவரது கட்சிக்காரர்களாலேயே ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளில் வெளியேற்றப்பட்டது கண்டு எங்களை யொத்தோர் உள்ளம் அழுதது! பதவிக்காக எதை வேண்டுமானாலும் செய்யும் கொடிய செயல்களை அவரது வாழ்வில் என்றும் நான் கண்டதில்லை! தூய உளப் பாங்கு, தளராத செயலூக்கம், ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நாடு வளர்த்து வந்துள்ள பண்பாட்டோடு கூடிய சிந்தனைப் பாதை ஆகியவற்றைக் கொண்ட மூதறிஞரை எந்த வார்த்தை சொல்லிப் பாராட்ட முடியும்?

இந்திய சோஷலிஸ்ட் இயக்கத்தின் மாபெரும் முன்னோடி டாக்டர் லோகியா அவர்கள் நாட்டிலுள்ள செயலற்ற தன்மை கண்டு மனம் புழுங்கிச் சித்தாந்தி ராஜாஜியைக் கண்டு தெளிவு பெற வந்தார். அவருடன் கலந்துரையாடிய டாக்டர் லோகியா அவர்கள் தெம்போடும் தெளிவோடும் திரும்பினார்.

இந்திய சரித்திரத்தில் சுமார் அறுபது ஆண்டுகள் பின்னிப் பிணைந்து கிடக்கும் அவரது வாழ்விலிருந்து பெரும் ஆதர்சத்தை நாம் பெற முடியும்.

மாமனிதன் காந்திஜி நூற்றிருபது ஆண்டுகள் வாழ விரும்பினார். மூதறிஞர் ராஜாஜி அவர்கள் 150 ஆண்டுகளாவது வாழ்வது நம் நாட்டுக்கு நன்மை பயக்கும்.

ரயில்வே ஊழியர்கள் பலர் தினம் தினம் ரயிலில் செல்லுகின்றனர். விளைவு? அவர்களில் சிலரது குடும்பங்கள் தலைவரற்ற கப்பலைப் போல் நினைத்த திசையில் செல்லுகின்றன.

அத்தியாயம் 19

ஒரு கை சர்க்கரைப் பொங்கலும் ஒரே ஒரு காஞ்சிபுரம் இட்டிலியும்தான் சாப்பிட்டாள். அதிலேயே வயிறு நிரம்பி விட்டாற் போலத் தோன்றிற்று மங்களாவுக்கு. ரங்காச்சாரியின் அறையை விட்டு வெளியே வந்ததும், வீட்டுக்குப் போக வேண்டும் என்று தான் முதல் எண்ணமாக எழுந்தது. ஆனால் அடுத்த கணமே எண்ணத்தை மாற்றினாள். அவள் வீட்டுக்குப் போய் என்ன செய்யப் போகிறாள்? வயிறு நிறைந்துவிட்டது. சாப்பிட வேறு பிடிக்கவில்லை. அம்மா தொணதொண என்று அவள் கழுத்தை அறுத்துத் தட்டின் முன் உட்கார வைப்பாள். அப்பா, அவளைச் சாப்பாட்டுக்குத் தாம் சொல்லியனுப்பியபடி ஏன் வரவில்லை என்று துருவித் துருவிக் கேட்பார். தங்கைகளும் தம்பிகளும் கேதாரத்தைப் பற்றி அளக்க ஆரம்பிப்பார்கள். கல்யாணம் அவன் நடப்பது போல் நடந்து பேசுவது போலப் பேசி நையாண்டி செய்வான்.

அவளுக்கு இப்போது வீட்டில் என்ன வேலை?

மணி இரண்டு அடிக்க ஐந்து நிமிடம் இருந்தது. மூன்று மணிக்கு மேரியும் அவளுமாகக் கேதாரத்தைப் பார்க்கப் போகிறார்கள். மேரி இரண்டரை அல்லது இரண்டே முக்காலுக்கு அவளைத் தேடிக் கொண்டு வருவாள். அதற்கு முன் அவளே மேரி வீட்டுக்குச் சென்றால் என்ன? மேரி இன்றைக்கு லீவு எடுத்துக் கொண்டிருக்கிறாள். அவள் இல்லாவிட்டால்தான் என்ன? ரொஸாரியோவிடம் பத்து நிமிடங்கள் பேசி விட்டு வரலாம். அவரைப் பார்த்துப் பேசி எத்தனை நாட்களாகிவிட்டன?

ரொஸாரியோ வீட்டை அடைந்தபோது மணி இரண்டு பத்து ஆகியிருந்தது.

அன்று அதிகாலையில் பெங்களூர் மெயிலில் சென்ட்ரலுக்குத் திரும்பிய ரொஸாரியோவின் உடல் தள்ளாடியது. மெதுவாக நடந்தார்.

வீட்டை அடைந்த போது மணி ஆறு. தலை வரைக்கும் போர்த்திக் கொண்டு எட்மண்ட் திண்ணையில் தூங்கிக் கொண்டிருந்தான். ஹாலில் நுழைந்த அவர் பாண்டையும் கோட்டையும் கழற்றி விட்டுப் பைஜாமா அணிந்து கொண்டார். ஹாலை ஒட்டினாற் போன்ற அறையினுள் ஒரு தடவை எட்டிப்





பார்த்து விட்டு. தலையை இழுத்துக் கொண்டார். ஜானி அலங்கோலமாகப் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். முந்தின இரவு எத்தனை மணி வரையில் வேப்பேரியில் யார் யாருடன் நடனம் ஆடிக் களைத்துப் போயிருக்கிறாளோ? யாருக்குத் தெரியும்? யார் அவளிடம் கேட்க முடியும்?

சமையலறையில் சத்தம் கேட்டது. மேரி தான்.

" மேரி !"

"ஹலோ, டாடி. குட்மார்னிங்."

மேரி உடனடியாகத் தேநீருடன் வந்தாள்.

"களைப்பா இருக்கா டாடி?"

"ஆமாம், மேரி !"

"மசாப்பிடுங்கோ, டாடீ!"

"எப்படி இருக்கே மேரி ?"

"ஓ. கே. டாடி."

" நான் தூங்கணும் !" தேநீரைக் குடித்த அவர் தமக்குத் தாமே சொல்லிக் கொண்டார்.

"ஓ. டாடி.... ஆனால் மதர் இன்னும் தூங்கிக்கிட்டிருக்கா !"

"இது புதிசில்லே! நான் ஈஸி சேரிலே தூங்கறேன்!"

மேரி பதில் சொல்லாமல் காலிக் கோப்பையையும் சாஸரையும் எடுத்துக் கொண்டு போனாள். சித்தி என்று எட்டு மணிக்கு முன்னால் எழுந்தாள்? பாதி நாட்கள் தலை கனமாக இருக்கிறது என்று, 1 பத்து மணி வரை இரவு உடையுடன் அங்கு மிங்குமாக வருவாள். தலைவலி மாத்திரைகளைப் போட்டுக்கொள்வாள். தன்னை ஒத்தவர்கள் கேட்டால், "என்ன செய்வது ஹாங்கோவர்... இன்னும் ஒரு 'பெக்' காவது குடித்தால்தான் விடுவேன் என்று பிடிவாதம் செய்தார்கள்" என்பாள். இந்தச் சம்பாஷணையைக் கேட்கும் போதெல்லாம் மேரிக்குக்





பாலத்தின் கீழே தண்ணீர் ஓடுகிறது. தேங்கித் துர்நாற்றம் அடிப்பதில்லை. அதைப்போல் பணத்தைக் கையாளுங்கள். பணத்தைத் தேக்கி அசுத்தம் அடைந்து நாற்றம் எடுக்க விடாதீர்கள். தாராளமாக ஓடவிட்டு நலன் செய்யுங்கள். பணத்தை உங்கள் சேவகனாக அமைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் அதன் அடிமையாகிவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

கோபத்தைவிட வேதனைதான் மேலோங்கி நிற்கும்!' பாவம்! அப்பா இவளிடம் மாட்டிக்கொண்டிருக்கிறாரே!

பெண் பதில் சொல்லாமல் செல்வதைக் கண்ட ரொஸாரியோ தமக்குள் புலம்பிக் கொண்டார். சாய்வு நாற்காலியில் விழுந்த அவருக்கு நெற்றி நரம்புகள் வலித்தன. இரவு முழுதும் அவருக்கு வேலை!

திடீரென்று பணக் கஷ்டம் வேறு நெஞ்சை அமுக்கியது. ரயில்வே ஊழியர்கள் கோவாபரேட்டிவ் பாங்கியில் இருநூறு ரூபாய் கடன் வாங்க அவர் மூந்தாநாள் விண்ணப்பத்தை மணி மூலமாகக் கொடுத்தனுப்பியிருக்கிறார். மணி எஸ். எஸ்.ஸிடம் கொடுத்தானோ இல்லையோ? கொடுத்திருந்தாலும் அதை எஸ். எஸ். என்ன செய்தாரோ? தம் வேலைத் தொந்தரவில் பாங்கியில் கொடுக்க மறந்து போயிருந்தால்?

ஹாஸியைக் கல்யாணம் செய்து கொண்ட நாளிலிருந்து இதுவரையில் அவர் பண விஷயத்தில் நிம்மதியாக இருந்தது கிடையாது. எட்மண்டின் ஊதாரிச் செலவில் அவருடைய நிம்மதி மேலும் குலைந்தது. இவ்வளவுக்கும் மேரி தன் சம்பளப் பணம் முழுவதையும் அவரிடம் ஒப்படைக்கிறாள். ஹாஸியும் எட்மண்டும் மேரியைப் போல இருந்தால், வாழ்வே சொர்க்கமாக இருக்குமே? அப்பாவும் பெண்ணும் மாதா மாதம் கொண்டு வருகிற எண்ணூறு ரூபாயில் எவ்வளவு இன்பமாக வாழலாம்!

ஹாஸியின் அலட்சியப் போக்கு, எட்மண்டின் அடங்காப் பிடாரித்தனம் இப்போது அவரை ஒரு கடனாளியாக்கியிருக்கிறது. பிராவிடண்டு பண்டுப் பணத்திலிருந்து வாங்கிய இரண்டாயிரத்து நானூறு ரூபாயில் நானூறு ரூபாய்தான். இதுவரையில் சம்பளத்திலிருந்து பிடிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் இருபது மாதங்களுக்குத் தலைவலி தொடரப் போகிறது. கூட்டுறவு பாங்கியில் ஆயிரத்து எண்ணூறு ரூபாய் வரை கடன் வாங்கலாம். இந்தத் தேதியில் ஆயிரத்து அறுநூறு ரூபாய் கடன் இருக்கிறது. இதை அவர் இப்போது 'கடைசி எல்லை வரையில் ஏற்றப் போகிறார்.

இதைத் தவிரச் சில்லறை சில்லறையாகக் கடன். ஒரு கடனை அடைக்க இன்னொரு கடன். அந்தக் கடனை அடைக்க இன்னொன்று. ஒரு கடன் இன்னொன்றை விழுங்கக் கடைசியில் கடன் அவரை விழுங்கிக் கொண்டு வருகிறது.

அவர் இதிலிருந்து என்றுதான் தம்மை மீட்டுக் கொள்வார்? யாருக்கும் பதில் சொல்ல வேண்டாத நிலைமையை என்றுதான் அடைவார்?

இத்தனை வேதனைக்கிடையிலும் அவர் மனத்தில் மேரி தோன்றினாள். எத்தனையோ துர்ப்பாக்கியங்களுக்கு நடுவில் ஒரு பாக்கியம். அதிருஷ்டம். வாலிபப் பருவத்தில் ஹாராவைக் காதல் மணம் செய்து கொண்டபோது, வாழ்க்கையே வசந்தமாகப் பரிணமித்தபோது அவள் தாமரை போலப் பிறந்தாள். தாயின் நல்ல குணங்களெல்லாம் அவளிடம் ஊறியிருந்தன. இந்தப் பெண் மேரி, இப்போது தன்னை விட்டால் அப்பாவுக்கு யாரும் கிடையாது என்ற ஒரே எண்ணத்தில் வாழ்ந்து வருகிறாள்!

அவளுடைய எண்ணமும் சரிதான். இன்றைக்கு வந்ததும் வராததுமாய் அவர் குடித்த தேநீர் மேரி போட்ட அன்புத் தேநீர். மேரி இல்லாவிட்டால், அவருக்குத் தேநீர் குடிக்க வேண்டும் என்றிருந்தால் அவரேதான் ஸ்டவ்வைப் பற்றவைத்துத் தண்ணீர் வைக்க வேண்டும். ஏன், ஹாஸிக்கும் எட்மண்டுக்கும் அவர்தான் தேநீர் போட்டுப் பரிமாற வேண்டும்.

வாழ்க்கையின் ருசியை அனுபவிக்க வேண்டிய வயதில் மேரி தன்னைத்

திருமயிலைக் கபாலீச்சரர் ஆலயம்

கருங்கல் தளவரிசை திருப்பணி

நிதி உதவ வேண்டுகோள்

கயிலையே, மயிலை!

தொண்டை நாட்டுத் திருப்பதியாகிய திருமயிலைக் கபாலீச்சரம் மிகத் தொன்மை வாய்ந்த சிவத்தலம். நற்றமிழ்வல்ல ஞான சம்பந்தர் என்பை எழிலுருகொண்ட ஏந்திழையாகச் செய்த அற்புதத் திருத்தலம். அருணகிரியாரால் பாடப்பெற்ற சிங்கார வேலவர் கோயில் கொண்டுள்ள திருத்தலமும் இதுவே! அம்பிகை மயிலுருவில் வழிபட்ட அரியத் திருத்தலம். அப்பரால் பாடப்பெற்ற அழகொழுகும் ஆலயம். இத்துணை புகழ் மலிந்த மயிலையம்பதியில் உள்ள கற்றோர்கள் ஏத்தும் கபாலீச்சரர் ஆலயப் பிரகாரத்தில் கருங்கல் தளவரிசை அமைக்கும் திருப்பணியினை அறநிலைய அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன் அவர்களால் 22-8-71ல் துவக்கப்பட்டுள்ளது.

இத்தகைய திருப்பணிக்கு ஆகும் செலவு ஏறக்குறைய 2 (இரண்டு) லட்சம். நூறு சதுர அடிக்கு ஆகும் செலவோ ரூ. 400/-தான்!

தமிழகத்தின் தலைநகராம் சிங்காரச் சென்னையில் உலகோர் அனைவரையும் தன் கலையழகால் ஈர்க்கும் இவ்வாலயத்தின் அரிய திருப்பணிக்கு அன்பர்கள் இரு நிதியினை வாரி வழங்கி இறை பணியினை இனிதே முடித்துத் தருமாறு வேண்டுகிறோம்.

நன்கொடை வழங்குபவர்கள், **"நிர்வாக அதிகாரி, திரு கபாலீச்சரர் ஆலயம், மயிலாப்பூர், சென்னை-4"** என்னும் முகவரிக்கு அனுப்பி, அச்சு ரசீது பெற்றுக் கொண்டு திரு கற்பகாம்பாள் உடனுறை திரு கபாலீசுவரரின் திருவருள் பெற்று வாழ வேண்டுகிறோம்.

சி. செல்வ நடராஜ முதலியார்
டி. பாலகிருஷ்ணன்
ஆர். கோதண்டராமன்
எஸ். ஜெயராமன்
அறங்காவலர்கள்

கு. அய்யா சுப்ரமண்ய முதலியார்
தலைமை அறங்காவலர்

த. நாகராஜன், பி. எஸ்ஸி.
நிர்வாக அதிகாரி

தானே அழித்துக் கொண்டு வருகிறாள். அவளுக்கு ஏற்ற ஒரு புருஷன் எப்போது வருவான்? பலராமனை மறந்து வாழும் மேரி இன்னொருவனைக் கல்யாணம் செய்து கொள்வாளா?

ரொஸாரியோ தூங்க நினைத்தாரே தவிர அவரால் தூங்க முடியவில்லை.

திடீரென்று படுக்கை அறையிலிருந்து முனகல் சத்தம் கேட்டது. லூஸி சோம்பல் முறிக்கிறாள் என்பதை ரொஸாரியோ உணர்ந்தார்.

இரண்டு மூன்று நிமிடங்களுக்குப் பிறகு லூஸி வந்தாள். கலைந்த தலை, யௌவனம் குலையாத உடற்கட்டு. தொள தொள வென்றிருந்த இரவு உடையில் கவர்ச்சி அழகியாக வந்து நின்றாள்.

''ஹலோ, டார்லிங், குட்மார்னிங்!'' லூஸி கொட்டாவி விட்டாள்.

அவளுடைய உடற்கட்டையும் மார்பகத்தையும் பார்த்தபோது ரொஸாரியோவின் உள்ளத்தில் அசுர இச்சை மின்னலாக எழுந்தது. ஆனால் அடுத்த கணமே தம்மை அடக்கிக் கொண்டார்.

''குட்மார்னிங்''

''எப்போ வந்தீங்க?''

''ஆறு மணிக்கு.''

''எனக்கு நேற்று பார்ட்டி இருந்தது!''

ரொஸாரியோ பதில் சொல்லவில்லை. அவள் காலைக் கடன்களை முடித்துவிட்டு வருவதற்குள் ரொஸாரியோ கட்டிலில் படுத்து ஒரு சிறு தூக்கம் தூங்கி விட்டார்.

''டார்லிங்!''

''என்ன வேணும் லூஸி? தொந்தரவு பண்ணாதே!''

''இன்னிக்கு எழுபது ரூபாய் வேணும்.''

''எங்கிட்ட இல்லே.''

''வேணுமே!''

''ப்ளீஸ் லூஸி...''

''பெக், பாரோ, ஆர் ஸ்டீல்...''

''எட்மண்ட்கிட்டே சொல்லு. அவன் உதவி பண்ணுவான்.''

லூஸி விடவில்லை. அவள் பேசிக் கொண்டே போனாள்.

ஆனால் ரொஸாரியோ காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை. வாங்கப் போகிற இருநூறு ரூபாய்க் கடனில் பைசா மிஞ்சப் போகிறதில்லை. இரண்டு மாதங்களாக வாங்கிய இறைச்சிக்குத் தொண்ணூறு ரூபாய்கொடுத்தாகணும். மூன்று மாதங்களாக வண்ணானுக்குப் பாக்கி. அது ஒரு முப்பது ரூபாய். போன மாதம் டிக்கட் கலெக்டர் ஜயராமனிடம் கைமாற்றாக வாங்கிய ஐம்



சஸ்திர வைத்தியர்கள், கத்தி எடுத்து அறுப்பதற்கு முன் என்ன செய்கிறார்கள்? கையையும் கத்தியையும் நன்றாகத் தோஷமறத் துலக்கிக் கொண்டே வேலை ஆரம்பிப்பார்கள். அவ்விதமாகவே பொதுப்பணித் திட்டங்கள் போடுகிறவர்கள் முதலில் மனதை நன்றாகச் சுத்தி செய்துகொள்ள வேண்டும்.

பது ரூபாயை உடனடியாகக் கொடுத்தாக வேண்டும். மணிக்குப் பத்து ரூபாய். கறிகாய்க்கும் முட்டைக்கும் மேரி கையில் பத்து ரூபாயாவது கொடுக்க வேண்டும். இதைத் தவிர ஏழு, ஒன்பது என்று சில்லறையாகக் கடன்! எழுபது ரூபாயை லூஸி கையில் கொடுத்து விட்டால் அவர் என்ன செய்வார்?

லூஸி பேச்சை நிறுத்திவிட்டுத் திட்ட ஆரம்பித்தாள். தன் தாம்பத்திய வாழ்க்கையே அவரால் நசித்து விட்டது என்றாள். (இதைக் கேட்டபோது ரொஸாரியோவின் மனத்தில் வெறுப்புக் கலந்த சிரிப்பு வந்தது. யாருடைய வாழ்க்கையை யார் நசித்திருக்கிறார்கள்?) அவருடன் வாழ்வதை விட யார் வீட்டிலாவது வேலை செய்து பிழைக்கலாம் என்று இரைந்தாள். (இருக்கிற சொந்தக் குடும்பத்தில் ஒரு தம்ளரையே எடுத்து வைக்காத இவள் இன்னொரு வீட்டில் போய் வேலையா செய்வாள்?)

கால் மணி நேரம் திட்டின பிறகு திடீரென்று மேரியின் குரல் ஹாலி லிருந்து கேட்டது.

''மதர்!''

''என்ன?''

''அப்பாவைத் தூங்க விடு.''

''அப்போ நீ எழுபது ரூபாய் குடு.''

''கத்தாதே மதர்''

''நீ வாயை மூடு!''

''நீ ஒரு மூளையில்லாத கழுதை!'' என்று கத்தினாள் மேரி. பிறகு, ''இப் போதுதான் ராத்திரி முழுதும் டியூட்டி பார்த்துவிட்டு வந்திருக்கிறார். அவரைத் தூங்க விடாமல் கத்துகிறாயே, நீ ஒரு மூளையில்லாத கழுதை!'' என்றாள்.

''ஷட் அப்!''

மேரி திருப்பிக் கத்தவில்லை.

மெதுவான குரலில், ''நீ ஒரு சோம் பேறி மனுஷி!'' என்றாள் மேரி. பிறகு மேரியின் குரலே கேட்கவில்லை.

எட்மண்ட் எப்போது எழுந்தானோ, ரொஸாரியோவுக்குத் தெரியாது. ஊஸி யின் குரலும் அவருடைய காதில் விழ வில்லை. அவர் உண்மையாகவே தூங்கிப் போய் விட்டார்.

சரியாகப் பன்னிரண்டு மணிக்கு மணி வந்தான். அப்போது ரொஸாரியோ குளித்துவிட்டுத் தினப் பத்திரிகை படித் துக் கொண்டிருந்தார்.

''குட் மார்னிங்!'' மணி சொல்லிக் கொண்டே பணத்தை நீட்டினான்.

அதை எண்ணிப் பார்க்காமலே ''ஓ, நீயே வாங்கிக் கொண்டு வந்துவிட் டாயா! தாங்க் யூ... தாங்க்யூ...'' என்றார் ரொஸாரியோ.

அவர் பணத்தை மேஜைக்குள் வைத்த பிறகு மணி ஓர் இளநீல நிறக் காகிதத்தை அவர் முன்னால் நீட்டினான்.

''என்ன, லோன் அப்ளிகேஷன்!... யாருடையது? எஸ். எஸ். 'லோன்' போட்டிருக்கிறாரா?''

''இல்லே!''

ரொஸாரியோ பார்த்தார். அவர் ரயிலேறு முன்னால் எஸ். எஸ், ஸிடம் சேர்ப்பிக்கச் சொல்லிக் கொடுத்த அப்ளி கேஷன்.

''இது என்ன?''.

''இதைக் கிழித்து அடுப்பில் போடுங்கள்'' என்றான் மணி.

''இது ஏது பணம்?''

''சொந்தப் பணம்.''

''இது என்ன மணி! நீ ஏன் எனக் காகக் கஷ்டப்படுகிறாய்?''

''கஷ்டமே இல்லே ஸார்! இன்னும் ஐம்பது ரூபாய் இருக்கு. வேணுமா?''

''வேண்டாம். என் தலையில் ஏற் கெனவே கடன் நிறைய இருக்கு.''

''இந்த இருநூறு ரூபாயை எப்போ நீங்க திருப்பித் தருவீர்கள்?'' என்று மணி சிரித்தான்.

''இதோ பார், மணி. பாங்கிலே வாங்கினால் மாதம் பத்துப் பத்தாகக் கொடுத்தால் போதும். நீ உதவி செய் கிறே, தாங்க்ஸ். ஆனால், இரண்டு மாசம் மூணு மாசம்னு தவணை கொடுத் தால் நான் என்ன செய்வேன்? எங்கே போவேன்?''

''ரெண்டு ரெண்டு ரூபாயாகக் கொடுங்கள். நூறு தவணையிலே!''

மணி பதிலுக்குக் காத்திருக்கவில்லை. ஓடோடிச் சென்றான்.

ரொஸாரியோ பிரமை பிடித்தவர் போல் உட்கார்ந்திருந்தார்.

''மேரி!''

''மேரி இங்கே இல்லே!'' உள்ளே யிருந்து ஊஸியின் குரல் கேட்டது.

''மிஸ்டர் ரொஸாரியோ!'' என்று அழைத்தாள் மங்களா.

''அவரும் இல்லே!''

மங்களா அலுத்துக் கொண்டே திரும்பி நடந்தாள்.

ரொஸாரியோ, தமக்கே உரித்தான கம்பீரத்தோடு நடந்து வந்து கொண் டிருப்பதைத் தெரு முனைக்கு வந்தபோது கண்டாள்.

''குட் டே டு யூ! மங்களா.''

''குட் டே ஸார்! சௌக்கியமா?''

''ஓ! சௌக்கியம்தான் அம்மா.''

''மேரியைப் பார்க்க வந்தேன்.''

''அவள் உன்னைப் பார்க்கப் போவ தாகச் சொன்னாளே. வா, வீட்டுக்குப் போகலாம். ஒரு கப் டீ சாப்பிடலாம்!''

''தாங்க்ஸ் மிஸ்டர் ரொஸாரியோ. எனக்கு நேரமாகிறது. நான் மேரியை உடனடியாகச் சந்தித்தாக வேண்டும். அவள் என் வீட்டில்தான் இருப்பாள்.''

''எட்மண்டுக்கு நீங்க ரெண்டு பேருமாச் சேர்ந்து வேலை வாங்கித் தரப் போகிறீர்கள்! இல்லையா?''

''முயற்சி செய்கிறோம்.''

''உனக்குக் கடவுள் ஆசி பூரணமாகக் கிடைக்கட்டும், மங்களா... எட்மண்ட் என் கண்ணிலே குத்தின ஊசி. அவன் எப்படியாவது ஒரு வேலையில் சேர்ந்து ஓர் ஆளாக வந்தால் போதும். எனக் குப் பைசா தர வேண்டாம்.''

''அவன் எல்லாம் சரியாகப் போய் விடுவான், ரொஸாரியோ.''

''பார்க்கலாம்.... பார்க்கலாம்..... ஆண்டவன் இருக்கார்!''

''ஸார், ரொஸாரியோ! என் தங் கைக்கு வியாழக் கிழமை பிறந்தநாள்...





குடும்பத்தினர் அனைவரும்
திட ஆரோக்கியத்துடன் திகழ
ஃபாஸ்ஃபோமின்®
Squibb
Phosfomin
ஃபாஸ்ஃபோமின்...
பழரஸ மணம் கமழும்
பச்சை நிற விடமின்
டானிக்.
SQUIBB SARABHAI CHEMICALS
Shilpi-MPMA-31A/71 Tam.

''அப்படியா? நல்லது... உன் தங்கைக்கு எனது பூரண ஆசிகள்.''

''நீங்க சாயங்காலம் பார்ட்டிக்கு வரணும் சார். சிறிய தேநீர் விருந்து!''

''நாளன்றைக்கா? வியாழக்கிழமைதானே?''

''ஆமாம்.''

''மன்னிக்கணும், மங்களா! கேரளா எக்ஸ்பிரஸில் ட்யூட்டி!''

''ரயில்வே உத்தியோகம் என்றாலே இப்படித்தான். என்ன பண்றது?''

''மேரி அவசியம்வருவாள்''

''நான் வரேன், சார்!'',

''வீட்டிலே ஜுலியைப் பார்த்தாயா? என்ன சொன்னள்?''

''பார்த்தேன் சார்... பத்து நிமிஷம் பேசிக்கொண்டிருந்தேன்.... உங்களுக்கு அழகான மனைவி! நீங்க பாக்கியசாலி!''

ரொஸாரியோ சிரித்தார்.

''அவள் ஒரு மிருகம் மங்களா!... எனக்கு மன நிம்மதியே இல்லே... ஐ ஆம் ஸாரி... மனைவியைப் பற்றி இழிவாகப் பேசக் கூடாது தான்! என்ன பண்ணறது..!''

மங்களா துக்கம் தோய்ந்த அவருடைய முகத்தை ஒரு தடவை பார்த்து விட்டுப் பதில் ஏதும் சொல்லாமல் நடந்தாள்.

அடக்கத்துடன் கூடிய அரிய பணி

எழுதும் விஷயங்களை எவ்வளவு சிந்தித்து எவ்வளவு பயபக்தியோடு எழுதுகிறார் ராஜாஜி என்பதை அவரது நூலுக்கு அவரே எழுதியுள்ள முன்னுரைகளில் கண்டு வியக்கிறோம். அடக்கமாகிற அழகுடன் பொழியும் அம்முன்னுரைகளில் சில பகுதிகள்:

ராமகிருஷ்ண உபநிஷதம்

நான் பயந்து பயந்து எழுதிய அத்தியாயங்களைப் படித்து வந்த நண்பர்கள் என் விளக்கம் நன்றாகவே இருப்பதாகச் சொல்லி உற்சாகப்படுத்தி வந்தார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ண பகவான் உபதேசத்தை எடுத்துச் சொல்லும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது ஆண்டவன் அருள் அன்றி வேறில்லை.

உபநிஷதப் பலகணி

நம்மைப் பெற்ற முன்னோர்களில் மகாஞானிகளும் குணசீலர்களுமான முனிவர்கள் கண்ட கருத்துக்களை இக்காலத்துச் சிறுவர்களுக்கு அறிமுகப்படுத்தலாம் என்று எழுதிய இந்தப் புத்தகத்தைப் பார்க்கும் பெரியோர்கள் குற்றங் குறைகளைப் பொறுத்து ஆசீர்வதிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கண்ணன் காட்டிய வழி

வழிகாட்ட முடியாமல் போனாலும் அதாவது கொண்டு போய்ச் சேர வேண்டிய இடத்துக்குக் கொண்டுபோக முடியாமல் போனாலும் நடக்காமலே உட்கார்ந்து இருக்கும் குருடனுக்குக் காலில் இரத்தம் கட்டிக் கொள்ளாமல் இருக்க மற்றொரு குருடன் 'வா, நடக்கலாம்' என்று எழுப்பி விட்டுச் சுற்றிச் சுற்றியாவது இருவரும் நடந்து வருவதும் ஒருவிதத்தில் நலமாயிருக்குமல்லவா? அவ்விதமே இது என்று வைத்து ஆரம்பிக்கிறேன். - வி. ச. வாசுதேவன்

அவள் கேதாரத்தைச் சந்திக்கப் போகிறாள். இதுதான் கடைசிச் சந்திப்பாக இருக்கப் போகிறது. ஆசை தீர அபிதத்தைப் பற்றியும் இரண்டு வார்த்தைகள், எட்மண்ட் வேலை விஷயமாகப் பேசிய பிறகு கேட்க வேண்டும்.

மங்களா நடந்தாள்.

சென்ட்ரலின் சிவப்பு வெளித் தோற்றம் கம்பீரமாகக் காட்சி அளித்தது. டாக்ஸிகளும் வண்டிகளும் அடைத்துக் கிடந்தன. பிச்சைக்காரர்களும், ஊர் சுற்றிகளும் பாதையின் ஓரத்தில் குழுமியிருந்தார்கள்.

டாக்ஸியைப் பிடிக்க வேகம். தலை தெறிக்கும் வேகம். நீலச் சொக்காய்க் காரர்களின் இரைச்சல். பொழுது போவதற்காக வந்தவர்களின் சோம்பேறித்தனமான நடை.

வழியெல்லாம் அடைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கும் பிரயாணிகள்.

அப்பா... அம்மா... பதினொரு குழந்தைகள்... மேரி... ரொஸாரியோ.... ஜுலி...ரங்காச்சாரி ... மணி...அபிதம் ஜம்புநாதன் .... ஆதிசேஷன் ... எல்லாரும் பிரயாணிகள். எல்லாரும் பிரயாணிகள்.

அவளும் ஒரு பிரயாணி. கேதாரம் ஒரு பிரயாணி. அவள் எங்கோ போய்க் கொண்டிருக்கிறாள். அவன் எங்கோ போகிறான்!

அவள் தன் பிரயாணத்தின் திசையை மாற்றி, அவனுடன் பிரயாணம் செய்ய மனம் விழைகிறாள்...

பிரயாண அலுப்பு மாறிப் பிரயாணம் சுகமாகத் தோன்றுகிறது.

சுகத்துக்குக் காரணம்?

காரணம்?

அவளுக்கு மூண்டுவிட்ட ஆசைகள்... கனவுகள்...

சே! என்ன பிரயாணம்!

மங்களா நடந்தாள். (தொடரும்)

டெலிபோனிலே....!

எஸ்.வி.கிருஷ்ணமூர்த்தி



"அன்புள்ள நளினிக்கு, இன்று உன் பரீட்சைகள் முடிந்திருக்கும். நன்றாக எழுதியிருப்பாய் என்று நினைக்கிறேன். இந்த வருஷம் தாத்தா வீட்டுக்குப் போகாமல் நேரே என்னிடம் வா. உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும். அவசரத்தில் எழுதுவதால் நான் சொல்ல வேண்டியதை நேரில் சொல்லுகிறேன்.'' - அப்பா.

பெண்கள் கல்லூரி ஹாஸ்டலில் இருக்கும் ஒரு மாணவிக்குத் தகப்பனாரிடமிருந்து இந்த ரீதியில் கடிதம் வந்தால் சக மாணவிகளின் கிண்டலுக்குக் கேட்க வேண்டுமா ?

பம்பாயில் நளினியின் தகப்பனார் இருப்புக் கொள்ளாமல் தான் இருந்தார். இருபது வருஷத் தாம்பத்திய வாழ்க்கைக்குப் பிறகு மனைவியை இழந்து கல்யாணப் பருவம் வந்த பெண்ணுக்குத் தகப்பனாராய் இருந்தார். தாயார் இருந்த வரையிலும் நளினி தாயின் செல்லமாய் வளர்ந்தாள். அவள் போனபின் தாத்தாவின் அன்புக்குப் பாத்திரமானாள். தகப்பனாரும் பெண்ணும் நெருங்கிப் பழகியது கொஞ்சம்தான். தகப்பனாரின் மனப்பான்மை எல்லாவற்றிலும் சற்று 'கிட்டேத்தி'யானது.

நளினி அவர் வீட்டுக்கு வந்தால் அவளுடன் எப்படிப் பேச்சைத் தொடங்குவது? நேருக்கு நேராகப் பெண்ணுடன் பேச ஏதோ ஒரு கூச்சம் அவரைக் கவ்விக் கொண்டது. கல்யாணமாக வேண்டிய பெண். தாம் அவளிடம் சொல்லவிருந்த விஷயம் அவள் மனத்தில் எப்படிப் பதியுமோ ?

அறையின் விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கப் போனார். ஐந்து நிமிஷங்களில் அவர் வீட்டில் பொருத்தியிருந்த 'காலிங்பெல்' ஒலித்தது. கதவைத் திறந்தார். கையில் ஒரு சூட்கேஸுடன் நளினி பிரசன்னமானாள். பெண்ணின் முகத்தை இரண்டு வருஷங்களுக்குமுன் பார்த்தது. இப்பொழுது எவ்வளவு வளர்ந்து விட்டிருந்தாள். முகவெட்டு, நடை எல்லாம் தாயாரை ஞாபகமூட்டின. பருமனில்தான் அவரைச் சற்றுப் பின்பற்றி யிருந்தாள்.

''பிளேனிலே வந்தியா நளினி!'' என்று கேட்டு, ஸூட்கேஸை வாங்கிக் கொண்டார்.

''அவசரமாக வரச் சொல்லி எழுதியிருந்தீர்களே !'' என்றாள் நளினி.

''ஆமாம்.... ஆனால் இரவு இந்த நேரத்துக்கு மேல் எதுவும் பேச வேண்டாம். நீ போய்ப் படுத்துக் கொள் நளினி! காலையில் பேசிக் கொள்ளலாம்'' என்று பெண்ணைப் படுக்கையறைக்கு அழைத்துச் சென்று தாமும் சற்று நேரம் ஏதோ புரட்டிக் கொண்டிருந்து விட்டு உறங்கினார்.

காலை விடிந்தது.

தகப்பனார் மனத்தில் நிறைகொள்ளாத ஆனந்தம். இப்படிப்பட்ட தங்கமான பெண்ணை இரண்டு வருஷங்களாக அன்பு சொரியத் தம்முடன் வைத்துப் போற்றாமல் தாத்தாவின் வீட்டுக்கு அனுப்பிக் கொண்டிருந்தோமே என்ற குற்ற உணர்வு குத்திற்று. அதைவிட முக்கியமான பிரச்னை – எதற்காக அவளை வரவழைத்தாரோ அது அவர் நெஞ்சை உறுத்திக்கொண்டே யிருந்தது.

''நளினி! சீக்கிரமாகவே வந்துவிடுகிறேன். சாயங்காலம் வெளியே போய் வரலாம்'' என்று ஆபீசுக்குக் கிளம்ப ஆயத்தமானார்.

''ஊ..ம்.....'' என்றாள் நளினி. அறையில் டெலிபோன் மணி அடித்தது. நளினி எடுத்தாள். ஒரு நிமிஷம் எதிர்ப்புறத்திலிருந்து ஒரு வார்த்தையும் இல்லை.

''ஹலோ... ரங்கநாத் வீடு...? யார் பேசறது?'' என்று நளினி சற்று உரக்கக் கேட்டாள்.

''யார் பேசுகிறது?'' என்று எதிர்ப்புறத்திலிருந்து அதட்டலுடன் ஒரு ஸ்திரீயின் குரல் வந்தது.

''ரங்கநாத்தின் பெண்.... அப்பா வேண்டுமா? நீங்கள் யார்?'' என்றாள் நளினி பதிலுக்கு.

''ரங்கநாத்தின் பெண்.....!'' என்று அந்த ஸ்திரீயின் ஆச்சரியக் குரல் தொனித்தது.

''ஆமாம்....'' என்று நளினி சொல்லிக் கொண்டிருக்கும்போது நளினியின் தகப்பனார் டெலிபோனை வாங்கிக் கொண்டார்.

''ரங்கநாத் ஹியர்'' எதிர்ப்புறத்திலிருந்து என்ன பேச்சு வந்ததோ தெரியாது. ''ஷட் அப்'' என்று டெலிபோனில் இரைந்து படீர் என்று கொக்கியில் போனை வைத்தார். தகப்பனார் முன்கோபி என்று நளினிக்குத் தெரியும். என்னவோ, ஏதோ என்று கேட்க பயம். ரங்கநாத் பக்கத்திலிருந்த சோபாவில்

உட்கார்ந்தார். நளினி டெலிபோன் மேஜையைப் பிடித்துக் கொண்டு நின்றாள். ரங்கநாத் தீவிர யோசனையில் மூக்கைத் தடவிவிட்டுக் கொண்டார். ஏதோ தீர்மானத்துக்கு வந்தவர் போல், ''நளினி! இந்த நம்பருக்கு டெலிபோன் பண்ணி நான் ஆபீசுக்கு வரவில்லை என்று சொல்'' என்று சொன்னார். டெலிபோன் நம்பர்கள் சுழன்றன.

''ரங்கநாத் ஹவுஸ் ஹியர். அவர் பெண் பேசறேன். இன்று அப்பா ஆபீசுக்கு வரவில்லை என்று தெரியப்படுத்தச் சொன்னார்'' என்று நளினி பேசினாள்.

''வரவில்லையாமா?'' என்று ஆச்சரியத்துடன் முன்பு பேசிய ஸ்திரீயின் குரல் வினவியது. அதையடுத்து மறு பக்கம் டெலிபோன் அறையப்பட்டதுதான் காதில் விழுந்தது.

''என் அப்பா! உடம்பு சொஸ்தமில்லையா? ஆபீஸுக்குக் கிளம்ப ஆயத்தமாகி ஏன் போகவில்லை? உங்களுக்கு யார் டாக்டர்? அவரைக் கூப்பிடட்டுமா?'' என்று கவலையுடன் கேட்டாள் நளினி. தன்னை அவசரமாக அழைத்ததின் காரணம் அப்பாவுக்கு ஏதாவது மாரடைப்பு போன்ற விபரீத நோய் காரணமாய்த் தன்னிடம் உயிருடன் இருக்கும் போதே சொல்ல வேண்டியதைச் சொல்லத்தான் அழைத்தாரா என்ற சம்சயம் தலை தூக்கிற்று. உடம்பின் கோளாறைத் தன்னிடம் மறைக்கிறாரோ என்பது போன்ற பயங்கரக் கற்பனைகள் பளிச்சிட்டன.

''ஒன்றுமில்லை, நளினி!'' என்று அவள் கரங்களைப் பற்றிப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டார். ''வழக்கம் எவ்வளவு பொல்லாதது பார். இரண்டு வருஷங்களாக இயந்திரம் மாதிரி ஒன்பது மணி அடித்தால் ஆபீசுக்குப் போய்ப் பழக்கமாகிவிட்டு, நீ வந்திருப்பதைக்கூட உணராமல் கிளம்பினேனே. திடீரென்று ஞாபகம் வரவே ஆபீசுக்குப் போகவில்லை'' என்று அவள் விரல்களைச் சொடுக்கி விட்டார். நளினிக்குப் பெருமிதம். தாயார் இருந்த நாட்களில் தகப்பனாரிடமிருந்து அநுபவிக்காத அன்பை இன்று ஏற்றுக் கொண்டு ரசித்துக் கொண்டிருந்தாள்.

அவள் படிப்பைப் பற்றியும், மேலே என்ன செய்வதில் அவளுக்கு நாட்டம் என்றெல்லாம் விசாரித்தார்.

''அமெரிக்கா போய்ப் படிக்க வேண்டும் என்றிருக்கிறேன், அப்பா. நீங்கள் அனுமதி கொடுத்தால்.''

''அமெரிக்கா போகணுமா?... ரொம்ப நல்லது...அதற்கு ஏற்பாடு செய்கிறேன்.''

அந்தப் பெரிய துணிக் கடையின் அருகில் நளினியின் தகப்பனார் காரை நிறுத்தினார். கையில் கத்தை ரூபாய் நோட்டுக்களைத் திணித்தார். ''நளினி ! உனக்கு வேண்டிய துணிகளை வாங்கிக் கொள்.''

''நீங்களும் வாருங்களேன்....'' என்று அப்பாவை அழைத்தவாறே நளினி காரை விட்டு இறங்கினாள்.

''நீ போய்விட்டு வா. நான் இங்கேயே உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன்...''

''நான் வர நாழியாகுமேப்பா....புடவை செலக்ஷன் அவ்வளவு சீக்கிரம் முடியுமாப்பா?'' என்று கொஞ்சினாள்.

''எவ்வளவு நாழியானாலும் பரவாயில்லை. போய்ட்டு வா. இங்கே உட்கார்ந்து கொண்டே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறேன். பொழுது போவதே எனக்குத் தெரியாது.''

நளினி கடையினுள் போனாள். புடவை கும்பல் கும்பலாக எடுத்துப் போடப்பட்டது. எதைப் பொறுக்குவது என்று திணற அடிக்கும் கலர், டிஸைன் எல்லாம். அங்கு இவள் போல் அநேகம் பெண்கள். அருகில் இரண்டு நடுத்தர வயதான ஸ்திரீகள் பேசிக் கொண்டது காதில் விழுந்தது.

''என்ன தனியாய்? ரங்கநாத் வரவில்லையா?''

'' இன்று அவர் வீட்டிலிருந்து அவர் 'பெண்' என்று ஏதோ ஒரு பெண் குரல் காதில் விழுந்தது. அவரும் முறைப்பாய் டெலிபோனில் 'ஷட் — அப்' என்று இரைந்துவிட்டு டெலிபோனை அறைந்தார். ஆபீஸுக்கும் வரவில்லை.''

நளினி துணியைப் பொறுக்குவது போல் அவர்கள் அருகில் வந்து காதைத் தீட்டிக் கொண்டாள்.

''எங்கிருந்து இந்தப் புதுப் பெண் குதித்தாள் ?''

''இந்தக் காலத்தில் எந்தப் பெண் சிநேகிதியையும் 'பெண்' என்றோ 'நீஸ்' என்றோ




விக்ஸ் வேபோரப் மூக்கு அடைப்பை உடனேபோக்குகிறது. தாராளமாக மூச்சுவிட உதவுகிறது. குழந்தை சுகமடைந்து நிம்மதியாகத் தூங்குகிறது.

விக்ஸ் வேபோரப்பின் சிறப்பு. அதை ஜலதோஷம் பிடிக்கும் இடங்களான மூக்கு, தொண்டை, மார்பு, முதுகு இங்கெல்லாம் சேடியாகத்தடவலாம். ஜலதோஷத்தின் தொல்லைகளிலிருந்து குழந்தை உடனே நிவாரணம்பெறுகிறது. தாராளமாக மூச்சு விடுகிறது. சுகம் அடைகிறது.

விக்ஸ் வேபோரப் குணமளிப்பதன் காரணம் அது ஜலதோஷத்தை எதிர்த்து உள்ளும் புறமும் இரு வழிகளில் போராடுகிறது.

1. 

உடம்பின் மேலே

2. 

உடம்பின் உள்ளே

1) விக்ஸ் வேபோரப் ஜலதோஷத்தால் ஏற்படும் உடல் வலியைப் போக்குகிறது.

2) வேபோரப் ஆவியாக மாற்றப்படுகிறது. இந்த ஆவியில் மருந்து இருக்கிறது. ஒவ்வொரு முறை சுவாசிக்கும்போதும் இது உள்ளே ஆழச்சென்று, மூக்கு அடைப்பைப் போக்குகிறது. தொண்டை கரகரப்பை நிறுத்துகிறது. மார்பு கபத்தை நீக்குகிறது. ஜலதோஷத்தின் தொல்லைகள் மறைகின்றன.

முக்கியமான குறிப்புகள்

விரைவில் குணம்பெற விக்ஸ் வேபோரப்பை கனிசமாகத் தடவவும்—ஒரு ஸ்டாண்டர்ட் சைஸ் (19 கிராம்) ஜாடி குழந்தைக்கு ஏழு எட்டு முறையும், வயதுவந்தவருக்கு மூன்று நான்கு முறையும் தடவப் போதுமானது.



விரைவாக குணம்பெற, மூக்கு, தொண்டை, மார்பு, முதுகு இங்கெல்லாம் விக்ஸ் வேபோரப்பை நன்கு தேயுங்கள். ஜலதோஷம் நீங்கும்வரை இதைத் தொடர்ந்து செய்யவும்.



12 கிராம் பெரிய டின்



ஜலதோஷத்திற்கு மருந்து விக்ஸ் வேபோரப்

ரிச்சர்ட்ஸன் ஹிந்துஸ்தான் லிமிடெட்டின் தயாரிப்பு.

கௌரவமாய்ச் சொல்லிக் கொள்வார்கள். அந்த வகையில் ஏதாவதோ ?'' என்றார். நளினிக்கு ரத்தம் கொதித்தது. அப்படிப் பேசியவரை 'பளார்' என்று அறைந்து 'என்ன சொன்னாய்?' என்று கேட்கத் துடித்தது. அடக்கிக் கொண்டாள்.

''அப்ப, உன் திட்டம் என்ன? ரொம்பக் கோட்டை கட்டிக் கொண்டிருந்தாயே ?''

''இந்த 'டாடர்'னு ஒருத்தி வந்திருக்காளே. அவளை எங்காவது துரத்தினால்தான் நம் திட்டம் செயல்பட முடியும்.''

நளினி அவர்கள் இருவரையும் ஒரு முறை நன்றாகப் பார்த்துக் கொண்டாள். இவர்கள் அப்பாவை மொட்டையடிக்க ஏதோ திட்டமிட்டிருந்திருக்கிறார்கள். நான் வந்து கெடுத்துவிட்டேனா? இதைத்தான் அப்பா முக்கிய விஷயம் என்று மறைமுகமாய் எழுதி, எவ்வளவு கேட்டும் சொல்லாமலிருந்தாரா ?

இல்லாவிட்டால்..... பளிச்சென்று வேறு ஓர் எண்ணம் தோன்றியது. ஒரு வேளை அப்பா மறு விவாகம்.... நான் அதற்குக் குறுக்கே நிற்கலாமா?

கடையைவிட்டு வந்தாள்.

''என்ன நளினி...... ஒன்றும் வாங்கவில்லையா?'' கார் போய்க் கொண்டிருந்தது.

''ஒன்றும் பிடிக்கவில்லை.... அப்பா.....'' அவர் முகத்தை உற்றுக் கவனித்தாள்.

''அப்போ, நாம் அந்தச் சிநேகிதர் வீட்டுக்குப் போய் உன் படிப்பைப் பற்றிக் கேட்போம்'' என்றார் தந்தை.

''அப்பா, நான் அமெரிக்கா போகப் போறதில்லை..... தீர்மானத்தை மாற்றிக் கொண்டுவிட்டேன்.....''

'பெண்ணுன்னு ஒருத்தி வந்திருக்காளே, அவளை எங்கேயாவது துரத்தினால்தான் நம் திட்டம் செயல்பட முடியும்.' கடையில் கேட்ட வார்த்தைகள் அவள் காதில் ஒலித்தன.

தகப்பனார் கேள்விக் குறியுடன் பெண்ணைப் பார்த்தார். பெண் தகப்பனாரின் ஆசை எதற்காவது குந்தகமாய் இருக்கிறேனா என்று குழப்பத்தில் அப்பாவைப் பார்த்தாள்.

''நளினி! எனக்கு இப்ப நீதானம்மா பக்க பலம்'' என்று பெண்ணின் கையைப் பிடித்துக் கொண்டார். பெண்ணின் மூலம் அவர் ஏதோ இக்கட்டான நிலையைத் தவிர்க்க முயற்சி செய்திருக்கிறார் என்று காட்டிக் கொண்டு விட்டார். அதைப் பெண்ணும் புரிந்துகொண்டு விட்டாள்.

வீட்டுக்கு வந்தான். இரவு உணவுக்குச் சாப்பாட்டு மேசையில் உட்கார்ந்தார்கள். டெலிபோன் மணி அடித்தது.

''ஹூ இஸ் ஸ்பீகிங்...?'' என்று மறு புறத்திலிருந்து கேள்வி வந்தது.

'' 'டாடர்' அல்லது 'நீஸ்' என்று இண்டர்ல் செய்தீர்களே அந்த ரங்கநாத் டாடர்'' என்று முகத்தில் அறைந்தாற்போல் சொல்லி டெலிபோனைப் படீரென்று வைத்தாள்.

''நல்லகாரியம் செய்தான் நளினி. இல்லாவிட்டால் இந்த அரக்கிகளிடமிருந்து எப்படித் தப்புவது?'' என்று பெருமூச்சு விட்டார் ரங்கநாத்.

இக்கட்டான நிலை... ...விடுபட்ட கலை !

பேராசிரியர் கேட்ட யோசனை

1942 ஆகஸ்டு மாதம். தேச மெங்கிலும் பெரும் கொந்தளிப்பு. உணர்ச்சிப் பிழம்பான மாணவர்கள் நிலைபற்றிச் சொல்லவேண்டியதில்லை. இந் நிலையில் கல்லூரி முதல்வர்கள் மனம் பட்டபாட்டை என்னென்பது ? மாணவர்கள் கல்லூரிகளைப் பகிஷ்கரிப்பதும் வேலை நிறுத்தம் செய்வதும் நியாயம்; அவர்களை அடக்கு முறைக்கு உள்ளாக்குவது அநீதி என்று ஒரு புறம் தோன்றும். மற்றொருபுறம் அவர்களை எப்படியாகிலும் வகுப்புகளுக்கு வரச் செய்து கல்லூரி நடத்த வேண்டியது நமது கடமை என்றும் தோன்றும். இப்படிப்பட்ட இக்கட்டான நிலையில் பேராசிரியர் கே. சுவாமிநாதன் 1942-ல் சிக்கிக்கொண்டார்.



அப்பொழுது அவர் சென்னை ராஜதானிக் கல்லூரியின் துணை முதல்வர். முதல்வராக இருந்தவர் பாய்வொர்த் என்ற ஆங்கிலேயர். இருவருமே தேசத் தலைவர்களைச் சிறைப் படுத்தியதை எதிர்த்து மாணவர் நடத்தும் வேலை நிறுத்தம் நியாயம் என்று கருதினர். ஆனால் அவர்கள் பணியாற்றியது (பிரிட்டிஷ்) அரசாங்கக் கல்லூரியில் அல்லவா ? இப்படி அனுதாபம் கொள்ள முடியுமா ?


இந்தத் தர்ம சங்கட நிலையைச் சமாளிக்க வழி தேடிப் பேராசிரியர் கே. சுவாமிநாதன் ராஜாஜியை அணுகினார்.

ராஜாஜி, ''ஒரு கல்லூரிக்குக் கிடைக்கும் பெரும் புகழும் சக்தியும் மாணவர்களைப் பொறுத்தது. ஆகவே மாணவர்களோ முக்கியம். கல்லூரிக்கு வருவதும் வராமலிருப்பதும் பற்றி முடிவு செய்யும் பொறுப்பை மாணவர்களிடமே விட்டு விடுங்கள்!'' என்றார்.

அப்படியே செய்தோம். மாணவர்கள் ஒவ்வொரு நாளும் கூடி வகுப்புக்குப் போவதைப் பற்றி விவாதித்து வாக்கெடுப்பார்கள். இப்படி ஒரு சில நாட்கள் நடந்தன. கடைசியில் செப்டம்பர் 15-ம் தேதி ஏறத்தாழ எல்லா மாணவர்களுமே வகுப்புகளுக்கு வந்து விட்டனர்.

இப்படி ராஜாஜி தர்மத்துக்கும் நியாயத்துக்கும் ஏற்ற ஒரு பரிகாரம் அன்று எங்களுக்கு அளித்தார் என்கிறார் பேராசிரியர் சுவாமிநாதன்.

(ஆதாரம் : ராஜாஜி - 93 என்ற ஆங்கில மலர்) — குண்டுமணி



சென்னை, மைலாப்பூர், திரைப்படத் தயாரிப்பாளர் ஸ்ரீ T. S. முத்துஸ்வாமி அய்யர் குமாரன் M. வைத்தியநாதன் (ரவி)க்கும் திருச்சி, தில்லைநகர் ரிடயர்ட் அக்கௌண்ட்ஸ் ஆபீஸர் L. K. V. S. மணி அய்யர் குமாரத்தி லலிதாவுக்கும் திருச்சியில் *31-10-71*ல் விவாகமும், பிறகு சென்னை ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் *3-11-71*ல் வரவேற்பும் விமரிசையாக நடந்தேறியது.

வாழ்க மணமக்கள்!



சோமு

திருநெல்வேலி வண்ணார்பேட்டையில் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு நடந்த உரையாடல் அது! டி. கே. சி. வீட்டுத் தாழ்வாரத்தின் வளைவுக்குள்ளேயிருந்த வட்டமான தொட்டிக் கட்டுக்குள் உட்கார்ந்து ராஜாஜி பேசிக் கொண்டிருந்தார்கள். தமிழ் மொழியின் ஆற்றலும் வல்லமையும் ஒப்பற்றவை என்பது பேச்சின் மையமான பொருள். அந்தப் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த எங்களுக்கெல்லாம் ஒரே வியப்பும் ஆனந்தமும் !

அதற்கு முன்பும் பல முறை ராஜாஜியின் பேச்சைக் கேட்டு அனுபவித்தவர்கள் பலர் அந்த வட்டத் தொட்டியிலே இருந்தோம். ஆனால் அதெல்லாம் பொது மேடைகளில், அரசியல் கூட்டங்களில் கேட்ட சொற்பொழிவுகள். இந்தப் பேச்சு முற்றிலும் வேறு விதம். இது முழுக்க முழுக்க இலக்கியப் பேச்சு.

உரையாடல் முடிந்து நாங்கள் எல்லாரும் எழுந்தபோது இரண்டு உண்மைகள் எங்களுக்குத் தெளிவாகப் புலனாயின. ஒன்று, தமிழ் மொழியினிடத்து ராஜாஜிக்கு இருந்த சுடற்ற பற்று. மற்றொன்று, டி. கே. சி.க்கும் ராஜாஜிக்கும் ஏற்பட்டிருந்த அளவிலாத பாசத்தின் உண்மையான காரணம்.

ஆம்; டி. கே. சி.க்கும் ராஜாஜிக்கும் ஏற்பட்ட அந்த நட்பு சாதாரண உறவு இல்லை. அது இலக்கியக் காதல் என்றே சொல்லுவேன். அந்தக் காதலுக்கு வித்து தமிழில் இருந்தது என்பதை அன்று புரிந்து கொண்டேன். இரண்டு மாபெரும் உள்ளங்களை எது ஒன்றாக இணைத்தது என்ற கேள்விக்கு விடை, ஒரே ஒரு வார்த்தை, தமிழ் – உறவு! இணையற்ற ஆற்றலும் வல்லமையும் கொண்டதான தமிழ் மொழியைப் போலவே அந்தத் தமிழுறவும் இணையற்ற ஆற்றலும் வல்லமையும் கொண்ட இணைப்பாகத் திகழ்ந்தது. அத்தகைய ஒரு நட்பை வேறெங்கும் நான் கண்டதில்லை. தமிழிலே பிறந்து, தமிழிலே இணைந்து, தமிழிலே ஒன்றிவிட்ட உறவு அது ! தமிழின் ஆற்றலுக்குக் குறைவு ஏற்பட்டால் அல்லவா அந்த உறவிலே குறைவு ஏற்படும் ? அதற்கு ஏது குறைவு அல்லது மறைவு? டி. கே. சி.யின் வாழ்நாள் முழுதும் அந்த நட்பு சுடற்றதாய், ஒப்பற்றதாய், இணையற்றதாய் விளங்கியது !

இன்று அத்தனையும் அப்படி அப்படியே என் நினைவிலே வட்டம் சுற்ற ஆரம்பித்தது, என் எதிரேயுள்ள **வானதி பதிப்பகத்தின்** புதிய வெளியீடுகளைப் பார்த்ததும் !

சென்னை தியாகராய நகரத்திலேயுள்ள வானதி பதிப்பகத்தார் தமிழ் வாசகர்களுக்குப் புதியவர்கள் இல்லை. ஆனால் இப்போது ஒரு புதுமையைச் செய்து காட்டியிருக்கிறார்கள் அவர்கள் ! ராஜாஜியின் நூல்களை அழகான முறையிலே அச்சிட்டு "இந்தத் தொகுப்பை வெளியிடும் வாய்ப்புக் கிடைத்ததற்குக் காரணமான இருவரையும் நினைந்து போற்றுகிறோம்" என்று சொல்லிப் பக்தியோடு வணங்குகிறார்கள். அந்தப் புதிய பதிப்புகளைப் பார்த்ததும் பழைய நினைவுகள் மீண்டும் உள்ளத்தில் பசுமையாக எழுகின்றன. இதோ ராஜாஜியின் குரல் மீண்டும் கேட்கிறது :

"தனக்கே தெரியாது தன்னுடைய அழகு: பிறருக்குத்தான் தெரியும். அதிக சிரமப்பட்டு நிலைக்கண்ணாடி வைத்துப் பார்த்துக் கொண்டாலும் தன் அழகைச் சரியாகத் தெரிந்து கொள்வது துர்லபம். இவ்வாறே தமிழ் மொழியின் அழகு தமிழருக்குத் தெரிவதில்லை...... ஆங்கிலத்தின் நரம்புக் கட்டும், வாகனமும், பொருட் செறிவும் தமிழில் கிடையாது என்று தமிழை மறந்த தமிழர் எண்ணுகிறார்கள்...... Plus, Minus, x2, x3, x0, equation, square cube, root — இவைகளையும், ஏன், ஏறக்குறைய கணித முழுவதையும் பல நூற்றாண்டுகளுக்கு முன் வேற்று பாஷைக் கலப்பின்றி, உலகத்திற்கு அளித்த இந்திய நாடானது — ஊரார் அலைந்து மறுபடி தாய் வீட்டுக்கு அந்தக் கலை திரும்பி வந்த காலத்தில், 'உனக்கு உடுக்க இங்கே ஆடையில்லை. பிற தேசத்தாருடைய உடுப்புக்கள் அணிந்துதான் நீ இங்கே இருக்கலாம்' என்கிறது! என்ன வெட்கக்கேடு! இதுவே வேறு பல சாஸ்திரங்களின் நிலையும்! எல்லாக் கலைகளுக்கும் போதிய மொழிச் செல்வம் நம் தாயண்டை உள்ளது; தமிழும் சம்ஸ்கிருதமும் சேர்ந்து உலகத்தையே அளக்கலாம். நம் நாட்டுக்குப் பழக்கமான உடை உடுத்தினால்தான் கலைகளைக் கண்டு பயப்படாமலும் திகைக்காமலும் நம் நாட்டு மக்கள் அவைகளண்டை நெருங்கிப் பழகுவார்கள்; பயனும் அடைவார்கள்."

இது ராஜாஜியின் பேச்சு. இன்றுள்ள மாணவர்களுக்கும் பிறருக்கும் இது புதிதாகத் தோன்றலாம். ஆனால் முப்பது ஆண்டுகளுக்கு முன்பே ராஜாஜி இத்தனை உறுதியோடும் தெளிவோடும் சொல்லியிருக்கிறார்! '**ராஜாஜியின் கட்டுரைகள்**' என்ற நூலிலே இதன் விரிவைப் பார்க்கலாம்.

நல்ல தமிழில் பேச வேண்டும், பரிசுத்தமான நடையைக் கையாள வேண்டும் என்று இன்று பலரும் சொல்கிறார்கள் அல்லவா ? இதைப் பற்றியும் அன்றைக்கே ராஜாஜி எழுதுகிறார்:

"வீட்டிலே நாம் பேசும் பாஷை பற்றி ஒரு வார்த்தை. இப்போது நாம் வீட்டிலே என்ன பாஷை பேசுகிறோம்? தமிழ் என்று பதில் சொல்லலாம். நான் அதை ஒப்புக் கொள்ளவில்லை. பல மொழிகளும் சேர்ந்த ஒரு கலப்பு மொழியைத்தான் நாம் பேசுகிறோம். இது மிக்க அருவருப்பைத் தருகிறது!"

இதுவும் ராஜாஜியின் பேச்சுத்தான்.



தமிழ் மொழியைப் பற்றி மட்டுந்தானா பேசுகிறார் ராஜாஜி? நம்முடைய சங்கீதத்தைப் பற்றி அவருக்கு என்ன கொள்கை என்று சிலர் கேட்கலாம்! கேளுங்கள்:

"மனிதன் குரலில் தோன்றும் சங்கீதம் பூரணத்தன்மை அடைவதற்குக் கருத்தும், மொழியும், ராகமும், தாளமும் ஒன்றில் ஒன்று சரியாகப் பொருந்தி ஒன்றை ஒன்று பூரணப் படுத்தி நிற்கவேண்டும். வெறும் தாளத்தை மிருதங்கத்தில் கேட்டு மகிழ்ச்சி அடையலாம். ராகத்தையே தனியாகக் கேட்டும் இன்பம் பெறலாம். ஆனால் கருத்து, மொழி, ராகம், தாளம் நான்கும் பொருத்தம் பெற்றால் பாமரரையும், கல்விகற்ற பெரியோர்களையும் ஒருங்கே பரவசப்படுத்துகிறது. மொழிகளின்றி வாத்தியக் கருவிகளின் வாயிலாகவே இசை உண்டாக்கலாம். ஆனால் மக்கள் குரலின் வழியாக இசை பிறக்கும்போது மொழிகள் சேருகின்றன. கருத்தற்ற எழுத்துக்களை அல்லது நமக்குக் கருத்து விளங்காத மொழிகளைக் கோத்துப் பாடிய வாய்ப்பாட்டானது மனிதன் குரலை வெறும் வாத்தியக் கருவியாகச் செய்வதே யாகும். வழக்கத்தினால் எதையும் ரசிக்கலாம். ஆனால் அவ்வித அனுபவம் ஒரு பிரமாணம் ஆகாது!"

என்ன இது? டி. கே. சி. பேசுகிறாரா அல்லது ராஜாஜியின் பேச்சா இது என்று மெய்ம்மறக்கிறோம் அல்லவா? இப்போது புரிகிறது. அந்த இரு பெரும் உள்ளங்களுக்குள்ளும் ஏற்பட்டிருந்த தாம்பத்திய உறவின் ஒற்றுமை!

"டி. கே. சி. பேசுவதை நான் பேசுவதாகவே நீங்கள் கொள்ள வேண்டும்" என்று டில்லியிலிருந்து கவர்னர் ஜெனரல் ராஜாஜி ஒரு மகாநாட்டுக்கு வாழ்த்துத் தந்தி அனுப்பினார்! டி. கே. சி. தலைமை வகித்த மகாநாடு அது! அந்த வாழ்த்துத் தந்தியைப் பற்றி ரா. கி. மிகுந்த பரவசத்தோடு அந்தக் காலத்தில் "கல்கி" பத்திரிகையில் மதிப்புரை எழுதினார். அத்தனை இன்பமும் இப்போது இந்தப் புதிய பதிப்பான ராஜாஜியின் நூல்களிலே மறுபடியும் காண்கிறோம்.


கட்டுரைகள் அடங்கிய பகுதிகள் இரண்டு தனி நூல்களாக **'ராஜாஜியின் கட்டுரைகள்'** என்ற தலைப்பிலும், **'ஆற்றின் மோகம்'** என்ற தலைப்பிலும் வெளிவந்துள்ளன. சிறுகதைகள் என்று சொல்ல வேண்டிய அரிய கதைகளான 'அங்கையும் பிறாவும்', 'திக்கற்ற பார்வதி', 'தேவானை' முதலிய சிறுகதைகள் அடங்கிய தொகுப்பு **'ராஜாஜி கதைகள்'** என்ற தலைப்பிலும் **'நிரந்தரச் செல்வம்'** என்ற மற்றொரு தலைப்பிலும் இரண்டு நூல்களாக வெளிவந்திருக்கின்றன.

ராஜாஜியின் இலக்கிய உள்ளமும் கலை உள்ளமும் என்ன என்று தீர்க்கமாகத் தெரிய வேண்டும் என்றால், இந்த நான்கு நூல்களை யும் படித்துப் பாருங்கள் என்று நம்பிக்கையின்றிக் கூறுவேன். அருமையான சிந்தனைகள், தெளிவான வாதங்கள், அசைக்க முடியாத



உங்கள் உடலுக்குத் தேவை 23 ஊட்டச் சத்துக்கள்
பாலிலே உள்ளவை 9
Complan
காம்ப்ளான் 23 சத்துக்களும் கொண்டது
(புரதம், வைட்டமின்கள், தாதுப்பொருள்கள் உள்பட)
Compla
Complan
க்ளாக்ஸோ
ஆராய்ச்சியின் உலகறிந்த தயாரிப்பு.
காம்ப்ளான் — முழுமையான உணவு
சத்துப் பற்றுக்குறைகளிலிருந்து உங்களைப் பாதுகாக்கிறது.


அற்புதமான
சூப்பர் டஸ்ட்!
அருமையான டீ!
Brooke Bond
Super
Dust
Tea
Super
Dust
உயர்
தரமான
டீ
உயரிய சுவை. மேன்மையான
டிகாக்ஷன். முற்றிலும்
உயர்ந்த தேநீரின் திருப் தியை
உங்களுக்குத் தருவது
ப்ரூக் பாண்ட் சூப்பர் டஸ்ட்.
அருந்தி ஆனந்தமடையுங்கள்.



நாமக்கல்லில் ஹனுமத் ஜயந்தி

நாமக்கல் ஆஞ்சநேயரின் பெருமை நாடறியும். நாமக்கல் ஹனுமத் ஜயந்தி அபிஷேக சங்கத்தார் 8-12-71 முதல் 17-12-71 வரை வரப்பிரசாதியான இந்த அனுமனுக்கு உற்சவமும் பூர்ணாபிஷேகமும் நடத்தவிருக்கிறார்கள். அச்சமயம் சதுர்வேத பாராயணம் ஸ்ரீ ராமாயண பாராயணம், பிரவசனம், பஜனை முதலியவைகளுடன் லட்சார்ச்சனையும் நடக்கவிருக்கிறது. ஸஹஸ்ரநாம அர்ச்சனைக்கு ரூபாய் பதினைந்து கொடுப்பவர்களுக்கு அர்ச்சனை பிரசாதத்துடன் ஆஞ்சநேயர் வெள்ளி டாலர் ரிஜிஸ்டர் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

நன்கொடை அனுப்பவேண்டிய விலாசம்: கே. வி. நரசிம்ம ராவ், (இந்தியன் பாங்க், நாமக்கல்) பொருளாளர், ஹனுமத் ஜயந்தி அபிஷேக சங்கம், நாமக்கல், சேலம் ஜில்லா.

உறுதி இத்தனையும் சேர்ந்து கட்டுரைகளாகவும் கதைகளாகவும் பிறப்பெடுக்கும்போது, அவற்றுக்கு ஒரு தனியான எழிலும் மணமும் உண்டு. அவற்றை இந்த நூல்களிலே கண்டு களிக்கிறோம். இவை தவிர, **'திண்ணை ரசாயனம்'** என்ற நூலிலே தமிழ் மொழியின் விஞ்ஞான ஆற்றலையும், வளைவு நெளிவுகளையும் பார்க்கிறோம். பார்த்துப் பூரிப்பு அடைகிறோம்.

வானதி பதிப்பகத்தார் அச்சிட்டுள்ள ராஜாஜி நூல்களில் இன்னும் இரண்டு புத்தகங்கள் இருபெரும் ஞானிகளின் நல்லுரைகள். கூடுவிட்டுக் கூடு பாய்ந்தது போல் மொழி விட்டு மொழி பாய்ந்து பேசுகிறார்கள் மார்க்கஸ் ஆரீலியஸும், ஸாக்ரடீஸும்!

ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்குமுன் ரோமாபுரியை ஆண்டு வந்த மார்க்கஸ் ஆரீலியஸ் சக்கரவர்த்தியின் **ஆத்ம சிந்தனையை** — ராஜாஜி மொழிபெயர்ப்பில் உபநிடத நூல்களைப் படிப்பது போலப் படித்து அனுபவம் பெறலாம். இதைப் போலவேதான் ''ஸோக்ரதர்'' என்ற நூலும்! இதைப் பற்றி ராஜாஜி தமது முன்னுரையிலே கூறுகிறார்:

''உலகத்தில் சிறந்தோங்கி விளங்கின சத்திய ஸாக்கிரகிகள் நால்வர். அவர்கள் புத்தர், ஸோக்ரதர், ஏசுநாதர், காந்தியடிகள் என்பவர். இவர்களில் ஸோக்ரதர் பாரத தேசத்தில் அவதரித்தவர் அல்ல; தமிழர்களுக்குச் சாதாரணமாய்த் தெரிந்தவரும் அல்ல. இந்த மகானது பெரு அற்புதமான மரண வரலாற்றை ஒருவாறு தமிழ் மக்கள் படித்துணரும் பொருட்டு இச் சிறு புத்தகத்தை, வேலூர்ச் சிறைச்சாலையில் என்னை ஆங்கில அரசாங்கத்தார் தனி அறையில் அடைத்து வைத்திருந்த காலத்தில் பொழுது போக்காக எழுதினேன்.''

பொழுதுபோக்கு இத்தனை பயனுள்ள இலக்கியமாக உருவானதற்குத் தமிழ் வாசகர்கள் ராஜாஜியோடு சேர்ந்து ஆங்கில அரசாங்கத்துக்குமே நன்றி சொல்லலாம்! நூல் அத்தனை உயர்வாக இருக்கிறது. ஆனால் ராஜாஜியைக் கேட்டால், 'நன்றி சொல்வது இருக்கட்டும். அந்த நூல்களைப் படித்துத் தமிழ் மக்கள் பயன் பெற வேண்டும். அதுவே அதற்கு நன்றி!' என்பார்.


ராஜாஜி கட்டுரைகள் — ரூ. 4: ஆற்றின் மோகம்: ரூ. 1-75: ராஜாஜி கதைகள் — ரூ. 4-50; நிரந்தரச் செல்வம் — ரூ. 1-75: ஆத்மசிந்தனை: ரூ. 1-75: ஸோக்ரதர்: ரூ. 1-75 திண்ணை ரசாயனம் — ரூ. 1-00: திருமூலர் தவமொழி (ராஜாஜி — சோமு) ரூ. 3-00. நூல்கள் கிடைக்கும் இடம்: வானதி பதிப்பகம், தியாகராயநகர், சென்னை — 17.



பிறப்பும் இறப்பும்

சிந்தனை சக்தி படைத்த மனிதன் ஒரு நாள் எந்த சிந்தனையும் இல்லாமல் சவமாகி விடுகிறான். எதிர்காலம் உண்டு என்ற நம்பிக்கையிலேயே ஒவ்வொரு நிமிஷமும் உயிர் வாழ்ந்து செயலாற்றி வருகிற மனிதன் திடீரென்று உயிரற்ற சடலமாகி விடுகிறான். இந்தக் கோலத்தைக் கண்ட நாளாக நாகரிகம் பெற்ற சமுதாயம், இந்த மனித உயிர் என்பதுதான் என்ன என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறது. மனித உயிர் என்பது உடலுக்கு அப்பாற்பட்ட ஒன்று என்பது பற்றி சமுதாயத்தின் சிந்தனை பல ஊகங்களையும் அனுமானங்களையும் பின்னி வந்திருக்கிறது. இந்த உடம்பு சவமானபின், அதை மண்ணிலிட்டுப் புதைத்தபின் — அல்லது நெருப்பிலிட்டுப் பொசுக்கியபின் — உயிர் என்ன ஆகிறது என்பது பற்றிப் பலபடித்தாகச் சிந்தனை படர்ந்திருக்கிறது. 'சாவோடு மனித உயிரின் கதையும் முடிந்து போச்சு; சுவாசம் நின்று, மூளையும் நரம்பு மண்டலமும் ஓய்ந்து போய், உடலின் சகல இந்திரியங்களும் செயலற்றுப் போவதுடன் மனித உயிரே அற்றுப் போய் சூனியமாகி விடுகிறது' என்ற முடிவுக்கு எந்த நாகரிக சமுதாயமும் வரவில்லை. இப்படிக் கருதிப் பிரச்னையைத் தீர்த்து விட்டோம் என்று நிம்மதியாக இருக்க முயலுபவரின் எண்ணிக்கை வெகுசொற்பமே. மாறாக, உலகத்தின் சிந்தனையாளர் யாவருமே உடலுக்கு வேறாக, ஆன்மா என்று ஒன்று இருப்பதாகவும், இந்த ஆன்மாதான் உயிருள்ள உடம்பை மனிதனாக ஆக்குகிறது என்றும், உடம்பு அழிந்த பின்னும் இந்த ஆன்மா அழிவதில்லை என்றும், அதை அழிக்கவே முடியாது என்றும் எடுத்துரைக்கிறார்கள்.

சோக்ரதர் தமது மரணத்துக்குமுன் சீடர்களான சகாக்களிடம் நிகழ்த்திய கடைசி உரையில் இவ்விஷயத்தைச் சாங்கோபாங்கமாக அலசியிருக்கிறார். 'நான்' என்றும், 'நீ' என்றும் அந்த சகாக்கள் சம்பாஷிக்கையில் பல முறை கூறிவந்த வஸ்து உண்மையில் அமரத்துவம் வாய்ந்தது என்றார் சோக்ரதர். அந்த அமரவஸ்து வந்து குடி புகும் கூர் இருக்கைதான் மனித உடல் என்றார். இதை அடுத்து, பெருத்த சோகத்தில் பொருந்தாத நகைச்சுவை சேருவது போல் ஒரு நிகழ்ச்சி நடந்தது. உடலைப் பொருட்டாகவே கருதாத சோக்ரதரிடம் அவரது சீடர்கள், அவர் மரணமுற்றபின் அவருடைய உடலை தகனம் செய்வதா, அடக்கம் செய்வதா என்று வினவினர். சோக்ரதர் சொன்னார்: "நீங்கள் எப்பேர்ப்பட்ட அறிவிலிகள்! 'நான்' என்பது பற்றி நான் இத்தனை விளக்கிய பின்னும்



என்னை இந்த உடம்பு என்றே எண்ணு கிறீர்களே ! இந்த உடம்பிலிருந்து நான் வெளியேறிப் பறக்கப் போகிறேன். அதன் பின் 'என்னை' உங்களால் பிடிக்க முடியாது. 'என்னை' உங்களால் எரிக்கவும் முடியாது ; புதைக்கவும் முடியாது. என்னை உங்களால் பிடிக்க முடியாத போது, இந்தச் சடலத்தை என்ன வேண்டுமானாலும் செய்து கொள் ளுங்கள்'' என்றார்.

மனிதனின் உண்மையான 'நான்' என் பதை எரிக்கவோ, வெட்டவோ, துளைக் கவோ, மூழ்கடிக்கவோ முடியாது என்பதையே பகவத் கீதையும் சொல்கிறது. ஆன்மா உட லுக்கு வேறுபட்டது; அது அமரத் தன்மை வாய்ந்தது என்று ஸோக்ரதர் கூறியதைத் தான் கீதையும் உபதேசிக்கிறது.

ஈச உபநிஷதம் பின்வருமாறு கூறுகிறது :

अनेजदेकं मनसो जवीयो
नैनद्देवा आप्नुवन् पूर्वमर्षत् ।
तद्धावतोऽन्यानत्येति तिष्ठत्
तस्मिन्नपो मातरिश्वा दधाति ॥

स पर्यगाच्छुक्रमकायमव्रणमस्नाविरं
शुद्धमपापविद्धम् ।
कविर्मनीषी परिभूः स्वयंभूर्याथातथ्य-
तोऽर्थान् व्यदधाच्छाश्वतीभ्यः समाभ्यः ॥

பண்டிதர்கள் இந்த மந்திரங்களுக்குப் பல விதமாகப் பொருள் கொள்வார்கள். மொத் தத்தில் இவற்றின் தாத்பரியத்தைப் பின்வரு மாறு வைத்துக் கொள்ளலாம் :

ஆன்மாவைப் பருக்க முடியாது; அசைக்க முடியாது; மாற்றி அமைக்க முடியாது ; இந்திரியங்களால் அதைக் கிரகிக்க முடி யாது. ஆன்மாவை அறிவதற்கு இந்திரி யங்கள் எவ்வளவு தூரம் சென்றாலும், அதற்கும் தொலை தூரத்தில் பிடிபடாமல் நிற்பது ஆன்மா. அதுவே பல உடம்புகளை எடுத்துக் கொள்கிறது. ஒவ்வொரு பிறவியி லும் செய்த வினைகளின் ஒட்டுமொத்தத் தைப் பொறுத்து அது மறுபடியும் கருவில் புகுகிறது. ஆன்மா என்பது உடலில் எந்த ஒரு குறிப்பிட்ட அங்கத்திலும் வசிப்ப தல்ல. அது அனைத்திடமும் வியாபக மானது. அதற்குப் பௌதிகமான வடிவம் இல்லாததால் அதனைப் புண்படுத்த முடி யாது. அதற்கு நாடிகளும், மூட்டுக்களும் இல்லை. அது பாபத்தில் தோன்றியதல்ல. அது இயல்பாகவே பரிசுத்தமானது. மனத் தையும் ஆள்வது அதுவே. அது யாராலும் படைக்கப்பட்டதல்ல. அநாதியானது. நல்ல செயல்கள், தீய செயல்கள் இவற்றின் விளைவை அறுவடை செய்கின்ற பல பிறவி களில் அதுவே உட்புகுந்து சென்று ஜனன மரணங்களைக் காண்கிறது.

பரமாத்மாவும் ஜீவாத்மாவும் ஒன்றே எனக் கருதும் அத்வைதத்தில் தோய்ந்த பண்டிதர்கள், இது போல் ஜீவான்ம லட்ச ணங்களைக் கூறும் மந்திரங்கள் பரமான்மா வைக் குறிப்பனவே என்று பாஷ்யம் செய் வார்கள். இந்த அடிப்படையிலேயே அவர்கள் நேருடலான மந்திர வாசகங்களுக்கு விளக் கம் தருவார்கள்.

ஒவ்வொரு பிறவியிலும் செய்கிற வினைக்கு ஏற்ப மனித உயிர் மீண்டும் மீண்டும் ஜன்மா எடுக்கிறது என்பதை சமணர்களும், பௌத்தர்களும், சீக்கியர்களும் உள்பட இந்திய மதங்களில் எல்லாப் பிரிவினரும் ஒப் புக் கொள்கிறார்கள். இந்தியாவின் ஆதிசமயத் துக்கு மாறாக அவ்வப்போது பல புதிய மதங் களும், மதப் பிரிவுகளும் தோன்றிய போதி லும், கர்மத்தின்படி ஜன்மங்கள் பலவற்றை ஓர் உயிர் ஏற்கிறது என்ற சித்தாந்தம் மட்டும் பாறை போல் உறுதியாக நிற்கிறது.

இந்த ஜனன — மரணச் சக்கரத்தின் சுழற் சியிலிருந்து விடுதலை பெறுவதுதான் முக்தி. 'முக்தி' என்ற சம்ஸ்கிருதச் சொல்லுக்கு 'விடுபடுவது' என்பதே பொருள். 'முக்தி' என்றால் ஸ்வர்க்கம் போன்ற ஓர் ஆனந்த லோகத்திலோ, அரண்மனையிலோ, நந்த



வனத்திலோ இன்பமாக வாழுவது என்று பொருள் அல்ல.

ஹிந்து மதத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே முக்தியைக் குறித்து இரண்டு சித்தாந்தங்கள் இருந்து வந்திருக்கின்றன. ஹிந்துக்களின் ஆதார நூல்களில் இவ்விரண்டு சித்தாந்தங்களும் பல இடங்களிலும் சேர்ந்தாற்போலவே காணப்படுகின்றன. சில இடங்களில் இவை எளிதில் விளங்கிக் கொள்ள முடியாதவாறு பின்னிக் கிடக்கின்றன. சில இடங்களில் இவை இரண்டும் சமரஸப்படுத்தப் பெறுகின்றன. சில இடங்களிலோ சமரஸம் செய்ய முடியாதபடி தனித் தனி சித்தாந்தங்களாகக் கூறப்படுகின்றன. சிக்கலை அவிழ்க்க நான் முற்படவில்லை. முக்தி பற்றிய இரு சித்தாந்தங்களைத் தனித் தனியானவையாகவே கருதி, அவற்றைச் சுருக்கமாக எடுத்துரைக்க முயல்கிறேன்.

ஜீவான்மா என்பது பரம்பொருளில் பரிபூரணமாக இரண்டறக் கலந்து, தனது தனித் தன்மையை முற்றிலும் இழந்து விடுவதுதான் முக்தி என்பதும் ஒரு சித்தாந்தம். சங்கரரும், புத்தரும் கொண்ட லட்சியம் இதுவே. பகவத் கீதையின் இரண்டாவது, ஐந்தாவது, அத்தியாயங்களில் கூறப்படும் பிரம்ம நிர்வாணமும் இதுவே. பிரம்மத்தில் ஒன்றி, ஜீவான்ம பாவம் என்பதாகத் தோன்றும் தனித் தன்மையைப் பூரணமாக இழந்து விடுவதே நிரந்தரமான பேரானந்த நிலை என்பது அத்வைதிகளின் முடிவு. இந்தச் சித்தாந்தத்தை விளக்கியவர்களில் தலைசிறந்து விளங்குபவர் சங்கராசாரியர்.

தத்துவத் துறையில் பார்த்தால் இன்று இந்தியாவில் அத்வைதம்தான் பிரதானமாக ஆட்சி புரிகிறது. ஆயினும் மத உணர்வுள்ள ஹிந்து மக்களை எடுத்துக் கொண்டால், அவர்கள் அனைவரும் குணங்களற்ற பரம்பொருளில் ஜீவான்மாவின் தனித்தன்மையை இழக்க விரும்புவதில்லை. இந்தப் பிரபஞ்சத்தை ஆளும் ஆண்டவனைக் குணங்கள் கொண்ட ஒரு மூர்த்தியாக பாவித்து அவனை அடைந்து அவனிடமிருந்து நிரந்தரமான உன்னத ஆனந்தத்தை அநுபவிப்பதைத் தான் மோக்ஷமாகக் கொள்கிறார்கள். தனித் தன்மையை 'இழப்பது' என்ற எதிர்மறை ஆனந்தத்தைவிட, ஆண்டவன் என்ற மகாசக்தியிடமிருந்து நேரடியான ஓர் ஆனந்தத்தைப் 'பெறுவது'தான் மக்களின் விருப்பமாக இருக்கிறது.

'பகவானை அடைந்து அவனது சந்நிதியில் பெறுகிற ஆனந்தம் இக உலக ஆனந்தம்போல் முற்றுப் பெறுவதல்ல; இக உலகில் இன்பம் போலவே அதன் எதிர்மறையான துன்பமும் உள்ளது; ஆனால் பகவானின் சந்நிதியில் துன்பமில்லாத கலப்பற்ற இன்பமே உண்டு' என்று இவர்கள் கொள்கிறார்கள். ஜீவான்ம பாவத்தை வைத்துக் கொண்டே ஓர் இன்பத்தைப் பெற முடியுமானால், அதற்கு



ஆஞ்சநேயன் மகிழ்கிறன்!

அனுப்பியவர்:
டி. ஏ. கிருஷ்ணமூர்த்தி

ராஜாஜி அவர்களின் பிரசித்திபெற்ற ''சக்கரவர்த்தித் திருமகன்'' என்னும் நூலை நாலைந்து நண்பர்கள் பக்தி சிரத்தையுடன் சேர்ந்திருந்து படிக்கத் தொடங்கினோம். நாளுக்கு நாள் ரஸிகர்கள் கூட்டம் ஆண் பெண்பாலர் உள்படப் பெருகத் தொடங்கியது. உத்சாகம் மிகுந்த நண்பர் ஒருவர் ஸ்ரீ ராமன் படத்தையும் அருகில் வைத்துக் கூடவே ஆஞ்சநேய மூர்த்திக்கென்று ஒரு மணைப் பலகையைப் போட்டு, கிரமமாக பக்தி சிரத்தையுடன் படிக்கும்படியான சூழ்நிலையை உருவாக்கி விட்டார். பட்டாபிஷேகக் கட்டம் வரும் தினத்தன்று ஒரு விழாவாகக் கொண்டாட சகல ஏற்பாடுகளையும் செய்துவிட்டார். இந்த விவரத்தையெல்லாம் கூறி வாழ்த்துச் செய்தி கோரி ராஜாஜியவர்களுக்கு எழுதினேன். உடனே பதிலும் வந்தது:

16-7-58

அன்பும் ஆசீர்வாதமும்.

கடிதத்தைப் பார்த்து அளவுகடந்த மகிழ்ச்சியடைந்தேன். மிக நல்ல காரியம் செய்து வருகிறீர்கள். இப்படித்தான் என் புஸ்தகத்தைப் படிக்க வேண்டும். இதுதான் என்னுடைய ஆசைப் பூர்த்தி.

அங்கே கூடியிருக்கும் அனைவருக்கும் முக்கியமாகக் குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் என் அன்பும் பக்தி கலந்த நன்றியும்.

படிக்கும்போது பக்கத்தில் ஆஞ்சநேயன் இருந்து மகிழ்கிறான் என்பதை உணர்ந்து படிக்கவும். அவன்தான் உங்கள் குருவும் காப்பும்.

(ஒப்பம்) இராஜகோபாலாச்சாரி

எதிரான துன்பமும் இருந்துதானே தீரும் என்று தர்க்க ரீதியில் வாதம் செய்தால் இந்தச் சித்தாந்தத்தை நிலைநாட்டுவது கஷ்டம். ஜீவன் தனது தனித் தன்மையுடனேயே, சாசுவதமான ஆனந்தத்தைப் பகவானிடமிருந்து பெறுவதுதான் முக்தி என்பது துவைத, விசிஷ்டாத்வைத சித்தாந்தங்களின் லட்சியமாகும். பக்தி மார்க்கத்தைச் சேர்ந்த எல்லா சமயப் பிரிவுகளுக்குமே இதுதான் அடிப்படை. மழைத் துளி கடலில் விழுந்து, தன் தனித் தன்மையை இழந்து கடலாகவே ஆகிவிடுவதை முக்தியாகக் கொள்கிறது அத்வைதம். பக்தி மார்க்கத்தினரோ, ஜீவன் இவ்வாறு தனது தனித் தன்மையை இழக்காமலே பகவானுடன் நிரந்தர இன்பத்தை அனுபவிப்பதுதான் முக்தி; வாழ்க்கையின் லட்சியம் இந்த இன்பத்தை அடைவதே; வாழ்க்கை முடிந்தபின் அந்த இன்பலோகத்தையே சென்று சேர வேண்டும் என்கிறார்கள். கலப்பற்ற பேரானந்தம் என்று ஒன்று இருக்க வேண்டுமானால், 'இந்த ஆனந்தத்தை நான் அனுபவிக்கிறேன்' என்று புரிந்து கொள்வதற்கு ஜீவான்மாவும் தனித்து இருக்கத்தானே வேண்டும் என்பது இவர்களது வாதம். ஆனால், 'துன்பம் என்பதின்றி இன்பம் இல்லை; இன்பம் அனுபவிக்கும்போதே இந்த இன்பம் முடிந்துவிடுமோ என்கிற அச்சமே ஒரு துன்பமாக இருக்கக் கூடும். துன்பத்தைப் பற்றிய நினைவோ, அச்சமோ இல்லாத நிலைதான் முக்தி என்றும், இன்ப துன்பங்களை இன்றி பிரம்மத்தில் ஜீவனின் தனித் தன்மையை இழப்பதுதான் அது' என்பது இதற்குத் தர்க்க ரீதியில் எதிர்வாதமாகும். 'நன்மை' என்ற ஒன்றை நாம் ஏற்கும் போதே, அதற்கு எதிரான 'தீமை' அதை அகற்றிவிடக் கூடும் என்ற ஏதுவும் இருந்தே தீரும். இதற்குப் பக்தி மார்க்கத்தினர் சொல்லும் பதில், 'பகவானிடமிருந்து பெறுகிற இன்பத்தை உலக இன்ப-துன்பங்களோடு' ஒப்பிடக் கூடாது. நம்முடைய சிற்றறிவு கொண்டு வைகுண்ட-கைலாச ஆனந்தங்களைப் பகுத்துப் பார்க்க முடியாது' என்பது. இது அவிழ்க்க முடியாத சாசுவதமான புதிர். பரம்பொருளின் மகத்தான மர்மத்துக்கு மறுபுறத்தில் சிறிய அளவு ஞானத்துடன் நாம் நிற்கிற வரையில் இந்தப் புதிரை அவிழ்ப்பது அசாத்தியம். இந்தப் புதிரை அவிழ்க்க முடியாதே என்பது தான் கடோபநிஷத்துத் தொடக்கத்தில் நசிகேதனுக்கு யமன் கூறியது. மரணத்துக்குப் பின் ஆன்மா என்ன ஆகிறது என்று யமனிடமிருந்து அறிந்து கொள்வதில் சிறுவன் நசிகேதன் பிடிவாதமாக இருந்தான். யமதர்மராஜனோ, ''உனக்கு வேறு எந்த வரம் வேண்டுமானாலும் தருகிறேன். ஆனால் ஜனன மரண மர்மத்தைப் பற்றி மட்டும் என்னைக் கேட்காதே'' என்று கெஞ்சாத குறையாகக் கேட்டுக் கொண்டான்.

இதை வர்ணிக்கும் உபநிஷதப் பகுதி வருமாறு :

நசிகேதன் யமனிடம் கூறுகிறான்: இறப்புக்குப்பின் ஆன்மா தனித் தன்மையுடன் வாழ்கிறது என்று சிலர் வாதிக்கின்றனர்.

முன்னுரை

காதல் என்பதைப் பக தர்மத்தோடு குழப்பிக் கொள்வது தவறு என்பதை அனைவரும் அறிவார்கள். ஆனால் அதை அநேகமாக ஆண் பெண் இரு பாலாருக்குள் ஏற்படும் உணர்ச்சி வேகத்துக்கு மட்டுமே உரிய சொல் என்று வைத்துக்கொள்வதும் தவறாகும்.

எரியும் நெருப்பு நிலையை அடைந்த அன்புக்குப் பெயர் காதல். அது இன்பம் தருகிறதா அல்லது வருத்துகிறதா என்றுகூடச் சொல்ல முடியாத ஓர் உணர்ச்சியின் உச்ச நிலை. இந்தக் காதல், தாய்க்கும் மகனுக்கும் அல்லது இரு நண்பர்களுக்குள்ளும் தோன்றும். சாதாரணமாகத் தோன்றுது. சிலர்தான் அதைக் காண்பார்கள். பிரேக்க முனிவர் ஸோக்ரதருடைய பேச்சில் காதலைப் பற்றி அடிக்கடி சொல்லியிருப்பதைப் பார்க்கலாம். அவரும்கூடக் காதலை ஆண் பெண் இரு பாலாருக்குள் மட்டும் நிறுத்தவில்லை; நட்பிலும் காதலைக் கண்டிருக்கிறார்.

பிரிந்து நிற்கும் இரண்டு தேகங்களுள் ஆடும் இரண்டு உயிர்கள், ஒன்றாகப் போக விரும்பும் நிலை காதல். ரசாயனத்தில் காதலின் வேகத்தைக் காணலாம். இரண்டு பொருள்கள் கூடிக் கலந்து ஒன்றாகப் போக நெருங்கும் சமயம், ரசாயன வேகம் ஏற்படுகிறது. விறகும் காற்றும் ஒன்றுகூடும்போது நெருப்புக் கிளம்புகிறது. அதுவும் ஒரு காதல் வடிவம்தான். ஏன்? அதுவே காதலின் ஆதர்ச வடிவம் என்றும் சொல்லலாம்.


பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தையும் இணைத்து நிறுத்தும் வேகத்துக்குப் பௌதிக விஞ்ஞானிகள் gravitation என்று பெயர் வைத்திருக்கிறார்கள். ஆகாய வெளியில் சிதறிக் கிடக்கும் பல்கோடி ஜோதி கோளங்களும் தத்தம் நிலையில் நிற்பது இந்த வேகத்தின் சக்தியினால்தான். சந்திரன் பூமியைச் சுற்றிச் சுற்றிக் காதலிப்பதும், சூரியன் பூமியைத் தினமும் சுற்றிச் சுற்றி வருவதும், நாமும் பூமியின் மேல் நின்று ஆதித்தனைச் சுற்றிச் சுற்றி வருவதும், நாம் சுற்றுகிறோமா, அவன் சுற்றுகிறானா என்று நிர்ணயிக்க முடியாமல் சுற்றுவதும், எல்லாம் காதல் வேகம்தான். இரண்டு உயிர்களுக்குள் ஏற்படும் ஆகர்ஷண சக்தியும், விசுவ ஆகர்ஷண சக்தியின் ஓர் அவதாரமேயாகும்.

கருணையும் அனுதாபமும் ஒரு நிலையில் காதலேயாகும். நம்முடைய கண்ணுக்குக் காணப்படாத அத்வைதம் காதலாகத் தோற்றம் காட்டுகிறது. காட்டி ஆனந்தம் அளிக்கிறது.

மக்களுக்கு நூல் எழுதுகிறவர்கள், எல்லாவிதக் காதலைப் பற்றியும் எழுதி மறைந்து கிடக்கும் அத்வைதத்தை விளக்குவார்களாக.

தொடர்கதைகளை எனக்கு இப்போது படிக்க முடிகிறதில்லை. நான் 'ரமித்ரிஸ்க'ளைப் படிக்கவில்லை. ஏன் படிக்க வேண்டும்? எழுதிய ஆசிரியரைப் (சோமு) படித்துவிட்டேன். அவருக்கும் நூலுக்கும் என் ஆசிகள். சக்கரவர்த்திராஜகோபாலாச்சாரியார்.





கம்பத்தைப் பிடித்துக்கொண்டு பையன் கிறு கிறு வென்று சுழன்று சுற்றுகிறான். எத்தனை வேகமாகச் சுழன்றாலும் கம்பத்தைப் பத்திரமாகப் பிடித்துக் கொண்டு சுழல்கிறான்.

அதைப்போல் பகவானைப் பத்திரமாகப் பிடித்துக்கொண்டு உலக வாழ்க்கையில் சுழலுங்கள்.

'ராமகிருஷ்ண உபநிஷதத்'தில் ராஜாஜி

இல்லாதில்லை என்று வேறு சிலர் வாதிக்கின்றனர். இவ்விஷயத்தில் உண்மை என்ன என்று உன் உபதேசத்தால் அறியக் கடவேன். இதுவே உன்னிடம் நான் கோரும் வரம்.

இதற்கு யமன் கூறும் பதில்:

देवैरत्रापि विचिकित्सितं पुरा न हि
सुविज्ञेयमणुरेष धर्मः ।
अन्यं वरं नचिकेतो वृणीष्व
मा मोपरोत्सीरति मा सृजैनम् ॥

येयं प्रेते विचिकित्सा मनुष्येऽस्तीत्येके
नायमस्तीति चैके ।
एतद्विद्यामनुशिष्टस्त्वयाऽहं
वराणामेष वरस्तृतीयः ॥

இவ்விஷயம் தேவர்களுக்கும் நிச்சயமாகத் தெரியாது. அது அறிதற்கு அப்பாற்பட்டது. அவ்வளவு நுட்பமானது. நசிகேதனே, இந்த வரத்தைப் பிடிவாதமாகக் கேளாதே. வேறு வரம் ஏதேனும் கேட்டுப் பெற்றுக் கொள்வாயாக !

கடோபநிஷதம் கூறும் இந்தக் கதையினுள் ஆழ்ந்த பொருள் பொதிந்துள்ளது.

முக்தியில் ஜீவான்மா தன்னை முற்றிலும் இழந்து பரம்பொருளில் கரைந்துவிட வேண்டும் என்று போதிக்கின்ற அத்வைதம் உலக மதங்கள் அனைத்திலும் தனித்து நிற்கிறது எனலாம். 'முக்தி' என்பது விடுபடுவது. எதிலிருந்து விடுபடுவது எனில், அஞ்ஞான மாயையிலிருந்து விடுபட வேண்டும். ஜீவன் தனக்குப் பரம்பொருளினின்று வேறுபட்ட தனித்தன்மை இருப்பதாக எண்ணுவதே அஞ்ஞான மாயை. ஞான மார்க்கத்தின் மூலம் இந்த மாயையை அகற்றி விடவேண்டும் என்று விதிக்கிறார் சங்கராசாரியர். ஞான மார்க்கம் என்பது அறிவு வாதமோ, படிப்பறிவோ அல்ல. வாதம் செய்தும், படிப்பறிவில் தேர்ச்சி பெற்றும் மாயையிலிருந்து விடுபட இயலாது என உபநிஷத்துக்களும் கீதையும் சங்கரரும் தெளிவாக உபதேசிப்பதை ஒருகாலும் மறப்பதற்கில்லை. ஆசைகளைக் கட்டுப்படுத்தி, சிந்தனையிலும், செயலிலும் தூய்மையாக ஒழுகினாலே மாயையிலிருந்து விடுதலை பெற முடியும் என்று ரிஷிகளும் கீதாசாரியனும் சங்கரரும் தீர்மானமாக உபதேசித்துள்ளனர். ஜீவனின் தனித் தன்மையும் உலகமும் மாயை என்று அத்வைதம் கூறியபோதிலும், உலகிலுள்ள வரையில் ஜீவன் கடைப்பிடிக்க வேண்டிய தர்ம நெறிகளை அத்வைதமும் மற்ற சம்பிரதாயங்களைப் போலவே கண்டிப்பாக வலியுறுத்துகிறது. கெட்ட எண்ணங்களும், தீய செயல்களும் ஞான மார்க்கத்தில் முன்னேறுவதற்குத் தடையாகும் என்கிறது அத்வைத சாஸ்திரம்.

அறிஞர் உலகில், கருத்துச் சர்ச்சையில், அத்வைதமானது த்வைத — விசிஷ்டாத்வைத சித்தாந்தங்களை வெற்றி கொண்டிருக்கக் கூடும். ஆயினும் இந்தியாவின் பயபக்தி கொண்ட மக்களிடையே பக்தி வழிபாட்டு முறைதான் மிகுந்த சக்தி வாய்ந்ததாக உள்ளது. பகவான் என்றும், அவனை வழிபடும் பக்தன் என்றும், இரு வியக்திகளை வைத்து எழும்பியுள்ள பக்தி மார்க்கத்தில் ஜீவான்மா என்பது நிரந்தரமாகத் தனித்தன்மையுடன் இருப்பதும் உட்கிடையாகும். இன்று பக்தி மார்க்கக்காரர், ஞான மார்க்கக்காரர் இருவருமே வாதச் சண்டையை விரும்பவில்லை. அவரவரும் அமைதியாகத் தங்கள் வழியில் செல்கிறார்கள். இதில் பக்தி முறையில் எளிதில் சரண்புகுபவர்களே அதிகம். கிறிஸ்துவ மதம், இஸ்லாம், பார்ஸி மதம், யூதர் மதம் ஆகிய யாவுமே ஜீவான்மா தனித் தன்மை இழக்காமல் முக்தி பெறுவதைத்தான் உபதேசிக்கின்றன. எனவே அவையும் இந்த அடிப்படையில் த்வைத மதங்கள் என்றே சொல்லலாம். அவை அனைத்தும் கூறும் வழிபாட்டு முறையும் பக்தியேயாகும்.

பம்பாயிலுள்ள கே. ஆர். காமா ஓரியண்டல் இன்ஸ்டிட்யூட்டின் பொன்விழா மலரில் வெளியான கட்டுரையின் தமிழ் வடிவம்.



கடந்த 21–11–71 இதழ் கல்கி வட்ட மேஜையில் வெளியான அன்பர் தஞ்சாவூர் கோ. ஆரூரனின் தகவல் சரியல்ல. எப்படி யென்றால், சட்டசபை உறுப்பினருக்கு விபூதி, குங்குமம் கொடுத்த குருக்கள் நான்தான். உறுப்பினர் அவர்கள் விபூதியை என் முகத்தில் எறியவோ, குங்குமத்தைக் கசக்கிப் போடவோ இல்லை. பக்கத்தில் இருந்த நண்பரிடம் அவற்றைக் கொடுத்து விட்டார். அவர் நாத்திகர் தான். ஒப்புக் கொள்கிறேன். அதற்கென்று வீண் பழி சுமத்துவானேன்?

திருமருகல்,
23–11–71 — உ. நாகராஜன்

இவ்வாண்டு கல்கி தீபாவளி மலரில் திருக்கோகர்ண ஸ்தல வரலாறு படக் கதையாக வெளியிடப்பட்டிருப்பதைப் பார்த்தேன். மிக அருமையாக இருந்தது. எங்கள் ஊரைச் சேர்ந்த சிவ. பிருந்தாதேவி அவர்கள் பக்தி வளர்க்கும் பணியில் ஈடுபட்டுச் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி வருகிறார். அம்மையார் 'கோகர்ணப் பஞ்சகம்' என்ற சிறு நூலையும் எழுதியுள்ளார். அதில் ஏற்கெனவே இந்த வரலாற்றினைக் கவிதை வடிவில் படித்து மகிழ்ந்தவள் நான். தற்போது அருமையான இக்கதையைக் குழந்தைகள் ரசித்துணரும்படி வண்ணப் படக் கதையாக அளித்தமைக்கு நன்றி.

புதுக்கோட்டை,
25–11–71 — அங்கயற்கண்ணி

ஸ்ரீமதி அங்கயற்கண்ணி குறிப்பிடும் சிவ. பிருந்தா தேவி அவர்களின் கவிதை நூலினை அடிப்படையாகக் கொண்டுதான் தீபாவளி மலருக்கு வண்ணப் படக் கதை தயாரிக்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். —ஆசிரியர்

★ உதகமண்டலத்தில் தினசரி ஆயிரம் லிட்டர் பால் சாக்கடையில் கொட்டப்படுகிறதாம். (தினமணி, நவ. 22, 1971) உதக மண்டலத்தில் உள்ளூர் மார்க்கெட்டில் விற்க முடியாததால் டயரி பாலிலிருக்கும் வெண்ணெயை எடுத்துவிட்டு மீதியைச் சாக்கடையில் கொட்டி விடுகிறார்களாம்! ஏன் அவ்வாறு கொட்ட வேண்டும்? ஏழை, எளிய மக்களுக்கு அல்லது சிறுவர்களுக்கு அந்த மீதிப் பாலை இலவசமாக விநியோகித்திருக்க வேண்டியதுதானே? ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் கண்டிருக்கலாமே! நம் அதிகாரிகளுக்குப் பாலை வீணாகக் கொட்டத் தெரிகிறதே தவிர, சரியான முறையில் அதை விநியோகிக்கத் தெரியவில்லையே?

கரூர்,
23–11–71 — எஸ். ஜெயராமன்

★ இக்குறிப்பிட்ட கடிதம் ரூ. 15/- பரிசு பெறுகிறது.

சென்ற 1–10–71 அன்று பகல் 1–30 மணி அளவில் என் தங்கையைச் சென்னை எழும்பூர் பிரசவ ஆஸ்பத்திரியில் பிரசவத்துக்காக 'அட்மிட்' செய்தோம். அங்கு பக்கத்தில் ஒருவரும் இருக்கத் தேவையில்லை, இருக்கக் கூடாது என்று சொல்லிவிட்டார்கள்.

அன்று இரவு 9-40 மணியளவில் நான் டெலிபோன் செய்து கேட்டதில் பெயர், கணவர் பெயர், எத்தனையாவது பிரசவம் முதலிய விவரங்கள் யாவையும் கேட்டுக் கொண்டு, சிறிது நேரம் கழித்து, 'இன்னும் பிரசவம் ஆகவில்லை' என்று லேபர் வார்டில் டெலிபோன் எடுத்தவர் கூறினார்.

மறு நாள் காலை 5.25 மணிக்கு மறுபடியும் டெலிபோன் செய்து கேட்டதற்கு முந்திய இரவு போலவே பெயர், கணவர் பெயர் முதலியன கேட்டுக் கொண்டு 'இன்னும் பிரசவம் ஆகவில்லை' என்றும், வலி நின்று விட்டது, காலை ஏழு மணிக்கு வந்து வீட்டுக்கு அழைத்துச் செல்லலாம்' என்றும் கூறினார்கள். 2–10–71 காலை ஏழு மணிக்கு நேரில் சென்று லேபர் வார்டில் போய்ப் பார்த்த போது அப்பொழுதுதான் வெளியில் உள்ள அறிவிப்புப் பலகையில் முதல் நாள் மாலையிலிருந்து பிரசவித்த தாய்மார்களின் பெயர்கள், பிறந்த குழந்தை ஆணா பெண்ணா முதலிய விவரங்களை எழுதுவதற்காகக் கையில் பட்டியல் வைத்துக் கொண்டு ஒருவர் இருந்தார். அதைப் பார்த்ததும் நாங்கள் அடைந்த அதிர்ச்சிக்கு அளவேயில்லை. காரணம் என் தங்கை முதல் நாளிரவு எட்டு மணிக்கே ஆண் குழந்தை ஒன்றை ஈன்றிருந்தாள் என்ற விவரம் தெரிந்தது.

முதல் நாள் இரவும் மறு நாள் காலையும் டெலிபோனில் சரியான தகவல் தராமல் ஏதோ ஒரு பதிலைக் கூறியிருக்கிறார்கள்.

சென்னை — 61
17–11–71 — ஜி. எஸ். வாமன்


ஆசிரியை ஆவதற்கு முக்கிய தகுதி என்னவாக இருக்கும் என்று நினைக்கிறீர்கள்? 'செகண்டரி கிரேடு' ஆசிரியைப் பயிற்சிக்கான நேர்முகத் தேர்வு அதிகாரிகள், நடனம் ஆடத் தெரிந்திருப்பதுதான் முக்கிய தகுதி என நினைக்கிறார்கள் போலும்!

சமீபத்தில் அப்படி ஒரு பேட்டிக்குச் சென்றிருந்த என் சகோதரியின் பெண்ணையும் நடனம் ஆடச் சொன்னார்களாம். பாவம்! அவளுக்கு இரட்டை நாடி உடம்பு. இருந்தும் அவள் சிரமப்பட்டு 'ஆடி'யதை அவர்கள் மிகவும் ரசித்தார்களாம். அவளுக்கு செலக்ஷனும் கிடைத்து விட்டது!

பள்ளியில் ஆசிரியை ஆவதற்கும், நடனம் ஆடத் தெரிவதற்கும் என்ன சம்பந்தமோ? தேர்வு நடத்துகிறார்களா? துக்ளக் தர்பார் நடத்துகிறார்களா?

மதுரை—9
12–11–71 — கே. வேதாந்தராமன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam


ANNOUNCING!
The sale of
BLENDED AND FANCY FABRICS
made by mixing cotton and
GRASIM STAPLE FIBRE
from to-day at
AKASH-DEEP, SANDHURST BRIDGE, CHOWPATTY
• Attractive Fancy Dress material for ladies
• Immaculate Bush Shirtings for gents
• Decorative Tapestry and Curtain materials
• Priced cheaper than cotton fabrics

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



அளியுங்கள் ஷார்க்கோஃபெர்ரால்

இரண்டும் அதுவே! வைட்டமின்களும், உலோகத் தாதுக்களும், மால்ட்டும் சேர்ந்த சக்திசெறிந்த கலவை.

வளர்ச்சி, ஆரோக்கியம் இரண்டையும் அளிக்கச் சிறந்தது ஷார்க்கோ-ஃபெர்ரால், ஏனெனில் அது டானிக்காகவும், ஊட்டப்பொருளாகவும் விளங்குகிறது. வேறெந்த டானிக்கையும், ஊட்டப்பொருளையும் விட, கரண்டிக்குக் கரண்டி அதிக அளவிலே வைட்டமின் A, B, மற்றும் மூலாதார B காம்ப்ளெக்ஸ் சத்துக்களை வழங்குகிறது. இரும்புச் சத்து, கேல்ஷியம் ஆகிய முக்கியமான உலோகத் தாதுக்களையும் அளிக்கிறது. எனவே, ஏறக்குறைய 40 ஆண்டுகளாக டாக்டர்கள் ஷார்க்கோ-ஃபெர்ரால் குறித்துக் கொடுப்பதில் வியப்பில்லை. தவிர ஜலதோஷம், மற்றும் இதர அன்றாடத் தொற்று நோய்களையும தடுத்துக் காக்கும்.

1 கிலோ மற்றும் 450 கிராம் ஜாடிகளில் வருகிறது.

ஷார்க்கோ-ஃபெர்ரால் நம்பிக்கையின் சிகரமாய் இந்தியாவிலேயே உச்ச விற்பனை உடைய, மால்ட் அடிப்படை கொண்ட டானிக்!

Alembic

அலெம்பிக் கெமிக்கல் வொர்க்ஸ் கோ. லிட்.

தரமான மருந்துகளிலே நம்பிக்கைக்குப் பாத்திரமான பெயர்.

everest/206a/ACW TM